விலை ரூபா 20.00


பொழிந்த தங்க மழை
பக்கம் 09


200 பேர் பாதிப்பு
பக்கம் 11


சுயதொழில் கடன்
பக்கம் 14


ஆட்டமிழப்பு சரியானதே
பக்கம் 19

www.onlineuthayan.com

பக்கங்கள்: 32

# உதயன்

சுடர் 27
கதிர் 105

வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 27 சனிக்கிழமை (10/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# ஜெனிவா பிரேரணைக்கு ஆதரவாக களத்தில் ஜிம்மி கார்ட்டர்

## உறுப்பு நாடுகளுடன் முக்கிய பேச்சு



ஜெனிவா, மார்ச் 10

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரவுள்ள பிரேரணையை நிறைவேற்றிக் கொள்வதற்காகக் கங்கணம் கட்டிச் செயற்படும் அமெரிக்கா, ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெறும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்காக முன்னாள் ஜனாதிபதியும், மனித உரிமைகள் தொடர்பிலான சமூக ஆர்வலருமான ஜிம்மி கார்ட்டரைக் களமிறக்கியுள்ளது அமெரிக்கா.

இதற்கமைய தனது தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி அமெரிக்காவின் பிரேரணையை ஜெனிவாவில் நிறைவேற்ற ஜிம்மி கார்ட்டர் முழுவீச்சில் செயற்பட்டு வருகிறார் என இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

"எமது முன்னாள் ஜனாதிபதி கார்ட்டர் ஆபிரிக்க நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகளின் தலைவர்களுடன் நெருங்கிய நட்புறவைக் கொண்டவராவார். தனது செல்வாக்கைப் பயன்படுத்தியதால் இதுவரை பல நாடுகள் எமது பிரேரணையை ஆதரிப்பதாக உறுதியளித்துள்ளன. எமது 23

## மேற்குலகம் முழு ஆதரவு

### மௌனம் காத்தது இந்தியா

ஜெனிவா, மார்ச் 10

இலங்கைக்கு எதிரான தனது பிரேரணையை ஐ.நா மனித உரிமைச் சபையில் அமெரிக்கா முன்வைத்திருந்த நிலையில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை இது தொடர்பிலான உப மாநாடொன்றை அது நடத்தியது. இந்த உப மாநாட்டில் 25 நாடுகள் பங்கேற்றுள்ளன. இதில் கலந்துகொண்ட மேற்கு நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தன. இந்தியா ஒன்றும் சொல்லாமல் மௌனம் காத்தது.

மனித உரிமை அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், இராஜதந்திரிகள் மற்றும் தமிழர் அமைப்புப் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். இலங்கை அரசின் சார்பில் முன்னாள் சட்டமா அதிபரும் ஜனாதிபதியின் சட்ட ஆலோசகருமான மொகான் 23

## அமெரிக்க அதிகாரிகள் அவசரமாக டில்லி விரைவு

### இலங்கை விடயம் பற்றிப் பேசுவர்

புதுடில்லி, மார்ச் 10

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக, அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று அவசரமாகப் புதுடில்லி சென்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. மனிதஉரிமைகள் சபையில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ள அமெரிக்கா, அதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இதுபற்றி இந்திய அரசுடன் பேச்சு 23

## இளம் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

### முல்லைத்தீவில் பயங்கரம்

முல்லைத்தீவு, மார்ச்10

முல்லைத்தீவு சுதந்திரபுரம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மிகக் கோரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி மகேந்திரன் (வயது -32) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 23

## 98 வீதமானோர் மீள்குடியமர்வு ஐ.நாவில் கூறியது இலங்கை

ஜெனிவா, மார்ச் 10

ஐ.நா. மனித உரிமைச் சபையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பிலான விவாதத்தின்போது கருத்துரைத்த இலங்கைப் பிரதிநிதி, 2009ஆம் ஆண்டில் போரின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களில் 98 வீதமானோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

போரின் விளைவாக 2,90 000 இடம்பெயர்ந்த மக்களை இலங்கை அரசு எதிர்கொள்ள 23

## நுணாவிலில் 3 படையினர் சூடு வாங்கிச் சாவு

### அதிகாலைவேளை சம்பவம்; மூன்றாம் தரப்பு காரணமல்ல என்கிறது படைத்தரப்பு

சாவகச்சேரி, மார்ச். 10.

சாவகச்சேரி நுணாவில் மேற்குப் பகுதியில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மூன்று படையினரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நுணாவில் மேற்கு கண்ணகை ஆலயம் மற்றும் முருகமூர்த்தி ஆலயம் ஆகிய இடங்களில் இருந்தே இந்த மூன்று சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சிலாபம் தலாவத்தவைச் சேர்ந்த எம்.எஸ்.சி.பெர்னாண்டோ (வயது-29), உசாப்பிட்டிய, தங்காலையைச் சேர்ந்த கே.ஐ.டீ. ஹப்புக்ஹெட்டுவா (வயது-20), தியகண்ணவ, ஹல்ஹெற்றிபெலவைச் சேர்ந்த ஆர்.எம்.ஆர்.ரட்ணநாயக்க (வயது-24) ஆகியோரது சடலங்களே சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டன.

கைதடிப் பாலத்திலிருந்து ரோந்து சென்ற சிப்பாய்களின் சடலங்களே இவை எனத் தெரிவிக்கப்பட்டன.

முருகன் கோயிலடியில் இரண்டு சடலங்களும், அதிலிருந்து 200 மீற்றருக்கு அப்பால் உள்ள கண்ணகை அம்மன் கோயிலுக்கு அருகில் மற்றொரு சடலமும் காணப்பட்டன.

லான்ஸ் கோப்ரல் ஆர்.எம்.ஆர்.ரட்ணநாயக்காவின் சடலம் அம்மன் கோயிலடியிலும், எம்.ஐ.டி.ஹப்புக்ஹெட்டுவ, எம்.எஸ்.ரி.பெர்னாண்டோ ஆகியோரின் சடலங்கள் முருகன் கோயிலடியிலும் காணப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸார், சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் சு.கந்தசாமி முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்தனர். 23

### கெஹலியவுக்கும் துமிந்தவுக்கும் 3 மாதம் விடுமுறை

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கும் மூன்று மாதகால விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இவர்களது உடல் நிலையைக் கருத்திற்கொண்டு இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வாவினால் இதற்கான ஆலோசனை ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தது. (த)

### ஊசி ஏற்றப்பட்ட பெண் மரணம்

குடும்ப கட்டுப்பாட்டு ஊசி ஏற்றிய 28 வயதுடைய தாய் ஒருவர் ஊசி ஏற்றி சில நிமிடங்களிலேயே உயிரிழந்த சம்பவம் ஒன்று கண்டி, ரம்புக்கேவெல என்னுமிடத்தில் இடம்பெற்றது. இனோகா ரூபசிங்க என்ற 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான இப்பெண் நேற்று முன்தினம் வியாழக்கிழமை, ரம்புக்கேவெல சுகாதார நிலையத்திற்கு சென்று குடும்ப கட்டுப்பாட்டு ஊசி ஏற்றிய சில நிமிடங்களில் மயக்கமடைந்துள்ளார். எனினும் வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு முன் அவர் உயிரிழந்துள்ளார்.

### லஞ்சம் பெற்ற ஏ.எஸ்.பி. கைது

மஹரகம, பெண் ஒருவரிடம் 10 லட்சம் ரூபா பணத்தை லஞ்சமாகப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் நுகேகொடை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். 12 லட்சம் ரூபா லஞ்சம் கோரி அதில் 10 லட்சம் ரூபாவை ஆலயமொன்றில் வைத்துப் பெற்றபோது அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள நலன்புரி நிலைய கட்டடமொன்றை பலவந்தமாக தக்கவைத்துள்ளவர்களை அங்கிருந்து அகற்றுவதற்காகவே லஞ்சம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

### சமரசிங்க மீண்டும் ஜெனிவா பயணம்

ஜெனிவாவில் இடம்பெறும் ஐக்கியநாடுகள் சபையின் 19 ஆவது மனிதஉரிமைகள் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் மஹிந்த சமரசிங்க மீண்டும் அடுத்தவாரம் ஜெனிவா நோக்கிப் பயணமாகவுள்ளார். தற்போது ஜப்பானுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர் அடுத்த சனிக்கிழமையளவில் ஜெனிவா நோக்கி பயணமாவார் என தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை முன்வைத்துள்ளது.

SINGER கிச்சன் தவாரி
சிங்கரில் சமையல் உபகரணங்கள் கொள்வனவு செய்யும் உங்களுக்கு
இலவசமாக
3 தினங்கள் மலேசியாவில் தங்கியிருப்பதற்கும் சென்று வருவதற்கும்
5 விமானச் சீட்டுக்கள் அல்லது 42" LCD TV கள் வீதம்
வெற்றிகொள்ளுங்கள்
ஒவ்வொரு ரூபா.2500 கொள்வனவிற்கும் சீட்டிழுப்பிற்கான கூப்பன் ஒன்று
மாதம் 100 பரிசுகள் வீதம் 300 பரிசுகள் மே15 வரை மட்டுமே. (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)




ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
சங்கானை 077 2208232
சுன்னாகம். 021 224 0555
நெல்லியடி. 021 226 4937
கிளிநொச்சி 021 567 5677
மானிப்பாய். 021 225 5343
சாவகச்சேரி 021 227 0197
சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

# ஜெனிவாப் பிரேரணைக்கு ஆதரவு தருவோம் உடனடியாக இந்தியா அறிவிக்க வேண்டும்

## மத்திய அரசைத் தூண்டுகிறார் கருணாநிதி

சென்னை, மார்ச் 10

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்களைக் கண்டித்து ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்துள்ள பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கப் போவதாக இனியும் காலம் தாழ்த்தாது இந்தியா அறிவிக்க வேண்டும்.

- இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங்கிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார் தி.மு.க. தலைவரும், முன்னாள் முதல்வருமான மு.கருணாநிதி.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

2009ஆம் ஆண்டு இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற உச்சக்கட்டப் போரின்போது மனித உரிமைகளை மீறும் வகையில் ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை இராணுவம் போர்க்குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது பற்றி விசாரித்து இலங்கை அரசின் மீது உரிய கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர்ந்து பல்வேறு நாடுகள் வற்புறுத்தி வருகின்றன.



இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்களுக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் வாயிலாக அமைக்கப்பட்ட இந்தோனேசிய அரசின் தலைமை சட்டநிபுணர் தலைமையிலான விசாரணைக்குழு, இலங்கைப் படையினர் ஈழத் தமிழர்கள் மீது நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலை உறுதி செய்திருக்கிறது.

ஏப்ரல் 25ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட இந்த விசாரணைக் குழுவின் அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலில் நாற்பதாயிரத்திற்கும் அதிகமான அப்பாவித் தமிழர்களை இலங்கை இராணுவம் சுட்டுக் கொன்றுவிட்டது எனவும், போர்க்கைதிகளை இலங்கை இராணுவம் கொடூரமாகக் கொன்றுவிட்டது எனவும், வீராங்கனைகள் பலாத்காரம் செய்யப்பட்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

> 2009ஆம் ஆண்டு இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற உச்சக்கட்டப் போரின்போது மனித உரிமைகளை மீறும் வகையில் ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை இராணுவம் போர்க்குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது பற்றி விசாரித்து இலங்கை அரசின் மீது உரிய கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்

இந்தக் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும், அதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளிலும் இந்தியஅரசு உடனடியாக ஈடுபட வேண்டுமென்றும் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த உயர் நிலை செயல் திட்டக் குழுவின் கூட்டத்திலேயே முதல் தீர்மானமாக வலியுறுத்தப்பட்டது.

மேலும், இந்தக் கருத்தை கடந்த முதலாம் திகதி நான் வெளியிட்ட அறிக்கையிலும் மத்திய அரசுக்கு வலியுறுத்தியுள்ளேன். ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறும் போது எக்காரணம் கொண்டும் இந்திய அரசு இலங்கை அரசை ஆதரித்திடக் கூடாது என்று வலியுறுத்தினேன்.

மேலும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலுவும், பிரதமரை நேரில் சந்தித்து கழகத்தின் நிலைப்பாட்டையும், உலகளாவிய தமிழ் மக்களின் உணர்வுகளையும் எடுத்துரைத்தார்.

உடனடியாக இலங்கையில் போர் நிறுத்தம் செய்து புத்தர் உலவிய பூமியில் அமைதிப் பூ மலர்ந்திட ஆவன செய்திடுக என்று மத்திய அரசுக்கு உணர்வு பூர்வமாக வேண்டுகோள் விடுத்தோம்.

இந்தப் பிரச்சினை குறித்து தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டினையே மேற்கொண்டு கருத்துத் தெரிவித்திருக்கின்றன.

**தொடர்ந்து வழியும் கண்ணீர்**

இலங்கையில் இறுதிப் போரின் போது எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகளின் தொகுப்பு ஒன்றை நான் பார்க்க நேரிட்டபோது, என் கண்களில் வழிந்த கண்ணீர் இன்றும் நின்றபாடில்லை. மத்திய அரசில் இருப்போர் அந்தக் காட்சிகளை ஒரு முறை பார்த்தாலே தமிழக மக்கள் சார்பில் வைக்கப்படுகின்ற இந்தக் கோரிக்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

அமெரிக்க நாட்டின் சார்பில் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையின் முன்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தீர்மானத்தில் சட்டத்துக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் படுகொலைகள் மற்றும் ஏராளமானோர் காணாமல் போனதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

சர்வதேச சட்டவிதிகள் தீவிரமாக மீறப்பட்டது குறித்து இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக்குழு போதுமான அளவு கவனம் செலுத்தவில்லை என்பதையும் மனத்தில் கொள்ள வேண்டும். அந்தக் குழு எடுத்துரைத்துள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஆலோசனைகளையும், தொழில் நுட்ப உதவிகளையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வழங்க வேண்டும். அதை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்டுள்ள இந்தப் பிரேரணையை - இலங்கை அரசு தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட கொடுமையானதும் கடுமையானதுமான போர்க்குற்றங்கள் அனைத்தையும் இந்திய அரசு நினைவிலே கொண்டு, இனியும் காலம் தாழ்த்தாது, இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொடுத்துள்ள பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கப் போவதாக அறிவிக்க வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.- என்றுள்ளது.

(ஒ-சி)

# லொறிச் சில்லில் நசியுண்டு இளைஞர் பரிதாபச் சாவு

### கிளிநொச்சியில் ஏ-9 வீதியில் சம்பவம்

கிளிநொச்சி, மார்ச் 10

கிளிநொச்சி ஏ-9 வீதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் முரசுமோட்டையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் கிளிநொச்சி ஏ-9 வீதியின் கந்தசுவாமி கோயிலுக்கும் கரடிப்போக்குச் சந்திக்கும் இடையிலுள்ள கொமர்ஷல் வங்கிக்கு முன்னால் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த லொறி ஒன்றில் நசியுண்டு இந்த இளைஞன் மரணமானார்.

ஏ-9 வீதியின் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பகுதியில் இந்த இளைஞன் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த லொறியும் விலகிச் செல்ல முற்பட்ட போது இந்த விபத்துச் சம்பவம் நிகழ்ந்தது.

இதன்போது இளைஞன் லொறிச் சில்லில் நசியுண்டு அந்த இடத்திலேயே மரணமானார்.


முரசுமோட்டை 2ஆம் யுனிற் என்ற முகவரியைச் சேர்ந்த பத்மசிங்கம் லதீபன் (வயது 22) என்ற இளைஞரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவராவார். விபத்துத் தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

> இளைஞரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

இளைஞரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(த-6-426)

## விடமாட்டேன்... நான் தான் பாருங்கோ முதலிடத்தில்




நன்றி - 'லங்காதீப'

### வரணியில் இறந்த சிறுமி தொடர்ந்து துஸ்பிரயோகத்துக்கு உள்ளானார்

# பெண்கள் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை வடக்கில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

வரணி இடைக்குறிச்சியில் தற்கொலை செய்தார் என்று கூறப்படும் சிறுமி கடந்த மூன்று வருடங்களாக சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

வன்னியில் நடந்த இறுதிப் போரில் சிறுமியின் தந்தை இறந்து விட்டார். வறுமை காரணமாக தாயார் சிறுமியை ஹற்றனில் கிறிஸ்தவ மதகுரு இயக்கி வந்த சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் சேர்த்தார். மூன்று வருடங்களுக்கு முன்னர் அந்த இல்லத்தில் சிறுமியைச் சேர்க்கும் போது அவருக்கு வயது 15 என்று அவரது தாயார் தெரிவித்தார்.

ஹற்றன் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த போது சிறுமி பாலியல் ரீதியாகத் துஸ்பிரயோகம் செய்யப்பட்டதால் கருத்தரித்தார். பின்னர் அவருக்கு கருக்கலைப்புச் செய்யப்பட்டது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சிறுமி மீதான துஸ்பிரயோகம் தெரிய வந்ததை அடுத்து மதகுரு நடத்தி வந்த சிறுவர் இல்லம் அதிகாரிகளால் மூடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னரே அந்த மதகுரு இடைக்குறிச்சியில் தனது இல்லத்தை ஆரம்பித்துள்ளார்.

தனது பெண் துஸ்பிரயோகம் செய்யப்பட்டதற்கும் இறந்து போனதற்கும் மதகுருவே பொறுப்புக்கூற வேண்டும் என்று சிறுமியின் தாயார் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

வரணியில் தங்கியிருந்த போது திருமணமான ஆண் ஒருவருக்கும் சிறுமிக்கும் இடையில் காதல் ஏற்பட்டது என்றும் அது கைகூடாத நிலையிலேயே அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும் கூறப்படுகிறது.

சிறுமியை சகபெண்ணாக மதிக்காமல் காமப் பொருளாகப் பார்க்கப்பட்டமையும் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்தமையும் உரிய அன்பு கிடைக்காமையுமே சிறுமியின் இந்த துயர முடிவுக்குக் காரணம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, போரின் பின்னர் வடக்கில் சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துச் செல்வதாகவும், குறிப்பாக சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் கூடியிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வருடத்தில் இது வரையிலும் சிறுமிகள் மீதான 24 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக யாழ் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த சட்ட வைத்திய அதிகாரி மருத்துவர் சின்னையா சிவரூபன் தெரிவித்தார்.

இதேகாலப் பகுதியில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் தொடர்பாக 32 சம்பவங்கள் பற்றி முறையிடப்பட்டிருக்கின்றது.

2010 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 102 ஆக இருந்து. 2011ஆம் ஆண்டு இது 182 ஆக அதிகரித்திருக்கின்றது.

பாலியல் வன்புணர்வின் பின்னர் சிறுமிகள் கொடூரமாகக் கொலை செய்யப்படும் சம்பவங்களும் இப்போது இடம்பெற ஆரம்பித்துள்ளதாக மருத்துவர் சிவரூபன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இத்தகைய வன்முறைப் போக்கிற்கு மக்களிடையே அருகியுள்ள விழிப்புணர்வு, சிவில் நிர்வாகத்தில் காணப்படுகின்ற மென்மைப் போக்கு, ஆளணி மற்றும் வளப்பற்றாக்குறைகள் என்பன முக்கிய காரணங்களாகக் கருதப்படுகின்றது. அத்துடன் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைக் குற்றவாளிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதும் ஒரு காரணமாகும் என மருத்துவர் சிவரூபன் குறிப்பிடுகின்றார்.

"சிறுமிகள் மீது மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகள் தொடர்பாக பரபரப்பாகத் தகவல்கள் வெளியிடப்படுகின்ற அளவு வேகத்திற்கு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை கிடைப்பதாகத் தெரியவில்லை" என்கிறார் அவர்.

இவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதில் நீண்டகாலம் எடுப்பதும் இத்தகைய குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்வதற்கு ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது.

(உ-04)

## ஒளித்துப் பிடித்து விளையாடும் விவகாரமல்ல மனித உரிமைகள்

இலங்கையில் மனித உரிமைப் பாதுகாவலர்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். ஆகையால் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும். அவர்களின் பாதுகாப்புக் குறித்து எச்சரிக்கை செய்கிறேன். மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கும் *(Human Right Defenders)* அவர்களின் குடும்பங்களுக்கு மட்டுமன்றி நண்பர்களுக்கும் கூட, ஆபத்துகள் உண்டாகலாம். அந்நாட்டின் அரச ஊடங்கள் கூட, மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு எதிரான விசமத்தனமான கருத்துரைகளை, பரப்புரைகளை மேற்கொள்வது கவலைக்கு உரியதாகும்.

இவ்வாறு சுட்டிக்காட்டி உள்ளார், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையிடுநரான, மார்கிரெட் செகக்யா. ஜெனிவாவில் இப்போது நடைபெற்றுவரும் பேரவைக் கூட்டத்தில் பேசுகையிலேயே, மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு இலங்கையில் உள்ள ஆபத்தை அவர் வெளிப்படுத்தினார், வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார்.

மனித உரிமைகள் ஊறுபடுத்தப்படுவது குறித்து இலங்கையில் இருந்து அறிக்கை அனுப்பும் பலர், எதிர்விளைவுகளுக்கு ஆளாக வேண்டி உள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர் அதிகாரிகளில் ஒருவரான செகக்யா கவலை தெரிவித்திருக்கிறார். அவர் தரும் தகவல், கவலைக்குரியது மட்டுமன்றிப் பாரதூரமானதும் ஆகும்.

இதேவேளை, இலங்கையில் இப்போதும் பொதுமக்கள் பலரும், குறிப்பாக அரசின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளைக் கண்டிப்போர் மற்றும் ஆட்சேபம் தெரிவிப்போர் காணாமற் போகச் செய்யப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியத்தினர், ஜெனிவா மாநாட்டில் பங்குபற்றும் மனித உரிமைப் பேணுகையுடன் தொடர்புள்ள குழுக்களுடன் நடத்திய கலந்துரையாடலின்போதும், இது குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதேவேளை, இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டிய விடயங்கள் குறித்து ஆராய்ந்து சிபாரிசுகளைச் செய்வதற்கு, சர்வதேசப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிடம் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில், இலங்கை அரசு பொறுப்புக் கூறுவது குறித்து சமீப காலத்தில் நிறையவே உச்சரித்து வந்த போதிலும், தனக்கு எதிராக, மனித உரிமைகள் பேரவையில் பிரேரணை கொண்டு வரப்படும் என்றதும் துடிதுடித்துப் போயிற்று. தனது முழுக் கவனத்தையும் அது விடயத்தில் செலுத்துவதால், முன்னர் தெரிவித்தவற்றில் பலவற்றைச் செய்யும் மனநிலையில், செயல்நிலையில் *(mood)* இல்லை என்றும் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமை மீறல்கள், மனித உரிமைப் பாதுகாவலர்களைப் பயமுறுத்துதல் ஆகியவற்றுக்கு இடையில், நாட்டின் நீதித்துறை, காவல்துறை ஆகிய சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் அரச அலகுகள், சுதந்திரமாக இயங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு உள்நாட்டிலும் வெளிக்கிளம்பியுள்ளது.

நீதிச்சேவைகள் ஆணைக்குழு நேரடியாகவே அரசாங்கத்தின் செல்வாக்குக்கு உட்பட்டு இயங்குகிறது. சட்டமா அதிபர் திணைக்களமோ முழுக்க முழுக்க ஜனாதிபதியின் நேரடி வழிப்படுத்தலின் கீழ் இயங்குகிறது. பொலிஸ் திணைக்களமோ முற்றுமுழுதாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்த இலட்சணத்தில், மூதூரில் பிரெஞ்சு தொண்டர் நிறுவனமான பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் ஊழியர்கள் கொலையுண்டமை மற்றும் திருமலைக் கடற்கரையில் ஐந்து தமிழ் மாணவர்கள் ஒரேயடியாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்து மீள விசாரணைகள் நடத்தப்படுவது அவசியம் என்று நல்லிணக்க ஆணைக்குழு வலியுறுத்தினாலும் -

அவை அரசியல் கலப்பில்லாமல் நடைபெறும் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது என்று எதிர்க்கட்சித் தரப்பில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

திருகோணமலை கடற்கரையில் 2006ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதி இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஐந்து அப்பாவித் தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

கடற்கரையில் காற்றுவாங்கிய மாணவர்கள் பயங்கரவாதிகள் எனவும் அவர்கள் எடுத்து வந்திருந்த கிரேணைட்டுகள் வெடித்ததிலேயே அவர்கள் உயிரிழந்ததாக முதலில் கூறப்பட்டாலும் அவர்களது சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தமை அவர்கள் வேண்டும் என்றே படுகொலை செய்யப்பட்டனர் என்பதனை நிறுவியது.

அதேபோன்று, பட்டினிக்கு எதிரான நிறுவனம் *(Action Fiam)* பணியாளர்களான 15 தமிழர்களின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் ஐந்தாம் திகதி மூதூரில் மீட்கப்பட்டிருந்தன.

மூதூரில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் இடையில் சிக்கியே தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 15 பேரும் கொல்லப்பட்டனர் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அக்கொலைகள் குறித்த விசாரணைக்கு வலியுறுத்தப்பட்டபோதிலும் வெறும் கண்துடைப்பு நாடகம் நடத்தப்பட்டு விடயம் மூடி மறைக்கப்பட்டது - என்பதும் உலகம் அறிந்த உண்மைகள்.

பொறுப்புக்கூறும் விவகாரம் தொடர்பாக அனைத்துலக அழுத்தங்கள் அதிகரித்துள்ள நிலையில், இப்போது இவ்விரு கொலைச் சம்பவங்கள் குறித்தும் புதிய விசாரணைகள் நடத்தப்படும் என இலங்கை அரசு ஜெனிவாவில் உறுதியளித்துள்ளது.

காலம் பிந்திய இத்தகைய கண்துடைப்புகள் உலகத்தின் பார்வையில் இருந்து இலகுவில் அகன்றுவிடும் என்று எண்ணுவது-

தான் கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு போய்விட்டதாக எண்ணும் பூனையின் புத்திக்கு ஒப்பானதே. காலம் பிந்தியாவது உண்மை வெளிப்படும்; ஆகையால் நீதி சார்ந்த விவகாரங்களில் ஒளித்துப் பிடித்து விளையாடுவது வினையாகவே முடியும் என்பதனை இலங்கை அரசு உணர்வது எப்போது....?

# ஜெனிவா பிரேரணையை ஆதரிக்குமாறு மத்திய அமைச்சை வலியுறுத்தி தீர்மானம்

### சட்டசபையில் கொண்டுவர வேண்டும் என்கிறார் ராமதாஸ்

சென்னை, மார்ச் 10

இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணையை ஆதரிக்கும்படி மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் - என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

இலங்கையில் நடைபெற்ற இன அழிப்புப் போரில் ஓர் இலட் சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு 3 ஆண்டுகள் நிறைவடைய உள்ள நிலையில், அதற்குக் காரணமான கொலைகாரர்களுக்கு இன்றுவரை எந்தத் தண்டனையும் வழங்கப்படவில்லை.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்த ஆணையிடக் கோரி ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் அமெரிக்கா சார்பில் பிரேரணை வரைவு கொண்டுவரப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களிக்க வேண்டும் என்று தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்தியுள்ளன. ஆனால் எதற்கும் இதுவரை பதில் வரவில்லை. இதுகுறித்து சென்னையில் பேசிய மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, இந்தப் பிரச்சினையில் முடிவெடுக்கும்போது தமிழகத்தின் உணர்வு கருத்தில் கொள்ளப்படும் என்று கூறியுள்ளார். அதைவிட இலங்கை - இந்தியா இடையிலான உறவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் தமிழர்களுக்கு தொடர்ந்து துரோகம் இழைத்து வரும் மத்திய அரசு இந்த முறையும் இலங்கைக்கு ஆதரவாகவே வாக்களிக்கும் என்று தெரிகிறது. வாக்களிக்க இன்னும் ஓரிரு நாள்களே உள்ள நிலையில், இதுவரை 22 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்துவிட்டன. ஆனால், இந்தியா இதுவரை மௌனமாகவே உள்ளது.

எனவே, தமிழக சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி அதில், இலங்கைக்கு எதிராக இந்தியாவை வாக்களிக்கக் கோரும் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் இதே கருத்தை வலியுறுத்தி தமிழகத்தில் முழு கடை அடைப்புப் போராட்டம் நடத்தப்பட வேண்டும் - என்று ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். (ஒ-சி)

---

மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றலில் ஈடுபட

## மல்ரிமைஸ் மென்பொருள் பாவனைக்கு வடக்கில் 60 விசேட நிலையங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 10

மாணவர்களை ஆர்வத்துடன் கற்றலில் ஈடுபடுத்தும் நோக்குடன் 'மைக்ரோ சொப்ற்' நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ''மல்ரிமைஸ்'' மென்பொருள் பாவனைக்கென வடக்கில் அறுபது விசேட மல்ரிமைஸ் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் அறிவுசார் கல்வி விருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்திலுள்ள பன்னிரண்டு கல்வி வலயங்களிலும் தெரிவு செய்யப்பட்ட தலா ஐந்து பாடசாலைகளில் இந்த விசேட கணினி ஆய்வு கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஒரு கணினியில் பல மவுஸ்களைப் பயன்படுத்தி மாணவர்கள் கற்றலில் ஈடுபடும் வகையில் அமைக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையங்களின் பாவனை மற்றும் கற்பித்தல் முறைகள் தொடர்பான பயிற்சிகள் தற்போது ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ். கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம், வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் ஆகிய நிலையங்களில் இந்தப் பயிற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. மற்றுமொரு பயிற்சி இம்மாத இறுதியில் வ/கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

கல்வி அமைச்சின் ஈ.கே.எஸ்.பி. செயற்றிட்ட மாகாண முகாமையாளர் எஸ்.ரீ.பீரிஸ் தலைமையில் மைக்ரோ சொப்ற் பயிற்சிபெற்ற வள ஆளணியினரால் இந்தப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட இருக்கின்றன. (ஒ)

## வன்னித் தேர்தலில் வாக்களிப்போர் பதிவு செய்க

யாழ்ப்பாணம், மார்ச் 10

புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தல் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது. எனவே யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக வதியும் குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் தாம் தற்போது வதியும் கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலகத்தில் பதிவுகளை இன்று சனிக்கிழமைக்கு முன்னதாக மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

வாக்காளர்களுக்கான பயண ஏற்பாடுகளை மேற் கொள்வதற்கு இலகுவாக தகுதியான வாக்காளர்கள் உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

---

# நிகழ்வுகள் இன்று

### மகளிர் தின விழா

சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி, மீசாலை நுணாவில் ஆகிய பொது நூல் நிலையங்கள் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா முற்பகல் 10 மணிக்கு நகர சபை பொது நூலக மண்டபத்தில் இடம் பெறும். தென்மராட்சிப் பிரதேச சன சமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீஸன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக ஆசிரியர் திருமதி சி.பிரணவநாதன் கலந்து கொள்வார். (ம-9)

***

கோப்பாய் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் மகளிர் தின விழா பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் தெற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது. மாதர் சங்கத் தலைவி திருமதி கலைச்செல்வி சோமேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக ஒய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் கலந்து கொள்வார். (ம-3)

### கலந்துரையாடல்

பருத்தித்துறைப் பிரதேச சபையின் புலோலி பொது நூலக அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் பிற்பகல் 2.30 மணிக்கு சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-8)

### நூல் வெளியீடு

சிவஸ்ரீ சி. சர்வேஸ்வரக் குருக்கள், ஸ்ரீமதி மனோன்மணி அம்மா ஞாபகார்த்தா* ஆபஸ்தம்ப சபிண்டீகரண பிரயோகம் நூல் வெளியீடு பிற்பகல் 2மணிக்கு சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி ஆலயத்தில் வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும். (த-14)

***

கவிஞர் ஆரணி எழுதிய கடற்கரைப் பூவரசு மற்றும் வண்ணக் கனவு ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா முற்பகல் 10.30 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெறும். (த-400)

### பொதுக் கூட்டம்

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்களின் சமாச வருடாந்த பொதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள தலைமைப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. சமாசத் தலைவர் க.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்துக்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-03,11)

***

அராலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் வலி.மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன் தலைமையில் நடைபெறும். (த-7)

***

தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாச பிரதிநிதிகளுக்கான கூட்டம் பிற்பகல் 2மணிக்கு பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-9)

***

நல்லூர் பிரதேச செயலகத்தின் பகிரங்க ஒய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் பொதுக் கூட்டம் காலை 9 மணிக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. கா.பீதாம்பரம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலாளர் பா. செந்தில் நந்தனன் கலந்து கொள்வார். (த-7)

### முதலீட்டாளர் தினம்

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்.கிளையின் ஏற்பாட்டில் முதலீட்டாளர் தினம் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-14-130)

***

### கவிதை நூல் வெளியீடு

யாழ். பல்கலைக்கழக மொழியியல் துறை மூன்றாம் வருட மாணவி செல்வி விஜிதா ரகுநாதனின் ''நிசப்தத்தில் வழியும் உயிர்த்துடிப்பு'' கவிதை நூல் வெளியீட்டு விழா முற்பகல் 9.30 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபர் பாலராணி சிறிதரன் தலைமையில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும். (த-15)

# தொடர் தவறிழைக்கும் சாரதிகளின் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தம்

## புதிய சட்டமூலத்துக்கான பிரேரணை சமர்ப்பிப்பு

கொழும்பு, மார்ச் 10

தொடர்ச்சியாகத் தவறிழைக்கும் வாகனச் சாரதிகளுக்குத் தொடர்ச்சியாகப் புள்ளிகளை வழங்கி அவர்களின் சாரதி அனுமதிப் பத்திரத்தை இடைநிறுத்தக் கூடிய சட்டமூலத்திற்கான பிரேரணை ஒன்று நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலத்தின் அடிப்படையில் இரண்டு வருடங்களுக்குள் 24 புள்ளிகளைப் பெறும் சாரதிகளின் அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்துக்குத் தற்காலிகமாக இடை நிறுத்தப்படும்.



**இரண்டு வருடங்களுக்குள் 24 புள்ளிகளைப் பெறும் சாரதிகளின் அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்துக்குத் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும்.**

குறிப்பிட்ட ஒரு சாரதி 18 புள்ளிகளை அடைந்ததும் இனிக் கவனமாக வாகனத்தைச் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுவர்.

ஒரு வருடத்துக்குப் பின்னர் அந்தச் சாரதி அனுமதிப் பத்திரம் எவ்விதமான கட்டண அறவீடும் இன்றி மீளக் கையளிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அதேபோல், புதிதாகச் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் ஆறு புள்ளிகளைப் பெற்றால் அவர்களின் அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்திற்குத் தற்காலிகமாக இடை நிறுத்தப்படும். அதன்பின்னரும் ஆறு புள்ளிகளைப் பெற்றால் அனுமதிப்பத்திரம் முற்றாக இரத்துச் செய்யப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

புள்ளிகள் வழங்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சாரதிகளுக்கு அபராதமும் விதிக்கப்படும் என்றும் அமைச்சர் இச்சட்ட மூலத்தை சபையில் சமர்ப்பித்து உரையாற்றுகையில் தெரிவித்தார். (த-சி)

# சிறைக் கைதிகளுக்குப் பயிற்சி வழங்க விரைவில் பாடசாலை

## புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி தெரிவிப்பு

சிறைக்கைதிகளுக்கு பயிற்சி வழங்கும் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வாய்மூல விடைக்கான வினாவின்போது ஏ.எச்.எம். அஸ்வர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு நாம் அவர்களுக்குப் பல பயிற்சிகளை வழங்கிவருகிறோம்.

**கைதிகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு நாம் அவர்களுக்குப் பல பயிற்சிகளை வழங்கிவருகிறோம்.**

விவசாயம், தச்சு, அழகுக்கலை, உடை அலங்காரம், சிகை அலங்காரம், தையல் உள்ளிட்ட பல தொழிற் பயிற்சிகள் தற்போது கைதிகளுக்கு வழங்கப்பட்டுவருகின்றன.

இப்பயிற்சிகளை நிறைவு செய்யும் கைதிகளுக்கு தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். அதேவேளை, கைதிகளுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்காக விரைவில் தனியான பாடசாலையொன்றை அமைக்கவுள்ளோம் - என்றார். (சி)

# அமெரிக்காவுடன் சண்டித்தனம் பேசியதாலேயே சர்வதேச நாடுகளின் பிடிக்குள் சிக்கியது இலங்கை

## பொன்னான சந்தர்ப்பத்தை நழுவவிட்டனர் என்கிறது ஐ.தே.க.

பலம் பொருந்திய நாடான அமெரிக்கா தாமாகவே வலிந்து வந்து இலங்கை அரசுக்கு வழங்கிய பொன்னானதொரு வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளாமல் அரசு சண்டித்தனம் காண்பித்ததாலேயே இன்று சர்வதேச பிடிக்குள் அது சிக்கித் தவிக்கின்றது - என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி மேற்குலகின் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே, அரசு ஒருபோதும் அந்நாடுகளைக் பகைத்துக்கொள்ளக் கூடாது என்றும், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் குறைந்தளவான தேயிலையையே இங்கிருந்து வாங்குகின்றன என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

அரச தலைமைக்கும், வெளிவிவகார அமைச்சுக்குமிடையே புரிந்துணர்வு இல்லாததன் காரணமாகவே இன்று சர்வதேச விவகாரம் பலவீனமாகியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உப தவிசாளரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச விவகாரங்களை உரிய முறையில் கையாண்டு பேச்சுமூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே வெளிவிவகார அமைச்சு உள்ளது.

அந்த அடிப்படையில், வாருங்கள் பேசுவோம் எனத் தாமாக முன்வந்து வெளிவிவகார அமைச்சுக்கு அழைப்பு விட்டது அமெரிக்கா.

அந்தச் சந்தர்ப்பத்தை உரியமுறையில் பயன்படுத்திக்கொண்டு அமெரிக்கா சென்று பேச்சு நடத்தி நிலைமைகளை வெளிவிவகார அமைச்சு தெளிவுபடுத்தியிருந்தால் இன்று ஜெனிவாவில் பிரேரணை வராமல் கூட இருந்திருக்கலாம். பேச்சு மூலம் தீர்க்க முடியாத பிரச்சினை ஒன்றுமில்லை.

இதனை எல்லாம் விடுத்து, அரசு சண்டித்தனம் காண்பித்து அலட்சியப்போக்கை வெளிப்படுத்தியது. இராஜதந்திர நடவடிக்கையை விடுத்து அசட்டைப் போக்கைக் கடைப்பிடித்ததாலேயே இன்று சர்வதேச அரங்கில் சிக்கித் தவிக்கின்றது அரசு.

65 சதவீதமான ஏற்றுமதியை அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கே இலங்கை ஏற்றுமதி செய்கின்றது. எனவே, அந்நாடுகள் எமது நேசநாடுகளாகும். அந்நாடுகளுடன் சுமுகமாகப் பேசி எதனையும் தீர்க்கலாம். அதற்கான வாய்ப்பை அரசு தவறவிட்டுள்ளது. இது வெளிவிவகார அமைச்சின் பலவீனத்தையே வெளிப்படுத்துகின்றது.

இன்று இலங்கைக்கு உதவியளிப்பதாகக் கூறும் நாடுகள் எமக்கு உதவிகளை வழங்கினாலும், எங்கள் நாட்டிலிருந்து தேயிலையை மட்டுமே பெற்றுக்கொள்கின்றன என்பதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைபடுத்த அரசு பொறிமுறையொன்றை நிறுவவேண்டும். அதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. பூரண ஒத்துழைப்பை வழங்கும் - என்றார். (சி)

# ஜெனிவாவில் இராணுவத்தை காட்டிக்கொடுத்துள்ளது அரசு

## ரவி கருணாநாயக்க எம்.பி.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்தப்போவதாக ஜெனிவாவில் கூறி படையினர் அனைவரையும் இலங்கை அரசு காட்டிக்கொடுத்துவிட்டதாக ரவி கருணாநாயக்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று தனிநபர் பிரேரணையொன்றை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமெரிக்கா கொண்டுவரும் இலங்கைக்கு எதிரான பிரேரணையைத் தோற்கடிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக இலங்கை அரசு 53 பேரை ஜெனிவாவுக்கு அனுப்பிவைத்தது.

இப்பிரேரணை தொடர்பாக அதிகமான நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகவே செயற்படும் என்று இலங்கை அரசு கூறியது. ஆனால்,



அமெரிக்கா பிரேரணையைச் சமர்ப்பித்துவிட்டது.

ஜெனிவா சென்ற 53 பேராலும் எந்தவொரு பிரயோசனமும் இல்லை. அவர்களால் இலங்கைக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. அவர்களுக்குப் பதிலாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உள்ளிட்ட மூன்று பேரை ஜெனிவாவுக்கு அனுப்பியிருக்கலாம். நிமால் சிறிபால டி சில்வா ஒரு மாதிரியாகப் பேசி ஏனைய நாடுகளின் ஆதரவைப் பெற்றிருப்பார்.

பிரேரணையைத் தோற்கடிக்க ஏனைய நாடுகளின் ஆதரவைப் பெறமுடியாத

**நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக நாம் பேசும் போது எம்மை தேசத்துரோகிகள் என்று அரசு கூறியது.**

அரசு, நல்லிணக்க ஆணைக்குழுவை நடைமுறைப் படுத்தப்போவதாக ஜெனிவாவில் உறுதியளித்துள்ளது. இதன்மூலம் முழுப்படையினரையும் காட்டிக்கொடுத்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக நாம் பேசும்போது எம்மை தேசத்துரோகிகள் என்று அரசு கூறியது. ஆனால், அரசு இப்போது வழங்கியிருக்கும் உறுதிப்பாடு தொடர்பாக அரசு என்ன சொல்ல போகிறது - என்றார். (சி)

# சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு அச்சுறுத்தல்

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியின் பல்வேறு இடங்களில் இடம்பெற்றுவரும் சமூக விரோதச் செயற்பாடுகளைத் தடுக்கும் வகையிலும், மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையிலும் கிராமங்கள் தோறும் பொலிஸாரால் சிவில் பாதுகாப்பு குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குரிய விசேட அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இக் குழுக்கள் மூலம் ஓரளவு சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தக் கூடிய நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் கண்டாவளைப் பிரதேசத்தில் உட்பட்ட கல்மடு நாவல் நகர்ப் பகுதியைக் கிராம அலுவலருடன் இணைந்து மேற்படி சிவில் பாதுகாப்புக் குழுக்வினர் கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்தும் வகையில் விழிப்புணர்வுச் செயற்பாட்டில் ஈடுபட்ட வேளை கசிப்பு உற்பத்தி விற்பனையாளர்களால் அச்சுறுத்தப்பட்டள்ளனர்.

மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி ஒரு சமூகத்தை நல்வழிப் படுத்த முன்வந்துள்ளவர்கள் மீது தாக்குதல் நடத்துவர்களையோ அல்லது எச்சரிக்கை செய்பவர்களையோ சட்டத்தின் முன்நிறுத்தி அவர்களுக்கு எதிரான நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்று கிளிநொச்சி மாவட்டப் பொதுமக்கள்தொடர்பாடல் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (எ-6)

# சுவரொட்டியை ஒட்டியவர்கள் இராணுவத்தால் படம்பிடிப்பு

முள்ளியவளை, மார்ச் 10

முல்லைத்தீவு குமுழமுனையில் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த இளைஞர்களை இராணுவப் புலனாய்வாளர்கள் புகைப்படம் எடுத்துள்ளனர். எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் பிரதேச சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் தேர்தல் சுவரொட்டிகளைக் கடந்த புதன்கிழமை இளைஞர்கள் சிலர் ஒட்டிக் கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் அச்சமடைந்த அந்த இளைஞர்கள் தமது வேலைகளைப் பாதியில் இடைநிறுத்திவிட்டுத் திரும்பிச் சென்றனர்.

ஜனநாயக முறையில் இடம்பெறும் தேர்தலின் போது இராணுவத்தினரின் இத்தகைய அமைதியைக் குலைக்கும் செயற்பாடுகள் இங்குள்ள மக்களிடையே அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. (க-433)

# அகற்றப்பட்டது நினைவுப் பலகை

வவுனியா, மார்ச் 10

வடக்கின் வசந்தம் நினைவுப் பலகை வவுனியாவில் அகற்றப்பட்டுள்ளது. வவுனியா முள்ளிப்புலவு பகுதியில் வடக்கின் வசந்தம் திட்ட அமுலாக்கத்தினைத் தெளிவு படுத்தும் நினைவுப் பலகை இனந் தெரியாதோரால் அகற்றப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் 2009ஆம் ஆண்டுப் பகுதியில் வீதி அமைத்தல், மின்சாரம் வழங்குதல் பணிகள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டன.

2010ஆம் ஆண்டு கொங்கிறிட் வீதி போடும் பணி நிறைவு செய்யப்பட்டபோதும் இதுவரை மின்சாரம் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்கப்படவில்லை. இந்த நிலையில் இந்த நினைவுப் பலகை அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் படங்கள் பொறிக்கப்பட்ட இந்த நினைவுப் பலகை அகற்றப்பட்டமை தொடர்பாக வவுனியா நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க)

# 'தேர்தல்' மின்சாரம்

முள்ளியவளை, மார்ச் 10

பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு வரை மின்மார்க்கம் அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதனால் சாலையோரங்களில் காணப்படும் பயன்தரு மரங்கள் வெட்டிச் சாய்க்கப்படுகின்றன.

குமுழமுனை, அளம்பில், செம்மலை ஆகிய பகுதிகளில் இறக்கிவைக்கப்பட்டிருந்த தூண்கள் கம்பிகள் என்பன இந்த வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வற்றாப்பளைக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தமக்கு மின்சாரம் வழங்கினால் மட்டுமே நடைபெறவிருக்கும் பிரதேச சபைத் தேர்தலில் தாம் வாக்களிக்க முடியுமெனக் கூறியுள்ளனர்.

எதிர்வரும் பிரதேச சபைத் தேர்தல்களை முன் னிட்டே மின்சார மார்க்கம் அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெறுவதாக இங்குள்ள மக்கள் கூறுகின்றனர். (க-433)



பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நாளை ஞாயிற்றுக்கிழமை திருச்சுற்றுப் பிரகாரத்துடன் நிறைவடையும். திருவிழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று குருநகரில் இருந்து சுமார் எண்ணூறுக்கும் அதிகமான மக்கள் சென்றுள்ளனர். பாலைதீவுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் தமது பெயர், அடையாள அட்டைகளை குருநகர் துறைமுகத்தில் கடற்படையினரிடம் பதிவு செய்து கொண்டனர். இறுதி திருவிழாவில் கலந்து கொள்வதற்காக இன்று சனிக்கிழமை குருநகர், பாஷையூர், நாவாந்துறைப் பகுதிகளில் இருந்து பெருமளவு மக்கள் அங்கு செல்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# மீனவர் எரிபொருள் முத்திரை வழங்கும் பணிகள் துரிதம்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

யாழ்.மாவட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் மானிய முத்திரைகள் வழங்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த விசேட மானிய முத்திரைகள் குடாநாட்டில் சகல பிரதேசங்களில் உள்ள மீனவர்களுக்கும் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது குருநகர், பாஷையூர் பகுதி மீனவர்களுக்கு இந்த மானிய முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தீவகம், காரைநகர் பகுதி மீனவர்களுக்கு அடுத்து வரும் நாள்களில் இந்த மானிய முத்திரைகள் வழங்கப்படும்.

வடமராட்சி சுப்பர்மடம், இன்பருட்டி, பொலிகண்டி பகுதி மீனவர்களுக்கும் இவை வழங்கப்பட்டுள்ளன.

இந்த விசேட மானிய முத்திரைகள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கி முடிக்கப்பட வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

இந்த முத்திரைகளைப் பெறாதவர்கள் உரிய அத்தாட்சிகளைச் சமர்ப்பித்து அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் குடாநாட்டுக்கே அதிக ஒதுக்கீடு

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

உலக உணவுத்திட்டத்தின் கீழ் வடமாகாணத்துக்கு 85 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கூடுதலான தொகை யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவி ருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டப்பலநோக்கு கூட்டுறவுச் சங் கங்களின் பொதுமுகாமை யாளர்களுக்கான கலந்துரை யாடல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. அதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலக உணவுத் திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கான பால்மா வகையை உள்ளடக்கிய போதும் இத் திட்டத்தின் மூலம் நிராகரிக்கப்பட்டது. தாய்ப் பாலுக்கு ஈடாக இது வழங்கப்படுவதால் ஊக்கப்படுத்துவது போன்றதாக அமையும் என்று நிராகரிக்கப்பட்டது

**குழந்தைகளுக்கான பால்மா வகை தாய்ப் பாலுக்கு ஈடாக வழங்கப்படுவதால் ஊக்கப்படுத்துவது போன்றதாக அமையும் என்று நிராகரிக்கப்பட்டது**

ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து உலக உணவுத் திட்ட தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும். பின்னர் அங்கு தெரிவாகும் பயனாளிகளுக்கே இந்த உலக உணவு வகைகள் பகிர்ந்தளிக்கப்படும். ஒவ்வொரு பயனாளிகளுக்கும் ஆயிரத்து 145 ரூபா பெறுமதியான வவுச்சர் வழங்கப்படும் அவற்றைக் கொண்டு பயனாளிகள் தமக்குத் தேவையான பொருள்களை பெற்றுக்கொள்ள முடியும். கூட்டுறவுச் சங்கங் களின் வவுச்சர்களை பய னாளிகள் எடுத்துச் செல் லும் போது அவற்றில் திருத் தங்களோ, கீறுகளோ, இருந் தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

அதேபோன்று சங்க முகாமையாளர்கள் பயனாளியின் பெயர், அடையாள அட்டை இலக்கம், பொருள்களின் விவரங்கள், நிறை விலை ஆகியவற்றை தெளிவான முறையில் எழுத வேண்டும். சிட்டைகள் வெட்டியோ திருத்தங்கள் செய்வதோ எழுதுவதோ குற்றமாகும். குறித்த பயனாளிகள் ஒவ் வொரு மாதமும் 5 ஆம் திகதியில் இருந்து 20 ஆம் திகதிக்கிடையில் பொருள் களைக் கொள்வனவுசெய்யவேண்டும்.

22 ஆம் திகதி பயனாளிகள், பொருள்களின்விவரங்கள், சிட்டைகள் ஆகியவற்றை யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளரிடம்ஒப்படைக்கச் சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

உலக உணவுத்திட்ட பயனாளிகளுக்குச் சந்தை விலையை விட குறைந்த விலையிலும் நியாயமான விலையிலும் தரமானதாகவும் பொருள்கள் விற்பனை செய்யப்பட வேண்டும்.- என்றார். (ம-13)

# மானிப்பாய் சந்தைப் பகுதி மின்விளக்கின்றி இருளில்

வலி. தென்மேற்கு,மார்ச்10

மானிப்பாய் மத்திய சந்தைப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த மின்விளக்குகள் துண்டிக்கப்பட்டு வெகு நாள்களாகியும் இதுவரை மீண்டும் பொருத்தப்படவில்லை. இதனால் இரவு நேரங்களில் வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மரக்கறி வர்த்தகர்களும் அங்கு செல்லும் நுகர்வோரும் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் இயங்கும் ஒன்பது சந்தைகளில் மானிப்பாய் மத்திய சந்தை பிரபல்யமாக விளங்குகின்றது. இங்கு மரக்கறி வியாபாரம், மீன் வியாபாரம் மட்டுமல்ல சிறுசிறு வர்த்தக நிலையங்களும் இரவு 9 மணி வரை இயங்கி வருகின்றது. அத்துடன் இரவு 7 மணி வரை மரக்கறி வியாபாரமும் இடம் பெற்று வருகிறது. தினசரி பல நூற்றுக்கணக்கான பொதுமக்களின் தேவைகளை இந்தச் சந்தை நிறைவேற்றி வருகிறது.

சந்தையின் பாதுகாப்புக் கருதியும் அங்கு செல்லும் நுகர்வோரின் நன்மை கருதியும் மின் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. இதனால் இரவு நேரங்களில் மக்கள் சிரமமின்றிச் சென்று வந்தனர்.

**மானிப்பாய் மத்திய சந்தைப் பகுதியில் மின்விளக்குகள் துண்டிக்கப்பட்டு வெகு நாள்களாகியும் இதுவரை மீண்டும் பொருத்தப்படவில்லை.**

நாட்டில் ஏற்பட்டிருந்த போர்க்காலச் சூழ்நிலை காரணமாக மின்விளக்குகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் சந்தைக் கட்டடம் தற்பொழுது இருள் மயமாகக் காட்சியளிக்கின்றது. இரவு 7 மணி வரை மரக்கறி வியாபாரம் நடைபெறுவதால் வேலைக்குச் செல்பவர்கள் மறுநாளுக்குத் தேவையான மரக்கறி வகைகளை வாங்குவதற்காக சந்தைக்கு வருகிறார்கள். சந்தையில் மின் விளக்குகள் இல்லாததினால் வியாபாரிகளும் பொதுமக்களும் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றார்கள்.

எனவே மக்களின் நலன் கருதி துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் வழங்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

# ஐ.சி.டி.எல். கற்கையை நிறைவு செய்த அரச ஊழியருக்கு சான்றிதழ்கள்

## யாழ். செயலகத்தில் திங்களன்று

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஜனாதிபதி செயலகத்தின் கீழ் இயங்கும் இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA) நிறுவனத்தினால் அரச ஊழியர்களில் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கோடு முன்னெடுக்கப்பட்ட ICDL கற்கை நெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஐ.சி.ரி.ஏ. நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப அறிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 'யாழ். கேற்வே' நிறுவனத்தில் ஐ.சி.டி.எல். கற்கை நெறியைப் பயின்ற 160 அரச அலுவலர்களும், கணினி முறைமை ஒழுங்கமைப்பாளர் பயிற்சி நெறியைப் பயின்ற 16 அரச ஊழியர்களும் அன்றைய தினம் சான்றிதழ்களைப் பெறவுள்ளனர்.

அரச அலுவலகங்களில் வெகு விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ள ''அரச அலுவலகங்களுக்கான வலைப்பின்னல்'' பிரயோகங்கள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றும் அன்றைய தினம் நடத்தப்படவுள்ளது. (ஒ)

**அரச அலுவலர்களுக்கான வலைப்பின்னல் பிரயோகம் பற்றியும் விளக்கப்படவுள்ளது.**

# பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு இயந்திரங்கள் வருவதில் தாமதம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

கைதடியில் உள்ள பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி நிலையத்துக்குரிய இயந்திரங்கள் யாவும் எதிர்வரும் மே மாதத்துக்குப் பின்னரே வந்து சேரும் என்று சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இந்த நிலையத்துக்கான இயந்திரங்கள் இந்தியாவில் இருந்து இங்கே வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஆராய்ச்சி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் ஓரளவு நிறைவு பெற்றுள்ளன.

ஆராய்ச்சி நிலையத்தை திறந்து அதன் செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பதற்கு இயந்திரங்கள் வந்து சேராமையினால் காலதாமதம் ஏற்படுகின்றது.

இதனால் இதன் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கும் பின்னிற்க வேண்டியுள்ளது.

குறிப்பாக ஆராய்ச்சி நிலையத்துக்கான முழுமையான இயந்திரங்களும் எதிர்வரும் மே மாதத்துக்குப் பின்னரே வந்து சேரக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

**ஆராய்ச்சி நிலையத்தை திறந்து அதன் செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பதற்கு இயந்திரங்கள் வந்து சேர்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது.**

# போதனா வைத்தியசாலையில் கண் அழுத்த வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

சர்வதேச கண் அழுத்த நோய் வாரம் உலகளாவிய ரீதியில் நாளை தொடக்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த வாரத்தை முன்னிட்டு தேசிய நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கண் வைத்திய நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை யாழ். போதனா வைத்தியசாலையில் இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 40 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு கண் அழுத்த நோயை பரிசோதித்துக் கொள்ளலாமெனவும் குறிப்பாக நீரிழிவு நோய் உடையவர்கள் குடும்பத்தில் கண் அழுத்த நோய் உடையவர்கள் தவறாது தம்மைப் பரிசோதித்துக் கொள்ளுமாறும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-9)

## கைதான சந்தேக நபர் கட்சியிடம் வந்து சென்றவர்

யாழ்ப்பாணம், மார்ச் 10

நெடுந்தீவுச் சிறுமியின் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் நபர் தனது வாழ்வாதாரத்துக்காக எமது கட்சியின் உதவிகளைப் பெற்று வந்தவர். அவர் எமது கட்சியின் உறுப்பினர் அல்ல எனத் தெரிவித்துள்ளார் ஈ.பி.டி.பி. உறுப்பினரும் அரச கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரின்.

இதுதொடர்பில்அவர்அனுப்பியுள்ள செய்திக் கடிதத்தில்,

சந்தேகநபர் ஆரம்ப காலத்தில் தனது வாழ் வாதாரத்துக்காக எமது கட்சியின் உதவிகளைப் பெற்று வந்தவர். தீவுப் பகுதியிலுள்ள மக்களைப் போல தனது தினசரி தேவைகள் நிமித்தம் எமது கட்சி அலுவலகத்துக்கு வந்து சென்றவர். இது தவிர இவருக்கும் எமக்கும் வேறு எந்தத் தொடர்பும் இல்லை.

சம்பவத்தில் பலியான பாலகி எனது உறவினர். அந்தப் பாலகியின் தொட்டப்பர் நான். சந்தேக நபரைக் கைது செய்ய எமது கட்சி உறுப்பினர்களும் உதவினார்கள்.- என்றுள்ளது. (த-3)

# கோட்டை பகுதியை அழகுபடுத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். கோட்டைப் பகுதியை அழகுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோட்டைப் பகுதியைச் சூழ புற்கள் வளர்த்து நிழல் தரும் மரங்கள் நட்டு மக்கள் இருந்து இளைப்பாறுவதற்கு ஏற்ற வகையில் இருக்கைகளும் அமைக்கப்படவுள்ளன என்று யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். நகர அபிவிருத்தி தொடர்பான கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதில் முதல்வர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

**பழைய றீகல் திரையரங் குக்கு அருகில் உள்ள காணியில் பஸ் நிலையம் ஒன்றை அமைத்து நெருக்கடிகளைக் குறைப்பது குறித்தும் ஆராய்ந்து வருகின்றனர்.**

கோட்டைக்கும் பண்ணைக் கடற்கரைக்கும் இடைப்பட்ட பகுதியில் பண்ணைச் சந்தியில் இருந்து மாநகர சபைக்குச் சொந்தமான காணி வரையான பகுதி இவ்வாறு அழகுபடுத்துவதற்கு உகந்த இடமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நகரில் உள்ள புல்லுக்குளம், ஆரியகுளம், கன்னாதிட்டிக் குளம், தேவரிக் குளம் ஆகியவற்றைத் தூர் வாரித் துப்புரவு செய்வதோடு அவற் றுக்கு அருகில் உள்ள வாய்க்கால்களையும் துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பழைய றீகல் திரையரங்குக்கு அருகில் உள்ள காணியில் பஸ் நிலையம் ஒன்றை அமைப்பது குறித்தும் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-16)

## மன வளர்ச்சி குன்றிய சிறுமி மீது வன்புணர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 10

உரும்பிராயில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் தங்கியிருந்த மன வளர்ச்சி குன்றிய 13 வயதுச் சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

அந்த இல்லத்துக்குப் பொறுப்பாக இருக்கும் ஓய்வு பெற்ற அதிபரே தன்னை வன்புணர்வுக்குட்படுத்தியதாக பாதிக்கப்பட்ட சிறுமி விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி இல்லத்திலிருந்து வெளியேறிப் பெற்றோரிடம் சென்று உரிய அதிகாரிகள் ஊடாக யாழ். நீதிமன்றில் முறைப்பாடு செய்ததையடுத்து அது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

வைத்திய பரிசோதனையின் போது சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்தது. அது தொடர்பாக நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் பாதிக்கப்பட்ட சிறுமியைப் பெற்றோருடன் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. அந்தச் சிறுவர் இல்லத்துக்குச் சென்று உரிய அதிகாரிகளைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி உரிய நடவடிக்கை எடுத்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோப்பாய் பொலிஸாருக்கும் நீதிவான் மா.கணேசராஜா பணித்தார்.

வறுமை காரணமாகச் சிறுமியை அந்த இல்லத்தில் அனுமதித்திருந்ததாக விசாரணைகளின் போது சிறுமியின் பெற்றோர் தெரிவித்துள்ளனர். (த-4-5)

## 'டைனமெற்' வெடித்து சகோதரர் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

கற்பாறையை உடைப்பதற்காக வைக்கப்பட்ட 'டைனமெற்' வெடித்ததனால் முகத்திலும் கைகளிலும் காயங்களுக்குள்ளான சகோதரர் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் புத்தூரில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது. சம்பவத்தில் வங்கி வீதி, ஆவரங்கால் மேற்கைச் சேர்ந்த பத்மநாதன் சசிகுமார் (வயது-30), பத்மநாதன் சிவகுமார் (வயது-21) ஆகிய இருவருமே காயங்களுக்குள்ளாகினர்.

உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர்கள், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

கற்பாறையை உடைப்பதற்காகப் பாறைகளுக்கு இடையே 'டைனமெற்' வெடியை வைத்தபோது அது பாறையில் உரசுப்பட்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## பல்கலை விடுதியில் மூவருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு பேருக்கும் உதவி விரிவுரையாளர் ஒருவருக்கும் டெங்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.

சுகயீனத்துக்காக மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்ற போதே டெங்கு நோய்த் தொற்று இருப்பது நேற்று முன்தினம் கண்டறியப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக ஆண்கள் விடுதியில் தங்கிக் கற்றலை மேற்கொண்டு வரும் மாணவர்கள் இருவரும் அங்கு தங்கியிருக்கும் விரிவுரையாளருமே இவ்வாறு டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் டெங்கு நோய் பரப்பும் நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான சூழல் காணப்படுவதாகவும் பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு இந்த விடயம் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டிருந்ததாகவும் அந்தப் பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள பொதுச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

**கழிவுநீர் வாய்க் கால்களில் நிறைந்துள்ளது.**

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கழிவுநீர் கால்வாய்கள் நிரம்பி வழிந்து கழிவுநீர் ஆங்காங்கே தேங்கி நிற்பதாகவும் பொதுச் சுகாதாரப் பிரிவினர் கூறினர்.

டெங்கு நுளம்புக் குடம்பிகளை அழிக்கும் செயற்பாடுகளை தீவிரமாக மேற்கொண்டு வருவதாகவும் அவர்கள் மேலும் கூறினர். (ம-3)

## முத்திரை மட்டும் விநியோகம் மண்ணெண்ணெய் இல்லை

*யாழ்ப்பாணம், மார்ச் 10*

*யாழ்.குடாநாட்டில் மண்ணெண்ணெய் முத்திரைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு இருவாரம் கடந்தும் அவற்றுக்கான மண்ணெண்ணெய் விநியோகம் இதுவரைக்கும் ஆரம்பிக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.*

*கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரே இந்த முத்திரைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன. ஆயினும் இதுவரை அதற்கான மண்ணெண்ணெய் விநியோகம் ஆரம்பிக்கப்படவில்லை.*

*இது குறித்துப் பயனாளிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.*

*இந்த முத்திரைகளை எடுத்துக் கொண்டு தினமும் தாம் சங்கக்கடைகளுக்கு அலைவதாகவும் அங்கே இதற்குரிய விநியோகம் சம்பந்தமான அறிவித்தல் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை என முகாமையாளர்கள் கைவிரிப்பதாகவும் பயனாளிகள் கூறுகின்றனர்.*

*இது குறித்துக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,*

*மண்ணெண்ணெய் முத்திரைக்கான விநியோகம் தொடர்பாக அறிவித்தல்கள் யாழ். செயலகத்தில் இருந்து இதுவரை கிடைக்கவில்லை.*

*இதற்கான அனுமதி கிடைத்ததும் விநியோகத்தை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.* *(த-17)*

## 2000 புசல் விதை நெல் களஞ்சியப்படுத்தப்படும்

யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டு நெற்செய்கைக்கென 2 ஆயிரம் புசல் விதை நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விவசாய திணைக்களம் தெரிவித்தது.

இந்த விதை நெல்லின் சேமிப்புக்காகச் சென்ற போகத்தில் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளால் 50 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

பி.ஜீ- 406 இன நெல்லைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்தச் செய்கையை அறுவடை செய்து அதனைக் களஞ்சியப்படுத்துவதற்கும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. களஞ்சியப்படுத்தப்படும் இந்த விதை நெல் இந்த ஆண்டின் பெரும் போக நெற்செய்கைக்குப் பயன்படுத்தப்படவுள்ளது. (த-17)

## கூட்டுறவுச் சங்க அரிசி ஆலைகள் 'என்றிப்' நிதியில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

என்றிப் திட்டத்தின் நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் அரிசி ஆலைகள் புனரமைக்கப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் இதனைத் தெரிவித்தார்.

**அரிசி ஆலைகளுக் குரிய சங்கங்களின் முகாமையாளர்களுக்கு புனரமைப்பு தொடர் பான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.**

வலிகாமம்- பண்டத்தரிப்பு அரிசி ஆலை, வடமராட்சி, உடுப்பிட்டி அரிசி ஆலை, தென்மராட்சி, சாவகச்சேரி அரிசி ஆலை தீவகம்- வேலணை அரிசி ஆலை ஆகியன இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

கடந்த யுத்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இந்த அரிசி ஆலைகள் பாவனை இன்றி பல வருடங்கள் இருந்தன.

இந்த நான்கு அரிசி ஆலைகளும் தற்போது என்றிப் திட்டத்தின் நிதி உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளன. புனரமைப்பின் மூலமாக சங்கம் மற்றும் பிரதேச மக்களும் நன்மை அடைய முடியும்.

தற்போது அரிசி ஆலைகளுக்குரிய சங்கங்களின் முகாமையாளர்களுக்கு புனரமைப்பு தொடர்பான விண்ணப்பங்கள் கொடுத்துள்ளோம். அவற்றை பூரணப்படுத்தி சமர்ப்பிக்கும் பட்சத்தில் தேவைப்படும் நிதியை என்றிப் வழங்கவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

### போலித் துப்பாக்கியைக் காட்டி

## உடுவில் வர்த்தகர்களிடம் கப்பம் கேட்ட இருவருக்கும் 22ஆம் திகதிவரை மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

உடுவிலில் போலித் துப்பாக்கியைக் காட்டி வர்த்தகர்களை மிரட்டி கப்பம் பெற முயன்ற சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை உடுவில் தும்மாலை ஒழுங்கையை அண்மித்த பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு சென்ற சந்தேக நபர்கள் இருவரும் போலித் துப்பாக் கியைக் காட்டி வர்த்தகர் களை மிரட்டி கப்பம் கோரி யுள்ளனர்.

ஒரு வர்த்தகரிடமிருந்து ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதற்கு அருகிலுள்ள வர்த்தக நிலையத்துக்கும் சென்று அவர்கள் கப்பம் கேட்டுள்ளனர். இவர்கள் மீது இவ்வாறு செயற்பட்ட போதே சந்தேகம் கொண்ட வர்த்தகர்களும் பொதுமக்களும் மோட்டார் சைக்கிளில் வந்திருந்த அவர்களை மடக்கிப் பிடித்து சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். தாவடியைச் சேர்ந்த மனோகரன் மதுஷன் மற்றும் கொக்குவிலைச் சேர்ந்த தேவராஜா றொஷான் ஆகியோரே மடக்கிப் பிடிக்கப்பட்ட இருவரும் ஆவர். இவர்களில் மதுஷன் ஏற்கனவே இவ்வாறான சம்பவமொன்றில் தொடர்புபட்டுள்ளார் எனச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் இவர்கள் முற்படுத்தப்பட்ட போதே இருவரையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (ஒ-4)

# முதல்வரின் சதி காரணமாக உறுப்புரிமை இழக்கும் நிலை

## அக்கரைப்பற்று மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

அம்பாறை,மார்ச் 10

மாநகர சபையின் மாதாந்த அமர்வில் முதல்வரின் வற்புறுத்தல் காரணமாக தான் வரவுப்பதிவேட்டில்கையொப்பமிட மறுக்கப்பட்டதை கண்டிப்பதாக அக்கரைப்பற்று மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அஷ்ஷேய்க் எஸ்.எல்.எம்.ஹனீபா மதனி தெரிவித்தார்.

இந்தச் செயற்பாடானது அரசியல் உள்நோக்கம் கொண்டது . இதன் பின்னணியில் ஒரு சூழ்ச்சி திட்டமிடப்படுகிறதோ என்று சந்தேகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அக்கரைப்பற்று மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாநகர சபைக் கட்டடத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்துக்கு முற்பகல் 11 மணிக்கு நான் சமுகமளித்திருந்தேன்.

எனது வருகையினைப் பதிவு செய்யும் பொருட்டு, அங்கத்தவர்கள் கையொப்பமிடும் வரவுப் பதிவேட்டினை வழங்குமாறு மாநகர சபையின் செயலாளரிடம் கேட்டேன். ஆனால், குறித்த பதிவேட்டினை முதல்வர் வழங்க வேண்டாம் எனக் கூறியுள்ளார் எனத் தெரிவித்து, அதை என்னிடம் தருவதற்கு செயலாளர் மறுத்துவிட்டார்.

இரண்டாவது தடவையாகவும் குறித்த வரவுப் பதிவேட்டினை வழங்குமாறு செயலாளரைக் கேட்டபோது முன்பு கூறிய காரணத்தினை தெரிவித்து மீண்டும் அவர் மறுத்துவிட்டார்.

மாநகர சபையின் கடந்த இரண்டு அமர்வுகளில் என்னால் கலந்துகொள்ள முடியவில்லை. சாதாரணமாக, உறுப்பினரொருவர் தொடர்ச்சியாக 3 சபை அமர்வுகளில் கலந்துகொள்ளாமல் விடும்போது அவர் தனது உறுப்புரிமையை இழக்க நேரிடும்.

நான் நேற்றுமுன்தினம் மாநகர சபைக்கு சமுகமளித்தமையை வரவுப் பதிவேட்டில் பதியாமல் தடுத்ததன் மூலமாக மூன்று அமர்வுகளுக்கு சமுகமளிக்கவில்லை எனத் தெரிவித்து எனது உறுப்பினர் அந்தஸ்தைக் கேள்விக்குள்ளாகுவதற்காகவே, இந்தச் சதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது- என்றார். (ச)



# நெல் கொள்வனவில்லை; விவசாயிகள் அதிருப்தி

அம்பாறை,மார்ச் 10

அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையினருக்குச் சொந்தமான களஞ்சியசாலையொன்று அமைக்கப்பட்டபோதும் அப்பகுதி விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்படுவதில்லை என்று விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது தாம் அறுவடை செய்யும் நெல்லை தனியாருக்கு மிகவும் குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டியுள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நெல் சந்தைப்படுத்தும் சபையினர் கடந்த போகங்களில் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து களஞ்சியசாலையில் சேமித்து வைத்துள்ள நெல்லை இதுவரை அகற்றாமை காரணமாக தற்போது அறுவடை செய்யப்படும் நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்த முடியாததொரு நிலை காணப்படுகிறது.

இதன் காரணமாகவே இந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளின் தற்போதைய பெரும்போகத்துக்குரிய நெல்லை நெல் சந்தைப்படுத்தும் சபையினர் கொள்வனவு செய்யவில்லை.

எனவே, கடந்த போகங்களில் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் சேமித்து வைக்கப்பட்டுள்ள நெல்லை உடனடியாக அகற்றிவிட்டு, தற்போது அறுவடை செய்யப்படும் நெல்லை கொள்வனவு செய்ய வேண்டும் - என்றனர். (ச)




பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனையில் பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டலில் பொலிஸ் உயிர்க்காப்புப் பிரிவால் அவசர உதவிப் படகுச் சேவை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பாசிக்குடாவில் ஆரம்பிக்கப்பட்டது.

## நாடு திரும்பியவரைக் காணவில்லை

கடந்த 3 வருடங்கள் கட்டாரில் பணிப்பெண்ணாக கடமையாற்றி நாடு திரும்பிய கிண்ணியா, குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த பெண்ணொருவர் இதுவரையில் வீடு வந்து சேரவில்லை என்று அவரது கணவர் கிண்ணியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி, 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆலிபு நஸீமா (வயது 32 ) என்பவரே இவ்வாறு காணாமல் போனவராவார். (ச)

# துப்பாக்கி வேட்டுகளால் அச்சுறுத்தி அட்டகாசம்

நுவரெலியா,மார்ச் 10

படையினர் போர்க்களத்துக்கு விரைவதுபோல, நுவரெலியா கந்தப்பளை கோட்லோஜ் தோட்டத்துக்குள் இரவு நுழைந்துள்ள விசேட அதிரடிப்படையினர் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்து மக்களை அச்சுறுத்தி அடாவடியில் ஈடுபட்டனர் என மலையக அரசியல் பிரமுகர்கள் குற்றஞ்சாட்டியுள் ளனர்.

30 இற்கும் மேற்பட்ட விசேட அதிரடிப்படையினர் அங்கு நிலைகொண்டு மக்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டமையால் கோட்லோஜ் தோட்டம் கடந்த புதன் கிழமை இரவு அல்லோல கல்லோலப்பட்டது.

மக்கள் கூட்டம் கூட்டமாகக் குவிந்து பதற்றத்தில் இரவோடிரவாக அங்குமிங்கும் மரணபீதியில் ஓடித் திரிந்ததால் குறித்த பிரதேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சிவில் உடையில் பிரதேசத்துக்குள் நுழைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட மதுவரித் திணைக்கள அதிகாரிகளே இந்தச் சம்பவத்துக்குப் பிரதான காரணம் எனக் கூறப்படுகின்றது. (ச)

# கிழக்கு பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து மனு கையளிப்பு

## மக்களின் அவலங்கள் அதில் விபரிப்பு

எருவில், மார்ச் 10

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் கிழக்கு மாகாண சர்வமத பேரவையின் இரண்டு நாள் செயலமர்வு கடந்த திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் திருகோணமலை, சர்வோதயா நிலையத்தில் நடைபெற்றது. அதில் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் தற்போதைய பிரச்சினைகள் ஆராயப்பட்டு அதனை மனுவாக கிழக்குமாகாணத் தவிசாளர் எம்.எச்.எம்.பாயிஸிடம் அவரது அலுவலகத்தில் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேராவின் தலைமையில் கையளிக்கப்பட்டது.

'போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் அடையாளங் காணப்பட்டுள்ள பிரச்சினைகளும் தீர்வுக்கான கரிசனையும்' என்ற தலைப்பில் கையளிக்கப்பட்ட இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்தகால போரால் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளையும், சவால்களையும் நாங்கள் முடிந்தவரை அடையாளப்படுத்தியிருப்பதோடு அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

போரால் விதவைகளாக்கப்பட்ட, அங்கவீனர்களாக்கப்பட்ட அல்லது நிர்க்கதிக்குள்ளான பெண்களும், அநாதைகளாக்கப்பட்ட சிறுவர்களும் தமது வாழ்வாதாரத்தை முன்கொண்டு செல்வதில் பல இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். இவர்கள் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டுசெல்வதில் பல சவால்களைத் தோற்றுவித்துள்ளன.

எனவே, இவ்வாறானவர்களுக்குப் பிரதேச செயலக ரீதியில் வாழ்வாதாரக் கொடுப்பனவுகளை வழங்க உதவி புரிவதும் சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தப்படுத்தலும் அவசியம்.

போரின் விளைவால் தந்தையரை இழந்த பிள்ளைகள் போதிய வருமானமின்மை, வழிகாட்டல் அற்ற நிலை, வறுமை மற்றும் பாதுகாப்பற்ற சூழ்நிலைகளால் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாமல் இருக் கின்றனர். அத்தோடு அதிக அளவில் பாடசாலை இடை விலகல்கள் அதிகரித்துள்ளன.

தொழில் நியமனங்கள், இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளில் அரசியல் தலையீடு காரணமாக குறித்த சேவைகளை சமூகத்தினால் பெறமுடியாதுள்ளது.

எனவே, மேற்கூறப்பட்ட செயற்பாடுகளின்போது அந்தந்தப் பிரதேசவாசிகள் முதன்மைப்படுத்தப்படுதலும், இனவிகிதாசார விடயங்கள் பேணப்படுதலும் மிக அவசியம்.

இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீள்குடியேறுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். அவர்களுக்கான அனுமதி மறுக்கப்படுவதும் வேறு பிரதேசங்களில் குடியமர்த்தப்படுதல் போன்ற சிக்கல்களும் இன்னும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. அத்தோடு மீள் குடியமர்த்தப்படவேண்டிய இடங்களில் தனியார் நிறுவனங்களுக்கு விற்பதும் குத்தகைக்கு விடுவதும் தடுக்கப்படல் வேண்டும். உதாரணமாக - சம்பூர், கிண்ணியா, வாகரை, ஆகிய பகுதிகளில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட வீடுகள் இதுவரை கையளிக்கப்படவில்லை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-31)

# வாகன விபத்தில் ஒருவர் சாவு

கந்தளாய்,மார்ச் 10

ஹபரணை - கந்தளாய் வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிதுள்ளுதுவ எனும் பிரதேசத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அம்புலன்ஸ் ஒன்றும் டிராக்டர் ஒன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அம்புலன்ஸில் பயணித்த அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். அதன் சாரதி காயமடைந்துள்ளார்.

கடந்த மூன்று மாதத்துக்குள் ஹபரணை - கந்தளாய் வீதியில் 3 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளது. இந்த விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மூடப்பட்ட நிலையில் தாய், சேய் கட்டடம்

மட்டக்களப்பு,மார்ச் 10

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேசத்திலுள்ள மாவிலங்கத்துறை ஸ்ரீமதுராபுரம் கிராமத்தில் கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக நிர்மாணிக்கப்பட்ட தாய், சேய் நிலையக் கட்டடம் பாவிக்கப்படாமல் மூடப்பட்ட நிலையிலுள்ளது.

இந்த நிலையக் கட்டடம் மண்முனை, மாவிலங்கத்துறை, ஒல்லிக்குளம் போன்ற கிராம மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டது.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், தாய், சேய் சுகாதார நடவடிக்கைகளுக்காக பல மைல் தூரம் நடந்து தாழங்குடாவுக்கு செல்ல வேண்டியுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டே இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது. இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேலாகியும் திறக்கப்படாமல் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளது.

இது தொடர்பாக மண்முனைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் கிறிஸ்டினா சசிகரனிடம் கேட்டபோது, இந்தக் கட்டடம் மண்முனைப்பற்று பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டு மண்முனைப்பற்று சுகாதார அலுவலகத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இந்தக் கட்டடத்துக்கு மின்சார, தண்ணீர் வசதிகள் இன்னமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால்தான் இந்தக் கட்டடம் திறக்கப்படாமலுள்ளது. இந்த வசதிகளை ஏற்படுத்த நாம் முயற்சித்துக்கொண்டிருக்கின்றோம் என்று அவர் தெரிவித்தார். (ச)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் மு.இராசலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் சின்னையா முருகர்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய சகோதரத்துவம்**
யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை, மிருசுவில்

(14680) (2-6-7)

## மரண அறிவித்தல்

### நாகராஜா குணரத்தினம் (மகேந்திரன் செட்டியார்)

இல.07, வெங்கடேசன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராஜா குணரத்தினம் 09.03.2012 அன்று இறைவனடி சேர்ந்தார்.



அன்னார் காலஞ்சென்ற நாகராஜா - வேலாத்தை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் - சிவாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் லிங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் காயத்திரி (சுவிஸ்), சாவித்திரி, சக்தி மயூரன் (Capital Pharma Corner. Trincomalee) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெயக்குமாரின் (சுவிஸ்) அன்பு மாமனும் ஜெகனியா, ஜெயங்கா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற வர்களான சண்முகநாதன், கதிர வேலு, வெற்றிவேல், லோகநாதன் மற்றும் ருக்மணியின் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மங்களேஸ்வரியின் (திருகோணமலை) அன்புமைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.07, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

(15488) (2-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஐ.சி.டி.எல் கற்கையை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஜனாதிபதி செயலகத்தின்கீழ் இயங்கும்இலங்கைத் தகவல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA) நிறுவனத்தினால் அரச ஊழியர் களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கோடு முன்னெடுக்கப்பட்ட ICDL கற்கை நெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஐ.சி.ரி.ஏ. நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்ப அறிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 'யாழ். கேற்வே' நிறுவனத்தில் ஐ.சி.டி.எல். கற்கை நெறியைப் பயின்ற 160 அரச அலுவலர்களும், கணினி முறைமை ஒழுங்கமைப்பாளர் பயிற்சி நெறியைப் பயின்ற 16 அரச ஊழியர்களும் அன்றைய தினம் சான்றிதழ்களைப் பெறவுள்ளனர்.

அரச அலுவலகங்களில் வெகு விரைவில் அறிமுகப்படுத்தப்பட வுள்ள ''அரச அலுவலகங்களுக் கான வலைப்பின்னல்'' பிரயோகங்கள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றும் அன்றைய தினம் நடத்தப் படவுள்ளது. (ஒ)

## சுயதொழில் கடன் வழங்கும் திட்டம்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரி சுயதொழில் முயற்சியாண்மைக் கடன் வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

தொழில்நுட்பவியல்கல்லூரி, தொழிற்பயிற்சிகைத் தொழில் அதிகாரசபை , இளைஞர்கள் சேவை மன்றம், தேசிய கைத்தொழில் அதிகார சபை போன்றவற்றின் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் கடன் வழங்கப்பட உள்ளது.

நீர்க்குழாய் பொருத்துனர், நிர்மாணத் தொழில்நுட்பவியலாளர், இலத்திரனியலாளர், பொருத்து பொறியியல்க் கவியிய லாளர், கைத்தொழில் துறை மின்னியக் கவியலாளர், மோட்டார் வாகனத் திருத்துனர், மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் பழுது பார்த்தல் , வெல்டிங் ,கணினிப் பயிற்சி, ஆடை வடிவமைத்தல் மற்றும் அழகுக்கலை போன்ற கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து வெளியேறிய மாணவர்களுக்குமுன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்திலிணைய விரும்பும் மாணவர்கள் யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் நேரடியாகவோ தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற முடியும் என யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரிப் பணிப்பாளர் என். யோகராஜன் அறிவித்துள்ளார். (ந-16)

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பவதி பஞ்சலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை,
சென். அந்தனீஸ் மகாவித்தியாலயம், கொழும்பு-03)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி பஞ்சலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை, சென். அந்தனீஸ் மகாவித்தியாலயம், கொழும்பு-03) 04.03.2012 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் பஞ்சலிங்கம் (ISSF, Colombo) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ரங்கூன் சரவணமுத்து-சின்னம்மா தம்பதியரின் மகளும், உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி, அகிலாம்பிகை கணேசன் (கனடா), சாவித்திரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகலிங்கம் (Retd BOC), ஈஸ்வரி (Australia), காலஞ்சென்ற சற்குணேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், திரிபுரசுந்தரி (கனடா), வரதன் (கனடா), யசோதரை, விமலன், சுரேஷ்குமார், மோகன் ஆகியோரின் சித்தியும், ஸ்ரீ விக்னேஸ்வரன், கலைமகள், திருமகள் (Australia), சிவகாமி, ரேவதி, ரவீந்தி ரன்,செந்தில் செல்வி ஆகியோரின் மாமியும், அபிராமி, அர்ச்சனா, கிருஷ்ணா, தனேஸ், ஆரணி, அபிராமி, மயூரன், சரண்யா, சிந்தூரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் மு.ப 10. மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு, பி.ப 12.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

28, Fredrica Road,
Colombo-06.

தகவல்:
குடும்பத்தினர்,

## அத்திபாரக் கற்கை நெறி

யாழ்ப்பாணம்
மார்ச் 10

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால்நடத்தப்படும்விஞ்ஞானப் பட்டமாணி மற்றும் அத்திபாரக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறிக்கு க.பொ.த உயர்தரத்தில் 3பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுடையவர்கள் யாழ்.பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் இன்று விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (ந-14)

**பாலாடு விற்பனைக்கு**


சணல் ஆடு, கடாக்குட்டி, மூன்றரை மாதம் நிரம்பிய அல்சேசன் பெண் நாய்க்குட்டியும் (சகல ஊசிகளும் போடப்பட்டுள்ளன) விற்பனைக்குண்டு.

No: 57, K.K.S. Road, Kokuvil West, Kokuvil [பூநாறி மரத்திற்கும் Kokuvil சந்திக்கும் இடையில்]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### சூசைப்பிள்ளை றேமண்ட் ஜெயப்பிரகாசம்

மறைவு : 06-03-2011



''உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்''

- யோவான் 11:25

அப்பா, அழுது புரண்டாலும் மீண்டு வரமாட்டீர்களென அறிவு சொன்னாலும் மனம் கேட்குதில்லையே, மாதங்கள் பன்னிரண்டும் கண்ணீரில் கரைந்து விட்டது. வேரென நீங்கள் இருந்தீர்கள். இன்று வீழ்ந்து விட்டேன் உங்கள் துணைவி நான். அப்பா நீங்கள் இல்லாமல் இந்த வருடம் முழுவதும் எப்படி வாழ்ந்தோமென பிள்ளைகள் நாம் ஏங்கி கலங்குகிறோம். மாமா எம்மையும் பிள்ளைகளாக நேசித்த நீங்கள் இன்னும் சிலகாலம் எம்மோடு இருக்கவில்லையே என மருமக்கள் கலங்கி நிற்கின்றோம்.


ஆசையுடன் கொஞ்சி பாடம் சொல்லித்தர நீங்கள் வேண்டுமென்று பேரப்பிள்ளைகள் நாம் விரும்பி அழுகின்றோம். அண்ணா அரவணைத்துப் புத்தி சொல்ல நீங்கள் இருந்திருக்க வேண்டுமென்று சகோதரர்கள் அழுது புலம்புகிறோம். ஆதரித்து வழிகாட்ட அத்தான் இல்லையென்று மைத்துனர்கள் எண்ணி அழுகின்றோம்.

உறவு, நட்பை பேணிக்காத்த உங்களது இழப்பை ஏற்றுக் கொள்ள முடியாமல் உறவினரும் நண்பர்களும் கலங்கி நிற்கின்றோம். அப்பா இவ்வுலகில் எம் உயிர் உள்ளவரை எம்மில் கலந்திருக்கிறீர்கள். மறு உலகில் இறைவன் பாதத்தில் நீங்கள் இளைப்பாற பரமனை இரந்து வேண்டுகிறோம்.

உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

(C19708) (6,7,10)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
### சூசைப்பிள்ளை அகஸ்ரின்

(அதிபர் கிளி/கிளாலி றோ.க.த.க. பாடசாலை)

கடந்த (08-03-2012) அன்று அமரத்துவம் அடைந்த கிளாலி றோ.க.த.க பாடசாலை அதிபர் சூசைப்பிள்ளை அகஸ்ரின் அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்கெடுத்து, அன்னாரின் ஆத்ம சாந்திக் காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டம்.

(14060) (6,7,10)

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை அகஸ்ரீன்

*(அதிபர், கிளி/கிளாலி றோ.க.த.க.பாடசாலை)*

கிளாலியைப் பிறப்பிடமாக வும், கொழும்பைத் தற்காலிக வசிப்பிடமாக வும் கொண்ட சூசைப்பிள்ளை அகஸ்ரீன் (அதிபர், கிளி/கிளாலி றோ.க.த.க பாடசாலை) கடந்த (08.03.2012) வியாழக்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவல் சூசைப்பிள்ளை - அக்கினேஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பி.என்.மரியதாஸ் (ஜே.பி) மற்றும் யோகராணி (ராணி) தம்பதியரின் அன்பு மருமகனும் அன்ரனீற்றாவின் (றஞ்ஜினி) பாசமிகு கணவரும், சுகிறொஜஸ்னி (றொக்சி, மாணவி, கொழும்பு சைவ மங்கையர் கழகம்), மரியறொஜஸ்சன் (றொக்சன், மாணவன், புனித பீற்றர்ஸ் கல்லூரி - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மரியபுஸ்பம், மரியநாயகம், காலஞ்சென்ற மாசிலாமணி மற்றும் ஜெபரட்ணம் (பிரதேச அஞ்சல் அத்தியட்சகர், யாழ்ப்பாணம்), அருள்ரூபன் (உதவி அஞ்சல் அதிபர், வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் எட்மன் ராஜன் (லண்டன்), திரேஸ் ராணி (லண்டன்), மரினா (றாஜி), மரியநேசன் (கொழும்பு), அன்ரன் மைக்கல் (பிரான்ஸ்), கிறிஸ்ரீனா (றஜனி - ஜேர்மனி), செமஸ்ரீனா ஆகியோரின் அன்பு மைத்துனருமா வார்.

அன்னாரின் பூதவுடல் மிருசுவில் இல்லத்தில் இருந்து இன்று (10.03.2012) சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் இறுதிச் சடங்கிற்காக கிளாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் மிருசுவில் புனித நீக்கிலஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டி வீதி,
மிருசுவில்.

(15491) (2-7-21)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# திபெத்தில் தீக்குளிப்புச் சம்பவங்கள்; தூண்டுகிறாராம் தலாய்லாமா

## கண்டிக்கிறது சீனா

பீஜிங், மார்ச் 10

'உயிர்த் தியாகம் செய்தாவது திபெத்தை மீட்போம்' என்ற தலாய்லாமாவின் போதனையால் தான் திபெத்தியர்கள் பலர் தீக்குளித்து வருகின்றனர் என்று தலாய்லாமாவுக்கு சீனா கண்டனமும், எச்சரிக்கையும் செய்துள்ளது.

திபெத்தை சீனா கைப்பற்றி வைத்திருக்கிறது. சீனாவின் ஒரு பகுதிதான் திபெத் என்று சீன ஆட்சியாளர்கள் கூறி வருகின்றனர். திபெத்தை விட்டு சீனா வெளியேற வேண்டும். திபெத், திபெத்தியர்களுக்கே என்ற கோஷத்துடன் போராட்டம் நடந்து வருகிறது. திபெத்துக்கு வெளியே வசிக்கும் திபெத்தியர்கள் கூட, சீனாவை எதிர்த்துப் போராடி வருகின்றனர். திபெத் விடுதலைப் போராட்டத்துக்கு மூளையாக இருந்து

**திபெத்தியர்கள் மத்தியில் திபெத் விடுதலை பற்றி பேசிவரும் தலாய்லாமா, உயிர்த் தியாகங்களை செய்தாவது, திபெத்தை மீட்போம் என்று முழக்கமிட்டு வருகிறார்.**

செயற்பட்டு வருபவர் புத்த மதத் தலைவர் தலாய்லாமா.


இதனால் தலாய்லாமா திபெத்தில் வசிக்க சீனா தடை விதித்துள்ளது. அவர் தற்போது வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்தவாறு, ஆங்காங்கே தங்கிக் கொள்கிறார். திபெத்தியர்கள் மத்தியில் திபெத் விடுதலை பற்றி பேசிவரும் தலாய்லாமா, உயிர்த் தியாகங்களை செய்தாவது, திபெத்தை மீட்போம் என்று முழக்கமிட்டு வருகிறார்.

இந்தநிலையில் சீனாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திபெத்தில் தீக்குளிப்புச் சம்பவங்கள் நடக்கின்றன. அண்மைக்காலமாகத் தீக்குளிப்புச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இது சீன அரசுக்குக் கவலையை அளித்துள்ளது. இதுகுறித்து சீன உயர் அதிகாரி ஜெகாங் கூறியதாவது:-

திபெத்தில் தீக்குளிக்கும் சம்பவம் அதிகரித்துவருவது வேதனை அளிக்கிறது. தலாய்லாமாவின் தவறான போதனையில் மயங்கி, தீக்குளித்து வருகின்றனர். தற்கொலைக்கு மறைமுகத் தூண்டுகோலாக இருப்பவர் அவர்தான். சிலர் தங்களுக்குத் தாங்களே தீக் குளித்து இறந்தனர்.

போலிஸ் விசாரணையில் அவர்களில் சிலர் குற்றவாளிகள் என்றும், மணநிலை பாதிக்கப்பட்டவர்கள் என்றும் தெரியவந்தது. எனினும், தீக்குளித்துத் தற் கொலை செய்து கொண்ட இறந்தவர்களின் குடும் பத்துக்கு சீன அரசு உரிய இழப்பீட்டைவழங்கியுள்ளது. மனிதாபிமான அடிப்படை யிலேயே இந்த உதவி அளிக் கப்பட்டது. எனவே உயிர்த்தியாகம் என்று பேசி திபெத்தியர்களை தற்கொலைக்குத் தூண்ட வேண்டாம் என்று தலாய்லாமாவை எச்சரிக்கிறோம். இவ்வாறுஅவர்கூறினார்.

## பிரான்ஸில் பொழிந்த தங்க மழை



தங்கம் விலை விண்ணைத் தொட்டுக் கொண்டிருக்கும் போது பிரான்ஸ் நாட்டின் ஒரு வீட்டின் கூரையில் இருந்து தங்க மழை பொழிந்திருக்கிறது.

பிரபல மதுபான தொழிலதிபருக்குச் சொந்தமான பங்களாவில் அதன் உரிமையாளர் தற்போது இல்லாத நிலையில் பழைமையான அந்த கட்டடத்தை புதுப்பிக்கும் பணி தற்போது நடந்து வருகிறது. பணியின்போது தொழிலாளர்கள் ஓர் அறையின் கூரைச் சுவரை கடப்பாரையால் உடைத்தனர்.

அப்போது கூரையில் இருந்து தங்கக் காசுகள் கொட்டத் தொடங்கின. சுமார் 4.5 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்க காசுகள் புதையலாகக் கொட்டியுள்ளன. தங்கக்காசு ஒவ்வொன்றும் 20 டொலர் மதிப்புள்ளவை. பிரான்ஸ் அரசு அதிகாரிகள் அந்தப் புதைய லைக் கைப்பற்றினர்.

அதன் சொந்தக்காரர் இந்தக்கட்டடத்தில் மேலும் தங்கக் காசுகளை எங்கு வைத்திருக்கிறேன் என்று உறவினர்களிடம் பகிர்ந்து கொள்ளவோ, எழுதி வைக்கவோ இல்லை. எனவே கட்டடத்தில் மேலும் வேறு இடங்களிலும் தங்கம் இருக்குமா? என்பதும் தெரியவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பெருமைப்படும் பிரிட்டன் மக்கள்

பிரிட்டன் மக்களிடம் தங்கள் நாட்டின் பெருமை குறித்து எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பில், மக்கள் தாங்கள் பிரிட்டிஷ் நபராக இருப்பதால் பெருமிதம் அடைவதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்துக் கணிப்பில், பிரிட்டன் மக்கள் 45 சதவிகிதம் பேர் பிரிட்டனில் பிறந்தததற்கு பெருமைப் படுகின்றோம் எனவும் 28 சதவிகிதம் பேர் தங்களின் அரச குடும்பத்தார் குறித்து பெருமிதம் அடைகின்றோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும்பிரிட்டனில் நடைமுறையிலிருந்து வரும் தேசிய சுகாதாரச் சேவை குறித்து அதிகமான மக்கள் பெருமிதம் கொள்கின்றனர்.



கொங்கோ நாட்டில் நடைபெற்ற வெடிகுண்டுச் சம்பவத்தில் அந்தப் பகுதியிலிருந்த தேவாலயம் முற்றிலும் சேதமடைந்தது. இருப்பினும் அங்கிருந்த சிலை ஒன்று எவ்வித பாதிப்பும் இல்லாமல் தப்பியது.

## இரண்டு மணிநேரம் தடைப்பட்டது பேஸ்புக்

பீஜிங், மார்ச். 10

தொழிநுட்பச் சிக்கல்கள் காரணமாக பேஸ்புக் இரண்டு மணிநேரம் தடைப்பட்ட சம்பவம் பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஆனால் இது ஓலர் சைபர் தாக்குதல் என்று வெளியான செய்தியை பேஸ்புக் வலையமைப்பு முற்றாக மறுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரண்டு மணி நேரம் ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவில் தடைப்பட்டிருந்ததாகத் தெரிய வந்துள்ளது.

உலகம் முழுவதும் 850 மில்லியன் பேரைக் கொண்டுள்ள மாபெரும் சமூக வலைத்தளமாக பேஸ்புக் தொழிற்படுகின்றது.

டுனிசியா, தென்னாபிரிக்கா, எகிப்து, துருக்கி, ரஷ்யா ஆகிய நாடுகளிலும் பேஸ் புக் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன என குற்றம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பேஸ்புக்கின் பேச்சாளர் தெரிவித்ததாவது:-

தொழிநுட்பக் குறைபாடு காரணமாக எதிர்பாராத விதமாக ஐரோப்பா உட்பட சில நாடுகளில் பேஸ்புக் சேவை தடைப்பட்டது.

ஆனால் குறித்த சிக்கல் உடனடியாக திருத்தி அமைக்கப்பட்டது. ஏற்பட்ட தடங்கல்களுக்கு வருந்துகின்றோம் என்று தெரிவித்தார்.

## தரமற்ற செயற்கை மார்பக உள்ளீடு தயாரித்தவருக்கு சிறைத்தண்டனை

பிரான்ஸ் நாட்டில் பிஜபி என்ற நிறுவனம் தரமற்ற சிலிகான் ஜெல்லை வாங்கி, அதனைச் செயற்கை மார்பகத்துக்கு உள்ளீடாக தயாரித்தவரான ஜீன்-கிளாட் மாஸ் என்பவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தரமற்ற இந்த உள்ளீடுப் பொருளை விற்றதால் பெண்களுக்கு ஏற்பட்ட காயத்துக்கும், துன்பத்துக்கும் காரணமான ஜீன் கிளாட் மாஸ் என்பவருக்கு நூறாயிரம் யூரோ அபராதம் விதிக்கப்பட்டது. இந்த அபராதத் தொகையை அவர் செலுத்தாத காரணத்தினால் கைது செய்யப்பட்டு மார்செயில்ஸில் உள்ள பாமெட் சிறையில் அடைக்கப்பட்டார்.

பிஜபி நிறுவனத்தை கடந்த 1991ஆம் ஆண்டில் ஜீன் கிளாட் தொடங்கினார். பின் அழகுக்காக உருவத்தை மெருகேற்றும் பழக்கம் பெண்களிடையே பரவி வருவதைக் கண்ட மாஸ் செயற்கை மார்பகத்துக்கான பிஜபி என்ற உள்ளீடுப் பொருளைத் தயாரிக்கும் நிறுவனத்தை ஆரம்பித்தார்.

மாஸ் தனது நிறுவனத்தில் தரம் குறைந்த, தொழிற்சாலையில் பயன்படுத்துகின்ற சிலிக்கான் ஜெல்லைப் பயன்படுத்தியதால் 16 பேருக்கு மார்பகப் புற்று



நோய் ஏற்பட்டது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக் கப்படவில்லை. 65 நாடுக ளில் 4,00,000 முதல் 5,00,000 பெண்கள் இந்த பி.ஜ.பி உள்ளீடைப் பயன்படுத்தினர். இதுவே உலகின் மூன்றாவது பெரிய சிலிக்கான் உள்ளீடு தயாரிப்பு நிறுவனமாகும்.

பிரான்ஸ் அரசு இந்த பிஜபி உள்ளீடை அகற்றி விடுமாறு அதனைப் பயன்படுத்தி வரும் 30,000 பெண்களுக்கு அறிவுரை வழங்கியது. இதனைத் தொடர்ந்து ஜேர்மனியும், செக் குடியரசு நாடும் இந்த அறிவுரையை வழங்கியது. ஆனால் பிரிட்டன் இதனைப் பின்பற்றவில்லை.

இந்தத் தரம் குறைந்த உள்ளீட்டால் ஜெல்லின் அளவு 75 சதவீதம் மட்டுமே இருந்தது. இதனால் நிறுவனத்துக்கு 1.3 மில்லியன் டொலர் தயா ரிப்புச் செலவு குறைந்து இலா பம் அதிகரித்ததாக முன்னாள் நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பணிப்பெண்ணை துன்புறுத்திய இந்தியத் தூதரக அதிகாரி

அமெரிக்காவில் இந்திய பணிப்பெண்ணை கொடுமைப்படுத்திய குற்றத்திற்காக இந்தியத் தூதரக அதிகாரிக்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மேன்ஹாட்டன் பகுதியில் இந்திய தூதரக அலுவலகத்தில் பத்திரிகை, கலாசாரம், தகவல் தொடர்புகளை கவனிக்கும் கவுன்சிலராகப் பணி புரிந்த நீனா மல்கோத்ரா மற்றும் அவரது கணவனும் இந்தியாவிலிருந்து சாந்தி குர்ரங் என்ற பெண்ணை வீட்டு வேலை செய்ய அழைத்து வந்தனர் .

அமெரிக்கா வந்த பின் தனது கடவுச்சீட்டைப் பறித்துக் கொண்டதாகவும், நீண்ட நேரம் வேலை பார்த்தும் குறைந்த ஊதியமே வழங்கியதாகவும், போதுமான உணவு அளிக்கவில்லை என்றும், தூங்குவதற்கு உரிய இடம் அளிக்கவில்லை என்றும், இன்னும் பல கொடுமைகளைச் செய்ததாகவும் சாந்தி குற்றம் சாட்டி வழக்குத் தொடுத்தார்.

இந்த வழக்கை விசாரித்த நியூயோர்க் நீதிமன்ற நீதிபதி சாந்தியை கொடுமைப்படுத்திய நீனா மல்கோத்ரா 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீடு வழங்க வேண்டும் என உத்தரவிட்டார்.

மார்ச் 7ஆம் திகதிக்குள் இது தொடர்பான மறுப்பை பிரதிவாதிகள் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் இன்று வரை எவ்வித மறுப்பும் தெரிவிக்கப்படாததால் 1.5 மில்லியன் டொலர் இழப்பீடு வழங்க வேண்டும் என்பதையே நீதிபதி இறுதித் தீர்ப்பாக வழங்க உள்ளார்.

## சீனாவின் உதவி அவசியம்

உலகளவில் நடைபெறும் சர்வதேச பிரச்சினைகளை அமெரிக்கா மற்றும் சீனாவின் உதவியின்றி தீர்க்க முடியாது என்று அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார்.

வொஷிங்டனில் நடைபெற்ற வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்த கூட்டத்தில் ஹிலாரி பேசும் போது மேலும் கூறியதாவது:

அமெரிக்கா, சீனாவுடன் நல்லதொரு நட்பு நிலையை பேணி வருகிறது. சர்வதேச அளவிலான பிரச்சினைகளை தீர்ப்பதில், இந்த இரு நாடுகளின் பங்கு அதிகமானது.- என்றார் .

## பின்லேடனின் மனைவியர் கைது

பாகிஸ்தானில் சட்ட விரோதமாக வசித்து வந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு பின்லேடனின் 3 மனைவிமார் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் இராணுவ பயிற்சி மையம் அருகில் உள்ள வீட்டில் ஒசாமா பின்லேடன் வசித்து வந்தார். கடந்த ஆண்டு மே 2ஆம் திகதி அமெரிக்க அதிரடிப் படையினர் அந்தக் கட்டடத்தைச் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தி பின்லேடனைச் சுட்டுக் கொன்றனர். பின் லேடனுடன் தங்கியிருந்த 3 மனைவிகள், குழந்தைகள், பேரக் குழந்தைகளை அமெரிக்க வீரர்கள் கைது செய்து பாகிஸ்தான் பொலிஸிடம் ஒப்படைத்தனர். அவர்களை இரகசிய இடத்தில் வைத்து, கடந்த 6 மாதங்களுக்கு மேலாக பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர். விசாரணை முடிந்து 3 பெண்களும் குழந்தைகளுடன் துபாய், ஏமன் செல்லத் திட்டமிட்டுள்ளனர் என அண்மையில் தகவல் வெளியானது.

இந்தநிலையில், பாகிஸ்தானில் சட்டவிரோதமாக நுழைந்து குடியிருந்ததாக அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சட்டவிரோதமாகப் பாகிஸ்தானில் தங்கியிருந்த குற்றத்துக்கு பின்லேடன் மனைவிகள் மீது நடவடிக்கை எடுக்க சட்ட நிபுணர்கள், புலனாய்வு அமைப்பினர் முடிவு செய்தனர். அதன்படி, 3 பேரும் குழந்தைகளுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். நீதிமன்ற உத்தரவின் பேரில் பொலிஸ் விசாரணையில் உள்ளனர்- என்றார் அவர்.


# வெளிநாட்டு இராணுவத் தலையீடு சிரியா நிலைமையை மோசமாக்கும்

## கொபி அனான் எச்சரிக்கை

டமாஸ்கஸ், மார்ச் 10
சிரியாவில் எந்தவொரு வெளிநாட்டு இராணுவத் தலையீடும் நிலைமையை மேலும் மோசமாக்கும் என்று சிரியாவுக்கான ஐ.நா மற்றும் அரபு லீக்கின் சிறப்புத் தூதுவரான கொபி அனான் எச்சரித்துள்ளார்.

டமாஸ்கஸுக்கான தனது பயணத் திட்டம் குறித்து தெரிவித்தபோதே கொபி அனான் இவ்வாறு கூறினார்.

சிரியாவின் தற்போதைய நிலைமையை அரசியல் ரீதியாக மட்டுமே தீர்த்து வைக்கப்பட முடியும் . சிரிய மக்களின் ஆசைகளுக்கு மரியாதை அளிக்கும் வகையில், தீர்வு காண சிரியாவின் அரசையும், எதிர்க்கட்சியையும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



இதேவேளை சிரியாவில் ஜனாதிபதிக்கு எதிராக நடந்து வரும் போராட்டத்தில் 8500 பேர் உயிரிழந்துள்ளனர் என பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் 6,195 பேர் பொதுமக்கள் என்றும், 1,835 பேர் இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸார் என்றும், 428 பேர் புரட்சிப் படையை சேர்ந்தவர்கள் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது. (ந)

**சிரிய மக்களின் ஆசைகளுக்கு மரியாதை அளிக்கும் வகையில், அரசியல் ரீதியாக தீர்வு காண சிரியாவின் அரசையும், எதிர்க்கட்சியையும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.**

# சிரியாவில் முதன் முறையாக அமைச்சர் ராஜிநாமா

பயங்கரவாத ஆட்சியின் கீழ் தான் சேவையாற்ற விரும்பவில்லை என்று கூறி சிரியாவில் எண்ணெய் வளத் துறையின் துணையமைச்சராக இருந்த அப்து ஹுசா முதீன் தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

அது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

அரசை எதிர்த்து நடக்கும் மக்கள் புரட்சிக் கூட்டத்தில் தான் சேரப் போகின்றேன். மக்களின் புரட்சிக் கூட்டத்தில் தான் இணைந்தால் என் மீதும், எனது குடும்பத்தினர் மீதும் பொய் வழக்குகள் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபடலாம். ஜனாதிபதி அசாத்துக்கு ஆதரவாக ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் குரல் கொடுக்கலாம். ஆனால் இந்த நாடுகள் சிரிய மக்களுக்கு நண்பர்களாக மாறிவிட முடியாது.



மக்களைக் கொன்று குவிக்கும் சிரிய அரசின் பங்குதாரர்களாகத் தான் இருக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார். மக்கள் புரட்சி தொடங்கி ஒரு வருடங்கள் கடந்த நிலையில் தற்போது தான் முதன் முறையாக அரசின் உயரதிகாரி ஒருவர் சிரியாவில் பதவி விலகியுள்ளார். (ந)

# தகவல் தொடர்பை சூரியப் புயல் பாதிக்குமாம்

வொஷிங்டன், மார்ச் 10
சூரியனில் உருவாகியுள்ள புயல், பூமியின் காந்தக் களத்தைதத் தாக்கியுள்ளது. இதனால் மின் தொகுப்பை இணைத்து வழங்கும் கிரிட், செயற்கைக்கோள் இயக்கம் மற்றும் தகவல் தொடர்பின் அதி நவீன சேவை, விமானப் போக்குவரத்து ஆகியவை பாதிக்கப்படலாம் என விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

சூரியனின் மேல்மட்டத்தில் எழுந்துள்ள அதிர்வலைகள் அல்லது சூரியப் புயல், நேற்றுமுன்தினம் பூமியின் காந்தக் களத்தை தாக்கியது. இது புழுதிப் புயல் போல் பிரமாண்டமான தோற்றத்துடன் பூமியை நோக்கி அதி வேகமாக வந்தது. சூரியனின் மேற்புறத்தில் பல்வேறு வேதியியல் மாற்றங்களால், சூரியக் கதிர்கள் பெருமளவில் கொந்தளித்து காணப்படுகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் இல்லாத வகையில் சூரியனின் மேற்புறம் தற்போது சீற்றத்துடன் உள்ளது.



நேற்றுமுன்தினம் தாக்கிய சூரியப்புயல் மிகப் பெரியது எனக் கூறப்படுகிறது. இரு பிரமாண்டமான 'குமிழி' போன்ற தோற்றத்துடன் தாக்கியதாக அமெரிக்காவின் 'நாசா' விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இந்தப் புயல் சிதறல்கள் மணிக்கு, நான்கு கோடி மைல் வேகத்தில் பயணித்தன எனவும் தெரிவித்தனர். இதனால் விமானப் போக்குவரத்து, செயற்கைக்கோள் செயற்பாடுகள், மின் தொகுப்புகள் ஆகியவை பாதிக்கப்படலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். குறிப்பாக செயற்கைக்கோள் செயற்பாட்டில் அதிக மின் அழுத்த பாதிப்புணால் ஏற்பட வாய்ப்பு உண்டு. அதேபோல் மின்சாரம் கடத்தும் பெரிய அளவிலான கிரிட் மீது, மற்றொரு அதிக சக்தி மின்சாரம் தாக்கும்போது இந்த கிரிட் பாதிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.(ந)

## மாணவர்களையும் பாதித்தது




எஸ்டோனியா நாட்டில் 20 சதவீத அளவிற்கு சம்பள உயர்வு அளிக்க கோரி நாடு முழுவதும் ஆசிரியர்கள் மூன்று நாள்கள் வேலை நிறுத்தப்போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் நாடு முழுவதும் மாணவர்கள் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

# இயற்கையின் சீற்றம்

**பனிப்புயல்**

கனடாவில் உள்ள கிழக்கு நியு பவுண்ட்லாந்தில் பனிப் பொழிவும், பனிப்புயலும் அதிகமானதால் மக்கள் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

அத்துடன் சென் ஜோன்ஸ் பகுதியில் பஸ் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டது.

அந்த இடத்துக்கு அருகில் உள்ள மவுண்ட் பேர்ல் பகுதியில் அரச சேவைகள் சில மணிநேரங்கள் தடைப் பட்டன.

இந்தப் பனிப்புயல் குறித்து கனடாவின் சுற்றுச் சூழல் துறையின் எரிகல் துறையைச் சேர்ந்த பால் கிரீலே கூறியதாவது;

சென் ஜோன்ஸ் பகுதியில் 18 சென்றர்மீற்றர் உயரத்துக்கும், பூரின் மற்றும் போனாவிஸ்டா தீபகற்பங்களில் 20 சென்ரிமீற்றர் அளவுக்கும் பனி படர்ந்திருக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் பனிப்புயல் மணிக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் வீசியது. கால நிலை விரைவாக மாறி வருவகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**வெள்ளப்பெருக்கு**

ஆஸ்திரேலியாவில் பெய்த கனமழையால் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் மக்கள் பெரிதும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர்.

அளவுக்கு அதிகமாகப் பெய்த கனமழையால் நகரின் முக்கிய வீதிகள் ; தண்டவாளங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் ரயில்கள், வாகனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டன. மேலும் பலத்த காற்றுடன் மழை பெய்ததால் சில விமானப் போக்குவரத்தும் ரத்து செய்யப்பட்டது.

வெள்ளத்தில் சிக்கித் தவித்த 40க்கும் மேற்பட்டோரை மீட்புப் படையினர் மீட்டனர். 250க்கும் மேற்பட்ட மீட்புப் படை வீரர்கள் தொடர்ந்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ந)

# 1 திருமணமான மணி நேரத்தில் விவாகரத்து

## மலேசியாவில் ஆச்சரியம்


புதிதாகத் திருமணம் செய்த மனைவி கார் கேட்ட காரணத்தினால், திருமணமான ஒரு மணி நேரத்திலேயே விவாகரத்துச் செய்த சம்பவம் ஒன்று மலேசியாவில் இடம்பெற்றுள்ளது.

லீ(வயது- 23)என்பவருக்கு 27 வயதான வாங் என்பவருடன் திருமணம் பதிவாளர் அலுவலகத்தில் நடந்தது. அப்போது அங்கு கார் நிறுவனத்தின் உரிமையாளர் ஒருவர் வந்தார். லீ தனது கணவர் வாங்கிடம் புதிய கார் ஒன்றை வாங்கித் தருமாறு கேட்டார்.

அதற்கு வாங் மறுப்புத் தெரிவிக்கவே, இவர்களின் சண்டை முற்றியது. கார் வாங்கித் தராவிட்டால், விவாகரத்து செய்து விடுவதாக லீ மிரட்டினார். மிரட்டியும் வாங் தொடர்ந்து மறுத்ததால் அவர்கள் விவாகரத்துப் பிரிவுக்குச் சென்று அதற்கான மனுவைப் பூர்த்திசெய்து கொடுத்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ந)

# ஆப்கன் தாக்குதலில் 6 பிரிட்டிஷ் வீரர்கள் சாவு

## கமரூன் கடும் கண்டனம்



ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் நிகழ்த்திய வெடி குண்டுத் தாக்குதலில் 6 பிரிட்டிஷ் வீரர்கள் உயிரிழந்தனர். இதற்கு பிரிட்டன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆப்கனின் ஹெல்மந்த் மாகாணத்தில் பிரிட்டிஷ் வீரர்கள் இராணுவ வாகனத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது தீவிரவாதிகள் இராணுவ வாகனத்தின் மீது நடத்திய திடீர் வெடி குண்டுத் தாக்குதலில் 6 வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு பிரிட்டன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், ''இது எங்களுக்கு மோசமான நாள் '' எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆப்கானிஸ்தானில் தங்கி தீவிரவாதிகளுக்கு எதிராகப் போரிட்டு வருகின்றனர். இந்நிலையில் 2014ஆம் ஆண்டுக்குள் அனைத்து வீரர்களும் திரும்பி அழைக்கப்படுவர் என அமெரிக்கா தெரிவித்தது.

**அமெரிக்க வீரர்கள் ஆப்கனில் தங்க முடிவு செய்ததை எதிர்த்தே இந்த வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டது.**

2014ஆம் ஆண்டுக்குப் பின் அமெரிக்கப் படைவீரர்கள் ஆப்கனில் தங்கி வீரர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாய் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து அமெரிக்க வீரர்கள் இங்கு தங்க முடிவு செய்ததை எதிர்த்தே வெடிகுண்டுத் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாகக் தெரிவிக்கப் படுகிறது. (ந)

## ஹோலி கொண்டாட்டத்தில் விபரீதம்

# வண்ணப் பொடியால் 200 பேர் பாதிப்பு



மும்பை,மார்ச்.10

மும்பையில் ஹோலி கொண்டாட்டத்தில் பயன்படுத்தப்பட்ட வண்ணப் பொடியில் ரசாயனம் கலந்திருந் ததால், வாந்தி, மயக்கம் உடல் அரிப்பு ஆகியவற்றால் 200 பேர் பாதிக்கப்பட்டனர்.

நாடு முழுவதும் ஹோலி பண்டிகை நேற்றுமுன்தினம் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. மும்பை தாராவியிலும் காலை முதலே சிறியவர்களும், பெரியவர்களும் வண்ணப் பொடிகளைத் தூவியும், வண்ணத் திரவங்களையும் ஒருவர் மீது ஒருவர் பூசியும் கொண்டாடினர்.

கொண்டாட்டம் முடிந்த பிறகு குளிக்கச் சென்ற சிறுவர்கள் உட்பட ஏராளமானோருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. சிலருக்கு கண்களில் எரிச்சலும், உடல் அரிப்பும் ஏற்பட்டது. தாராவி கல்யாண்வாடி, பால்கனி சால், தாராவி கிராஸ் வீதியில் உள்ள கணேசர் ஆலயப் பகுதி, கோலி மைதான், 90 அடி வீதி ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானவர்கள் இதே பிரச் சினைகளால் பாதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் 5 - 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள். வாந்தி எடுத்து மயங்கி விழுந்த அவர்களை பெற்றோரும், உறவினர்களும் கதறியபடி அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு தூக்கிச் சென்றனர். அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களும் வாகனங்களை ஏற்பாடு செய்து குழந்தைகளை சயான் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். இதனால், அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. 200 பேர் மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

தாராவியின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகள், தங்கள் பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில்தான் வண்ணப் பொடிகளையும், வண்ணத் திரவங்களையும் வாங்கியுள்ளனர்.

எல்லா வியாபார நிலையங்களிலும் விற்பனையான வண்ணப் பொடிகளும் விஷமாக மாறியது எப்படி என்று புரியாமல் சுகாதாரத்துறை அதிகாரிகள் குழப்பம் அடைந்துள்ளனர். இது பற்றி தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறது. (வ)

## 'ஜெ' வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்: தம்பதியர் கைது

சென்னை,மார்ச்.10

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாக சென்னையில் தம்பதியினர் கைது செய்யப்பட்டனர்.

போயஸ் கார்டனில் குண்டு வெடிக்கும் என்ற பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் வந்தது. இந்தத் தொலைபேசி அழைப்பு தஞ்சாவூரில் இருந்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து ஜோன்மைக்கேல் என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் திருவொற்றியூரில் வசித்து வந்ததாகவும், மனைவியுடன் ஏற்பட்ட தகராறில் தஞ்சாவூர் வந்ததாகவும், வெடிகுண்டு மிரட்டலில் மனைவிக்கும் பங்கு உண்டு என்றும் அவர் பொலிஸில் தெரிவித்தார். இதையடுத்து அவரது மனைவியும் கைது செய்யப்பட்டார். (வ)

## கச்சதீவு சென்றோர் கடத்தலுக்குத் திட்டம்

### கியூ பிரிவு பொலிஸார் விசாரணை

கச்சதீவு விழாவுக்குச் சென்று வந்தவர்கள் சிலர் கடத்தல் திட்டம் வகுத்துள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து கியூ பிரிவு பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கச்சதீவு அந்தோனி யார் தேவாலய விழாவுக் காக மட்டுமின்றி, வேறு நோக்கத்துக்காகவும் சிலர் செல்வது குறித்து கிடைத்த தகவலின்படி, கியூ பிரிவுப் பொலிஸார் அங்கு சென்று திரும்பியோர் குறித்து விசாரித்து வருகின்றனர்.

இது குறித்து கியூப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:

கச்சத்தீவுக்குச் செல்ல விண்ணப்பித்தோரில், வெளியிடங்களில் உள்ள அகதிகள் 18 பேரும் திருட்டுத்தனமாகச் செல்வதற்காக வந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

மேலும், கடத்தலில் ஈடுபடும் சிலர், கச்சதீவில் இலங்கை முகவர்களைச் சந்தித்து கடத்தலுக்கான திட்டம் வகுத்திருப்பதாகவும் தகவல் கிடைத்து, பழைய குற்றவாளிகள் அங்கு சென்றார்களா என்று விசாரித்து வருகிறோம். மேலும், கச்சதீவில் 10 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் ரூபா வரை கொடுத்து தமிழகம் வர, இலங்கையர் பலர் முயற்சித்ததாகவும் தெரிகிறது. - என்றார் அவர். (வ)

## மின் பற்றாக்குறை பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம்

சென்னை, மார்ச்10

தமிழகத்தில் நிலவும் கடுமையான மின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மத்திய மின்வாரியத்திடம் இருந்து 1000 மெகாவாற் மின்சாரத் தைத் தமிழக அரசுக்கு ஒதுக்கித் தர வேண்டும் என்று கோரி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்ததாவது:

தற்போது தமிழகத்தில் மிகக் கடுமையான மின் பற்றாக்குறை நிலவி வருகிறது. எனவே, தாங்கள் இந் தப் பிரச்சினையில் கவனம் செலுத்தி மத்திய அரசின் மின் தொகுப்பில் இருந்து தமிழகத்துக்கு மின்சாரம் கிடைக்க வகை செய்யவேண்டும்.

தமிழகத்தில் தற்போது நிலவும் கடுமையான மின் பற்றாக்குறை காரணமாக, சென்னையில் 2 மணி நேரமும், ஏனைய பகுதிகளில் 4 மணி நேரமும் மின் தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதுபோல, தொழிற் பகுதிகளுக்கு வாரத்தில் ஒரு நாள் மின்தடை நடைமுறையில் உள்ளது. இதனால் பல்வேறு தொழிற்சாலைகளும், உற்பத்தி நிலையங்களும் பாதித்துள்ளன - என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## புறநகர் ரயிலை இயக்கி ஆந்திரப் பெண் சாதனை



ஹைதராபாத்,மார்ச்10

சர்வதேச மகளிர் தினமான நேற்று முன்தினம் ஹைதராபாத் புறநகர் ரயிலை இயக்கியதன் மூலம், ஆந்திராவின் ரயில் எஞ்சின் முதல் பெண் சாரதி என்ற பெருமையை சத்யவதி என்ற பெண் பெற்றார்.

ஆந்திராவைச் சேர்ந்த சத்யவதி என்பவர் கடந்த 1999ஆம் ஆண்டில் ரயில்வேப் பணியில் சேர்ந்தார். பெங்களூரில் ரயில் எஞ்சின் உதவி சாரதியாகப் பணிபுரிந்தார்.

இதன் பின் ஆந்திராவுக்கு பணி மாற்றம் செய்யப்பட்டார். கடந்த 2005 ஆம் ஆண்டில் சரக்கு ரயில் எஞ்சின் டிரைவராக பதவி உயர்த்தப்பட்டார்.

கடந்த சில ஆண்டுகளாக பயணிகள் ரயில் எஞ்சின் உதவிச் சாரதியாக அவர் பணியாற்றி வந்தார். கடந்த ஜனவரி மாதத்தில் பயணிகள் ரயிலை இயக்குவதற்கான பயிற்சியையும், அவர் வெற்றிகரமாக முடித்தார்.

இந்தநிலையில் மகளிர் தினத்தையொட்டி ஹைதராபாத் புறநகர் பகுதி களுக்கு இடையே இயக்கப்படும் லேடீஸ் ஸ்பெஷல் ரயிலை இயக்குவதற்கான பொறுப்பு நேற்று முன்தினம் அவருக்கு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பலாக்னுமா ரயில்வே நிலையத்திலிருந்து லிங்கம்பள்ளி ரயில்வே நிலையத்துக்கு செல்லும் ரயிலை உதவியாளர் யாருமின்றி தனியாக அவர் இயக்கினார்.

இதன் மூலம் ஆந்திராவின் ரயில் எஞ்சின் முதல் பெண் சாரதி என்ற பெருமை அவருக்குக் கிடைத்தது. ரயிலை இயக்குவதற்கு முன்னும், இயக்கி முடித்த பின்னும், அதிகாரிகள், சக ஊழியர்கள் மற்றும் பயணிகள் உள்ளிட்டோர் சத்யவதிக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். (வ)


## வாய்க்காலில் சிசுக்கள் கண்டெடுப்பு

ஒரிசா மாநிலம் கட்டாக்கில், கழிவு வாய்க்காலிருந்து 3 சிசுக்கள் மீட்கப்பட்ட சம்பவம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட 3 சிசுக்கள் பிளாஸ்டிக் ஜாரில், அடைக்கப்பட்டிருந்தன. தனியார் மருத்துவமனைகள் அதிகம் இயங்கிவரும் பகுதியில் உள்ள சாக்கடையில் இருந்து இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பான விசாரணைக்கு மாவட்ட சுகாதார அதிகாரி உத்தரவிட்டுள்ள நிலையில், அது பெண் சிசுக்களா என்ற கோணத்தில் விசாரணையை, கட்டாக் மாவட்ட ஆட்சியாளர் கிரிஷ் முடுக்கி விட்டுள்ளார்.



பஞ்சாப் மாநிலம் சண்டிகாரில் சிரோன்மணி அகாலிதளம் கட்சியின் புதிய எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

## பசிக்காக சிறுநீரகத்தை விற்கும் மே.வங்க ஏழை மக்கள்



மேற்குவங்க மாநிலத்தில், குழந்தைகள் தொடர் பசியால் இறந்து வரும் பரபரப்பு இன்னும் அடங்காத நிலையில், பசியைப் போக்க மக்கள் சிறுநீரகத்தை விற்பதாக வந்துள்ள தகவல் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்குவங்க மாநிலம் தியான்ஜ்பூருக்கு வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது பிண்டால் கிராமம். இந்தக் கிராமத்துக்கு 'கிட்னி கிராமம்' என்ற மற்றொரு பெயரும் உண்டு என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

சிறுநீரக விற்பனையில், மாநிலத்தின் தலைநகராக இந்தக் கிராமம் விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. வயிற்றுப் பசியைப் போக்க, இக் கிராமத்தில் உள்ளவர்கள் தங்கள் சிறுநீரகங்களை விற்றுவருவதாகவும், இதன்காரணமாக அவர்கள் விரைவில் இறந்து வருவதாகவும் தகவல் வெளியாகி வருகின்றன.

சிறுநீரகத்தை விற்றவர்கள், மற்றவர்களுக்கு இதேபோல் சிறுநீரகத்தை விற்க பரிந்துரைப்பதுதான் அதைவிட கொடுமையான விடயமாக அமைந்துள்ளது. (வ)

## தோல்வியை தொடர்ந்து பதவியை ராஜினாமா செய்த பா.ஜ.க.தலைவர்

உத்தரப்பிரதேச சட்டமன்ற தேர்தலில் பா.ஜ. படுதோல்வி அடைந்தை தொடர்ந்து அந்தமாநில பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் தனது பத வியை ராஜினாமா செய்துள்ளார். இது தொடர் பாக தனது ராஜினாமா கடிதத்தை தேசிய தலைவர் நிதின் கட்காரிக்கு அனுப்பி வைத்தார்.

நடந்து முடிந்த உத்தரப்பிரதேச சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ. 47 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. கடந்த 2007ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் 51 இடங்களை பெற்றிருந்த பா.ஜ. இம்முறை 4 இடங்களை இழந்துள்ளது.

இந்த நிலையில் பா.ஜ.க.வின் உ.ப. மாநில தலைவர் சூரிய பிரதாப் ஷகாய், தேர்தல் தோல்வியை பொறுப்பேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். ராஜினாமா கடிதத்தை தேசிய தலைவர் நிதின் கட்காரிக்கு அனுப்பி வைத்ததாகவும், மேலிடம் இது குறித்து முடிவு செய்யும் என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (வ)

# 20 ஆம் வருட நினைவலைகள்

தோற்றம்
18 - 06 - 1920

மறைவு
19 - 02 - 1992



## அமரர் இராசையா செல்வராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி:துதியை (10.03.2012)

இருபது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எம் இதயத்தில் எப்போதும் பசுமையான உணர்வுகளுடன்
இருப்பீர்கள் அப்பா!
என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக
அன்புடன் பிரார்த்திக்கும்

"சுபசதனம்", சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(15451) (2,6,7)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
08★02★1929

மறைவு
20★02★2011

திதி : 10.03.2012

## அமரர் (லயன்) நடராசா சிவசுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற பொது முகாமையாளர் - C.T.B)

" ஆண்டொன்று நீங்கியதோ ஐயா நீரெமைப்
பிரிந்து தூண்டு சுடரனையாய்
எம் துயரம் தீரவில்லை
வேண்டுவன வெல்லாம் விருப்புடனே தந்தனையே
மீண்டொருகால் வாராயோ வெம் துயரம் தீராயோ.

"முருகவில்லா"
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

உங்கள் பிரிவால் துயருறும் :
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(15501)(6-7-8)

# மரண அறிவித்தல்

## திலகானந்தர் பவித்திரன்

லண்டனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திலகானந்தர் பவித்திரன் 04.03.2012 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திலகானந்தர் (ஆனந்தி)-சுகந்தி தம்பதியரின் (அரியாலை, யாழ்ப்பாணம்) அன்பு மகனும், யமேஸ், சரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருநாதன், சண்முகநாதன், லோகநாதன், விஜயபாலன் (நோர்வே), யசோதா, கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு பெறா மகனும், பாலசுப்பிரமணியம், சகுந்தலா, ஜனந்தன் ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பஞ்சரத்தினம் மற்றும் பரஞ்சோதி (அன்னம்), காலஞ்சென்றவர்களான இராசையா, பராசக்தி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 11.03.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 11.30 மணிவரை நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக Golders Green Crematorium, Hoop Lane, London. NW.11 7NL க்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

No:-03, EDON GROW,
London.
NW10 2TH,UK.

தகவல்: குடும்பத்தினர்,

(15484) (6,7,10)

# தென்மராட்சி பிரதேசத்தில் கலாசாரப் பேரவை

யாழ்ப்பாணம்,மார்ச் 10

தென்மராட்சிப் பிரதேச கலாசார பேரவை கடந்த புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வுக் கூட்டத்தில் பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞர்களும் கலை ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

இந்த வருடம் கலாசார விழாவை சிறப்பாக நடத்த வேண்டும் என்றும் அன்றைய தினம் பிரதேச கலைஞர்களை உள்ளடக்கிய நூல் வெளியிடவும் முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு ஆரம்பிக்கப்படும் கலாசார பேரவை பிரதேசத்திலுள்ள கலைஞர்களை ஒன்று திரட்டி சமூக விழுமியங்களைப் பேணும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண் டும் என்றும் இலக்கிய விழிப்புணர்வுகள் மூலம் கலாசார பாரம்பரியம் பேணப்படல் வேண்டும் என்றும் கலை ஆர்வலர்களால் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை நடப்பு வருட நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(வ-9)


## இலவச அழகுக்கலை பயிற்சி

ஒறிபிளேம் (Oriflame) தனது 45ஆவது வருடத்தை முன்னிட்டு இலவச அழகுக்கலைப் பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது. பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும். அத்துடன் ரூபா 11,370 பெறுமதியான பரிசில்கள் பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உண்டு.

வயதெல்லை - 18 மேல்
காலம் - 11.03.2012
நேரம் - 10.00 A.M.
இடம் - 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் (சத்திரச்சந்தி அருகில் கொட்டடி வீதி)
தொடர்புகளுக்கு : 077 1336124

(15461)(6-7-8)


## மாணவன் காயம்

சாவகச்சேரி,மார்ச்10

உயரம் பாய்தல் பயிற்சியில் ஈடுபட்ட 7 வயது மாணவன் தடுக்கி வீழ்ந்ததில் கை முறிந்தது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கோகுலன் ஜன்சன் (வயது 7) என்னும் மாணவன் கை முறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டார். (வ-9)


### வீடு விற்பனைக்கு

36, மெமோறியல் லேன், மானிப்பாயில் சகல வசதிகளுடன் காணியுடன் கூடியவீடு விற்பனைக்குண்டு

தொடர்பு:
072 2831159

(15456)(6-7-8)


MINISTRY OF HIGHER EDUCATION

## UNIVERSITY OF JAFFNA

INVITATION FOR BIDS

### Construction of Faculty of Management Studies & Commerce, University of Jaffna - Block 'C' Lecture Hall

1. **The Chairman, Ministry Procurement Committee,** on behalf of the **University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for "Construction of Faculty of Management Studies & Commerce, University of Jaffna - Block 'C' Lecture Hall" as described below and estimated to cost of **Rs.64.30 million.**

   The construction period is **448 days.**

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C4** or above with the Institute for Construction Training and Development (ICTAD),valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.

4. Interested bidders may obtain further information from **Deputy Registrar,( Capital Works and Planning Unit) University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**
   Contact numbers are: Phone. Tel: 021 221 9201 Fax: 021 221 9201.

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **Deputy Registrar,( Capital Works and Planning Unit) University of Jaffna, from 12.03.2012 until 16.04.2012** from **9:00hrs to 15:00 hrs on working days** upon payment of a non refundable fee of Rupees Seven thousand **(Rs.7,000/-).**

6. Bids shall be delivered or sent by registered post to the **Director (Procurement), Ministry of Higher Education, 18, Ward Place, Colombo 7** to reach **on or before 15.00 hrs on 17.04.2012**.Bids will be opened soon after closing the Bids, in the presence of the bidders' representatives who choose to attend.

7. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 in the Bidding document.
   - In favour of **Vice Chancellor-University of Jaffna.**
   - for an amount of **Rs.1,200,000.00.**
   - Valid up to119 days from the closing date of Bid.
   - Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.

9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely, Jaffna at 10.30 am on 16.03.2012

**Chairman**
**Standing Cabinet Appointed Procurement Committee,**
**Ministry of Higher Education,**
**18, Ward Place,**
**Colombo 07.**

## மீனவர்களுக்கு நிவாரணம் இல்லை

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வாவி மீனவர்களுக்கு இதுவரை தொழில் உபகரணங்கள் வழங்கப்படாததால் தமது வாழ்வாதாரத் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வாவி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் ஏறாவூர் வாவி மீன்பிடியாளர்கள் தெரிவித்ததாவது:

கடந்த கால வெள்ளத்தினால் ஏறாவூர்ப் பிரதேசத்தைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட மீனவர்களது வலைகள் மற்றும் உபகரணங்களும் நீரில் இழுத்துச் செல்லப்பட்டன. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகளிடம் முறையீடு செய்திருந்தோம். எனினும் இதுவரை தமக்கு எவ்வித நிவாரணமோ அல்லது மாற்று உபகரணங்களோ வழங்கப்படவில்லை.

உபகரணங்கள் வழங்கப்படும் பட்சத்திலேயே தமது வாழ்வாதாரத் தொழிலை சிறப்பாக முன்னெடுக்க முடியும்- என்றனர். (ச)

# ஒருவர் பல இடங்களில் வாக்காளராகப் பதிவு

## தேர்தல் திணைக்களம் அவசர மனு

**வாக்காளர்கள் தம்மை இரண்டு அல்லது மூன்று இடங்களில் வாக்காளர்களாகப் பதிவு செய்துள் ளமை நவீன தொழில் நுட்பத்தினடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது**

கொழும்பு,மார்ச் 10

நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேசங்களில் தம்மை வாக்காளர்களாக பதிவு செய்துள்ள ஒரு லட்சத்து 65 ஆயிரம் பேர் தேர்தல்கள் திணைக்களத்தால் இனங் காணப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் பிரதி ஆணையாளர் மொஹமட் தெரிவித்தார்.

இந்த வாக்காளர்களுக்கு தேர்தல்கள் திணைக்களத்தினால் அவசர மனு ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இன்று சனிக்கிழமைக்கு முன்பாக தேர்தல்கள் திணைக்களத்துக்கு உரிய பதிலை அனுப்பி வைக்காதவர்களின் வாக்குப்பதிவு தொடர்பில் தேர்தல் ஆணையாளர் சுயாதீனமாக தீர்மானம் எடுப்பார் என்று அவர் தெரிவித்தார்.

இந்த வாக்காளர்கள் தம்மை இரண்டு அல்லது மூன்று இடங்களில் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளமை நவீன தொழில் நுட்பத்தினடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

முதல் முறையாக நாடளாவிய ரீதியில் வாக்காளர் பதிவு மறுசீரமைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் 1 கோடியே 40 லட்சம் வாக்காளர்கள் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பஸ் கட்டணம் அதிகரிக்காது

## போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 10

அடுத்துவரும் ஒரு வருட காலப் பகுதிக்குள் எதுவித பஸ் கட்டண உயர்வும் மேற்கொள்ளப்படாது என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பஸ் கட்டணம் இருபது சதவீதத்தினால் உயர்த்தப்பட்டுள்ள போதிலும் அது பொது மக்களைப் பாதிக்கவில்லை. பொது மக்கள் இருமடங்கு கட்டணத்தை கொண்டிருக்கும் சொகுசு பஸ் வண்டிகளில் பயணிப்பதற்கு முண்டியடிப்பது இதற்கு நல்ல உதாரணம் என்று அவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலை உயர்வைத் தொடர்ந்து பஸ் கட்டணமும் இருபது சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் அடுத்துவரும் ஒரு வருட காலத்துக்கு எதுவித கட்டண உயர்வையும் மேற்கொள்ளக் கோரமாட்டோம் என்று பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் உறுதியளித்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

இந்த இணக்கப்பாட்டுக்கு ஏற்பவே இந்தக் கட்டண உயர்வுக்கு இடமளிக்கப்பட்டது. ஆனால் எதிர்வரும் ஜூலை மாதம் வருடாந்த பஸ் கட்டண உயர்வு இடம்பெறாது. அதற்கும் சேர்த்தே இப்போது கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

## தனியாரும் டெங்கு ஒழிக்கும் பக்றீரியாவை விற்க அனுமதி

கொழும்பு,மார்ச் 10

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை ஒழிக்கும் பற்றீரியா விரைவில் விற்பனைக்குவரவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தார். இவர் நாடாளுமன்றத்தில் வாய்மூல பதிலுக்கான கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை ஒழிப்பதற்காக கியூபா பற்றீரியா மற்றும் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேசிய பற்றீரியாவையும் பயன்படுத்தலாம் என்று மருத்துவ நிபுணர்கள் சிபாரிசு செய்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

கியூபா பற்றீரியாக்களை இறக்குமதி செய்து அவற்றை விற்பனை செய்யும் நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளது.

இதேவேளை இலங்கையில் தனியார் துறையினர் உற்பத்தி செய்யும் பற்றீரியாவை விற்பனை செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தனியார் நிறுவனம் விரைவில் தேசிய பற்றீரியாக்களை சந்தைப்படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# முன்கூட்டியே பஸ் கட்டண அதிகரிப்பு பயணிகள் 350 கோடி ரூபா இழப்பு

## அநுரகுமார எம்.பி. சபையில் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்10

ஜூலை மாதம் அதிகரிக்கவேண்டிய பஸ் கட்டணத்தை பெப்ரவரி மாதம் அதிகரித்ததால் ஒட்டுமொத்த பயணிகளும் 350 கோடி ரூபாவை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றில் தெரி வித்தார்.

இதுதொடர்பாக அவர் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றிய போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

டீசல் விலை அதிகரிப்பைக் காரணங்காட்டி பஸ் கட்டணம் 20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டது. தேசிய பஸ் கட்டண அதிகரிப்புக் கொள்கைக்கு ஏற்ப இது அதிகரிக்கப்படவில்லை.

டீசல்விலைஅதிகரிப்புக்கு ஏற்ப பஸ் கட்டணம் 15.8 சதவீதத்தால்தான் அதிகரிக்கப் பட்டிருக்க வேண்டும். அதன்படி ஆரம்பக்கட்டணம் 7 ரூபாவில் இருந்து 8 ரூபாவரை அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், 20 சதவீதமாக அதிகரித்ததன் மூலம் ஆரம்பக் கட்டணம் 7 ரூபாவில் இருந்து 9 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. ஜூலை மாதம் அதிகரிக்கப்படவேண்டிய பஸ் கட்டணம் பெப்ரவரி மாதமே அதிகரிக்கப்பட்டதால் ஒட்டுமொத்த பயணிகளும் 350 கோடி ரூபா நட்டமடைந்துள்ளனர். ஆகவே, பஸ் கட்டணத்தை மீண்டும் மாற்றி அமைக்கவேண்டும்.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், பஸ் கட்டண அதிகரிப்பாலும் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர். பஸ் கட்டணத்தை மாற்றி அமைப்பதன் மூலம் மக்கள் நன்மையடைவர் - என்றார். (த-சி)

## பாணுக்குள் போதைப்பொருள் கைதானார் பெண்

கொழும்பு,மார்ச் 10

பாண் துண்டுகளுக்கிடையில் போதைப் பொருளை மறைத்து வைத்து அவற்றை அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் கொண்டுசெல்ல முயற்சித்த வவுனியா பிரதேச பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தப் பாண் துண்டுகளை இரண்டாக உடைத்து அவற்றுக்கிடையில் போதைப் பொருளை வைத்துவிட்டு மீண்டும் அந்தப் பாண் துண்டுகளை பசையினால் ஒட்டிய நிலையிலேயே இந்தப் போதைப்பொருள் கடத்தல் இடம்பெற்றிருந்ததாக வவுனியா பொலிஸின் குற்றத் தடுப்புப் பிரிவு தெரிவித்தது.

இந்தப்பாணைக் கொண்டு செல்லும்போது சந்தேகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவற்றுடன் பழங்களையும் சிறைச்சாலைக்குள் கொண்டுசெல்ல முயற்சித்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## டிராக்டர்மூலம் மீன்பிடி; கைது செய்ய நடவடிக்கை

கொழும்பு,மார்ச் 10

உழவு இயந்திரம் மூலம் கரைவலை மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

சிலாபம் பிரதேசத்திலேயே இத்தகைய சம்பவங்கள் குறித்து அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக கரையோரப் பிரதேசங்களின் சூழலுக்கு கடும் பாதிப்பு ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் உழவு இயந்திரம் மூலம் கரைவலை மீன்பிடியில் ஈடுபடுகின்ற வர்கள் இருப்பின் அது குறித்து தமக்கு அறிவிக்குமாறு கடற்றொழில் அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.



தலைமைத்துவ அறிவு மேம்பாட்டுக்கான மாதாந்தக் கருத்தரங்குத் தொடரை நடத்துவதற்கு தகவல் திணைக்களம், இலங்கை மன்றக் கல்லூரி ஆகியன ஒருங்கிணைந்த முயற்சித் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இதுதொடர்பான உடன்படிக்கை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில் தகவல் திணைக்களம் சார்பாக பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகலவும் இலங்கை மன்றக் கல்லூரி சார்பாக அதன் தலைவர் கலாநிதி ரஞ்ஜித் பண்டாரவும் கைச்சாத்திட்டனர்.

# சொகுசு பஸ்களின் தரம் ஆராய நடவடிக்கை

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 10

நாடு முழுவதும் போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்துத் தனியார் சொகுசு பஸ்களின் தரம் தொடர்பில் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் காலி மற்றும் கொழும்புக்கு இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களை சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் ரோஷான் குணவர்த்தன தெரிவித்தார்.

போக்குவரத்துக்குத் தகுதியற்ற சில பஸ்கள் இந்தச் சோதனையின்போது இனங் காணப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின் ஊடாக பஸ்களின் போக்குவரத்து நேரத்தைக் குறைப்பதற் கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

33 பஸ்கள் கடந்த புதன்கிழமை சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. சோதனைக்கு உட்படுத்தப்படும் பஸ்கள் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டு, அதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# மகஸின் சிறைச்சாலையில் நவீன தொலைபேசிகள்

கொழும்பு,மார்ச் 10

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் திடீரென நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது பல கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு பேசக்கூடிய அதி நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய, 13 நவீன ரக கையடக்கத் தொலைபேசிகள் அங்கு மீட்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரிசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் அநுராதபுர சிறைச்சாலையிலும் இவ்வாறு அதி நவீன கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தமிழகத்தில் கருத்துரை வழங்கிய சிங்களப் பேராசிரியர் வெளியேற்றம்

இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எதுவும் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடப்பதாக சித்திரிப்பது சரியானதல்ல என்றும் தமிழ் நாட்டில் உரையாற்றிய கொழும்பு பல்கலைக் கழக பேராசிரியை ஒருவர் கருத்தரங்கு மண்டபத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு, திருநெல்வேலியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு, நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கருத் தரங்கில் இலங்கை சார்பாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் பேராசிரியை ஜீவா நிரியெல்ல கலந்து கொண்டார்.

'போதைப் பழக்கமும், குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களும்' என்ற தலைப்பில் இடம்பெற்ற மேற்படி கருத்தரங்கிலே கொழும்பு பேராசிரியை ஜீவா நிரியெல்ல இலங்கைப் பெண்களுக்கெதிராக வன்முறைகள் இடம்பெறுவ தில்லை என்றும் அவ்வாறு இலங்கையில் இடம் பெறுகின்றது என்று குற்றம் சாட்டுவதும் சரியானது அல்ல என்றும் உரையாற்றியதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதனையடுத்து, திருநெல்வேலியைச் சேர்ந்த தமிழ் ஆர்வலர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் சேவியர் தலைமையில் கருத்தரங்கு அரங்கத்துக்குள் புகுந்து, பதாகைகளை ஏந்தியபடி ''சிறிலங்கா பேராசிரியை வெளியேறு'' என்று முழக்கங்களை எழுப்பி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவத்தால் ஏற்பட்ட பரபரப்பையடுத்து, பேராசிரியை ஜீவா நிரியெல்ல பொலிஸாரின் பாதுகாப்புடன் கருத்தரங்கு மண்டபத்திலிருந்து வெளியேற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கருத்தரங்கில், பிரிட்டனின் லங்காஷயர் பல்கலைக் கழகத்தின் பேராசிரியை ஹெலன்காட் உள்ளிட்ட பெண் பேராசிரியைகள் பங்கேற்றனர்.

# சேமிப்பை ஊக்குவிக்க பெண்களுக்கு சுயதொழில் கடன்



யாழ்ப்பாணம்,மார்ச் 10

சேமிப்புப் பழக்கத்தை பெண்களிடம் ஊக்குவிக்கும் நோக்குடன் சுயமுயற்சிக்கடன் திட்டங்களை வங்கிகள் முன்னெடுத்து வருகின்றன.

வடபிராந்தியத்தில் பெண் சமுதாயத்தின் முன்னேற்ற செயற்பாடாக முதன் முதலாக இலங்கை வங்கியால் யாழ்ப்பாணத்தில் மகளிர்தினம் கொண்டாடப்படுகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் வட பிராந்திய இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் எஸ். என்.மாணிக்கசிங்கி.

இலங்கை வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மகளிர் தின விழா நேற்றுமுன்தினம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் வடபிராந்திய இலங்கை வங்கியின் உத்தியோகத்தர் எஸ். சுஜாத்தா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக முகாமைத்துவக் கற்கைகள் விரிவுரையாளர் திருமதி .தேவரஞ்சினி சிவாஸ்கரன், யாழ். மாவட்ட தாய் சேய் நல வைத்தியர் திருமதி திருமகள் சிவசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் சிறப்பம்சமாக மருத்துவர் திருமதி திருமகள் சிவசங்கர் பெண்களுக்கு மன அழுத்தம் எவ்வாறு ஏற்படுகிறது, அதனைத் தடுக்கும் வழிமுறைகள் தொடர்பாக கருத்துரைகளை வழங்கினார்.

இந்தநிகழ்வில்வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(ம-14)

## சமுர்த்தி நிவாரணம் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளுக்கான ஜனவரி, பெப்ரவரி ,மார்ச் மாதக் காலப்பகுதிக்கான உணவுப் பொருள் விநியோகம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த விநியோகப் பொருள்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

அதேநேரம் சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகள் இக்காலப் பகுதிக்கான பண முத்திரைக்கான கொடுப்பனவை தங்கள் பிரிவுச் சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று சமுர்த்தி உதவி ஆணையாளர் ச. சிவஸ்ரீ தெரிவித்துள்ளார் . (ம-16)

## படகு மூலம் ஆஸிக்குச் சென்ற இலங்கையர்களுக்கு புகலிடம்

படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற இலங்கைப் பயணிகள் 23பேருக்கு புகலிடம் வழங்க ஆஸ்திரேலிய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு புகலிடம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஆஸ்திரேலியா நோக்கிப் பயணம் செய்த இலங்கை அகதிகள் இந்தோனேஷியாவில் தடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இந்தப் படகில் சுமார் 250 இற்கும் மேற்பட்ட இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணம் செய்திருந்தனர்.

அப்போதைய பிரதமராக கெவின் ரொட்டின் வேண்டுகோளுக்கு இணங்க சிலருக்கு ஆஸ்திரேலிய அரசு புகலிடம் வழங்கி வருகின்றது.

படகுப் பயணிகளில் நூற்றுக் கணக்கானவர்களுக்கு இன்ன மும் புகலிடம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படு கிறது.

ஆஸ்திரேலியாவில் வருடமொன்றுக்கு 13750 பேருக்கு புகலிடம் வழங்கப்படுகின்றது.

படகு மூலம் புகலிடம் கோருவோருக்கு அதிகளவான சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## தேசிய சிறுவர் நாடக விழாவுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

தேசிய சிறுவர் நாடக விழாவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருந்து பங்குபற்ற விரும்பும் ஆர்வலர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பிரிவில் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கலாசார அலுவல்கள் இலங்கை கலைக் கழகம், அரச நாடகக் குழு என்பன இணைந்து நடத்தும் இந்த தேசிய சிறுவர் நாடக விழாவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகள், அறநெறிப்பாடசாலைகள்,நாடக ஆர்வமுள்ள கலை நிறுவனங்கள் பங்கு பற்ற முடியும் என சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் எஸ். முரளிதரன் அறிவித்துள்ளார். (வ-14)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

"சௌபாக்கியத்தைத் தேடிச் செல்லும் பயணத்தில் முன்னோடியாக"

இலங்கைப் பெண்களுக்கு

அதி மேன்மைதங்கிய ஜனாதிபதி

மஹிந்த ராஜபக்ஷ அவர்களினாலும்

இலங்கையின் முதற்பெண்மணி

கௌரவ திருமதி ஷிராந்தி ராஜபக்ஷ அவர்களினாலும்

அலரிமாளிகையில் சர்வதேச மகளிர் தினத்தில் கௌரவிக்கப்பட்ட

ஒரே ஒரு தமிழ்ப் பெண்ணாகத் திகழும் யாழ்ப்பாண மாவட்டத்தின்

அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளருமான

## திருமதி இமெல்டா சுகுமார்


அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களின்

சேவை மேன்மேலும் உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.



பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்,
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம்
சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், பிராந்திய சபைகள், சமாசம்
கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனம்
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசம்
யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிராமிய வங்கிகளின் சமாசம்,
விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்,
புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஏனைய சங்கங்கள்.
யாழ் மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களம், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(சி/9655)(2-6-7)




அனேகமாக மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பதை வரவேற்போம்

## கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன்

உலகின் வல்லாதிக்கமே, இலங்கையின் உண்மை முகத்தை உலகுக்குக் எடுத்துக் காட்டி, ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலான முயற்சிகளுக்கு வித்திடுவது சிறந்ததொரு செயலெனக் கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபை ஈசன் தெரிவித்துள்ளார்.



தற்போது, ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் சபையில் அமெரிக்கா சமர்ப்பித்திருக்கும் பிரேரணை தொடர்பாகக் கருத்துக் கூறும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாறான ஒரு தீர்மானம் தமிழர்களின் இனப்பிரச்சினை இன்னமும் ஆறாவடுவாக இருக்கிறது என்பதை படம்போட்டுக் காட்டுகிறது. இத்தகைய அழுத்தங்கள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு சாத்தியத்தை உருவாக்கும் எனத் தெரிவித்தார்.

இவ்வாறு ஒரு பிரேரணை நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதை இலங்கை கருத்திலெடுக்காவிட்டால் அதுவே அங்கு யுத்த இறுதியில் இடம்பெற்ற படுகொலைகள், யுத்த தர்ம மீறல்கள் போன்ற விசாரணைகளைச் சர்வதேசம் ஆரம்பிக்க வழிவகுக்கும் என்று தெரிவித்தார்.

அமெரிக்காவின் பாணியிலேயே கனடாவும் அழுத்தம் கொடுக்கலாம் என்று தெரிவித்த ராதிகா, தங்களது கட்சியின் வெளிவிவகாரத் துறைசார் நாடாளுமன்ற உறுப்பினருடன் இந்த விடயத்தை நாடாளுமன்றின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்குத்தான் வேண்டு கோள் விடுத்துள்ளேன் எனவும் தெரிவித்தார்.

இளைய சமுதாயத்தைச் சேர்ந்த தமிழரான தன்னுடைய நாடாளுமன்றப் பிரசன்னமானது, கனடியத் தமிழ்ச் சமுதாயம், கனடியப் பல்லின சமுதாயத்தில் தாக்கம் மிகுந்ததோர் இனம் என்ற கருத்தை ஆளும் கட்சியுள்ளிட்ட சகலரும் உணர்ந்து கொள்ள வழியேற்படுத்தியுள்ளதாகவும் ராதிகா சிற்சபைஈசன் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தமிழர்களின் வாழ்வுக்கு சுபீட்சமான எதிர்காலம் ஏற்படவும், போர்க்குற்ற மீறல்களுக்கு நியாயமான விசாரணை நடைபெறவும் தங்களது கட்சி தொடர்ந்தும் உழைக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (ந)

# சிலுவைப் பாதை

பண்டத்தரிப்பு,மார்ச் 10

இளவாலை மறைக்கோட்ட கத்தோலிக்க திருச்சபையினரின் ஏற்பாட்டில் தவக்காலத்திற்கான 'பெரிய சிலுவைப் பாதை' வழிபாடு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

சேந்தாங்குளம் புனித அந்தோனியார் தேவாலயத்தில் மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும் 'சிலுவைப் பாதை' வழிபாடானது வலித்தூண்டல் வரை சென்று அங்குள்ள புனித அன்னம்மாள் தேவாலயத்தில் நடைபெறவுள்ள திருப்பலியுடன் நிறைவுபெறவுள்ளது. (த-130)

# இறுவட்டு வெளியீடு

மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் 'மனித நேயக்கரங்கள்' அமைப்பினரால் இறுவட்டு ஒன்று வெளியிடப் பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மேற்கு, உதவிக் கல்விப் பணிப்பாளர் சிறிநேசன் மற்றும் மனித நேயக்கரங்கள் அமைப்பின் தலைவர் எஸ்.எஸ்.அமல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைப்பின் தலைவர் எஸ்.எஸ்.அமல், யுத்தம் மற்றும் சுனாமி போன்ற அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு உதவி செய்யும் நோக்கோடும் வறிய மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்தும் முகமாகவும் மனித நேயக்கரங்கள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

அவ்வாறு பாதிக்கப்பட்ட பல கிராமங்கள் இன்னமும் கஷ்டப்பட்ட நிலையிலும் அடிப்படை வசதி கூட இல்லாத நிலையிலும் உள்ளன எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பல கிராமங்களில் உள்ள வறிய மாணவர்கள் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். (ந)

# பதிவு உறுதிப்படுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களின் தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் கடந்த டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் 'வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்' எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது என சங்கத் தலைவர் கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சங்கத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களினதும் சங்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ந-14)

# ஜேர்மனியில் பல்லின பெண்கள் அமைப்புகளின் கவனயீர்ப்பு நிகழ்வு

ஜேர்மனியின் தலைநகர் பெர்லின் மாநிலத்தில் சர்வதேசப் பெண்கள் தினத்தை முன்னிட்டு பல்லின பெண்கள் அமைப்புகளின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் கவனயீர்ப்பு நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஈழத்தமிழ்ப் பெண்களும் கலந்து கொண்டு இலங்கையில் அரசின் அடக்குமுறையில் தமது உறவுகள் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்பங்களை எடுத்துக் கூறினார்கள்.

மேலும், இலங்கை இனவெறி அரசின் இனவழிப்புப் போரினால் தமது கணவர்களை பறிகொடுத்த பெண்கள் இன்று எவ்வித பாதுகாப்பும் இல்லாத பயங்கரமான சூழ்நிலையில் வாழ்கின்றனர். தனிமையாக வாழும் பெண்கள் தினமும் கடத்திச் செல்லப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள்.

அந்தவகையில் இன்றும் ஈழத்தமிழ் பெண்கள் படும் அவலம் தமிழ்ப் பெண்கள் கூட்டமைப்பு - ஜேர்மனி அமைப்பினால் இந்த நிகழ்வில் எடுத்துக் கூறப்பட்டது. (ந)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக் குண்டு. மொத்த மாக 260/=, சுத்தம் செய்தது 450/=.

தொடர்பு: நீர்வேலி வடக்கு
மாதா கோயில் முன்பு. 0776331914.

**மணமகள் தேவை**

1980, கார்த்திகை நட்சத்திரம் 25 பாவமும், செவ்வாய்க்குற்றமற்ற, அவுஸ்திரேலியாவிலிருந்து வரவுள்ள இஞ்சினியர் மணமகனுக்கு (B.Sc, M.Sc) மணமகளை எதிர்பார்க்கிறோம்.
முருகன் திருமண சேவை
செ.விசயரட்ணம், நவாலி கிழக்கு, மானிப் பாய்.

T.P. No :- 021 7914647

(15475)(6-7-8)

**MOORTHY GUEST HOUSE**
**மூர்த்தி கெஸ்ற் கவுஸ்**



**சேவைநலன் பாராட்டும் பிறந்த தின வாழ்த்தும்**

**திரு. மார்க்கண்டு ஞானசேகரன்**



உந்தனை வாழ்த்துவதில் நாம் உவகையே
கொள்கின்றோம்.
ஊர்போற்றப் பார் மகிழ உன்னதசேவை
செய்தவரே
வந்தனை செய்கின்றோம் நீவிர் வளமுடன்
வாழ்ந்திடவே
உளமார வாழ்த்துகின்றோம் பல்லாண்டு வாழ்க!வாழ்கவே!

இலங்கை வங்கியில் 07.01.1980 இல் இணைந்து 09.03.2012 இல் தனது 32 வருடகால சேவையினைப் பூர்த்தி செய்து வங்கிச் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்ற திரு. மார்க்கண்டு ஞானசேகரன் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் நலமாக வாழ வாழ்த்துவதுடன் இன்றைய தினத்தில் 55ஆவது பிறந்த தின வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்
இலங்கை வங்கி, திருநெல்வேலி.

15466) (7,9,10)

**இலங்கை சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள்**

சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கான கற்பித்தலில் பல ஆண்டுகள் அனுபவம் மிக்க சட்டத்தரணிகளாலும் சட்டக்கல்லூரி மாணவர்களாலும் வழிகாட்டல் வகுப்புகள் வழமைபோல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இடம் : Taste of Jaffna Restaurant கருத்தரங்கு மண்டபம்
101, பிரதான வீதி , யாழ்ப்பாணம்.
(யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அண்மையில் )
காலம் : ஞாயிற்றுக்கிழமை நேரம்: காலை 9 மணி
மேலதிக விபரங்களுக்கு: 021 222 1322, 0773236239
பதிவுகளுக்கு: Taste of Jaffna Restaurant
குறிப்பு: வயதுக்கட்டுப்பாடு இல்லை.

(C19849) (6,7,12)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும்**
**நன்றி நவிலலும்**
**வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



தோற்றம்
1946-09-27

மறைவு
2012-02-10

**குப்புசாமி ஞானசேகரம்**

(ஓய்வுபெற்ற
உதவி காணி ஆணையாளர்
வடமாகாணம்)

கடந்த (10-02-2012) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் குப்புசாமி ஞானசேகரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.03.2012) சனிக்கிழமை காலை 5.00 மணிக்கு நுணாவில் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும், 11.03.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்றமகற்கு"

எமது குடும்ப விளக்கு எம்மை விட்டுப் பிரிந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், உள்ளூர், வெளியூரிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பதாகைகள் மூலம் அஞ்சலி தெரிவித்த அன்பர்கள் அனைவருக்கும், மலர் மாலை, மலர் வளையம் சாத்திய அனைவருக்கும், தந்தி, கடிதங்கள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியை நிகழ்வுகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

சந்திரவளவு, துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்

(C/9650) (6,7,10)

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தெம்பு உற்சாகமாகச் செயற்படும் நாள். அயலாரால் ஏற்பட்ட வீண்பழிகள் அகன்று புகழ், செல்வாக்கு கூடும். குடும்பத்தினர், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். இனிமையான அனுபவங்களைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த பணவரவு மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு.

**இடபம்:** வியக்கத்தக்க செய்தி ஒன்று, உங்களின் வீடு தேடி வரும். பிரார்த்தனைகள் பலிக்க வேண்டும் என, வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். வர்த்தகர்கள் புதிய வாடிக்கையாளர்கள் கிடைத்து மகிழ்ச்சி அடைவர். உறவினர் ஒருவர் மூலம், புதியவர்களின் அறிமுகம் கிடைக்கலாம். கவனக் குறைவை தவிர்க்கவும். வயிறு, வாயு உபாதைகள், தலைவலி பிரச்சினைகளைச் சந்திக்கலாம்.

**மிதுனம்:** உதவி கேட்டு வந்தவர்களுக்கு, பிறரிடம் கடன் வாங்கியாவது கொடுப்பீர்கள். சொந்த பந்தங்கள் விஷயத்தில் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். சில வேலைகளுக்காக, வெளியூர் பயணம் செல்லலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். நினைத்தது நடக்காமல் அதிருப்தி அடையலாம்.

**கடகம்:** தொட்ட காரியம் துளிர் விட்டு வளரும் நாள். போட்டி, எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் தீரும். நண்பர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலைவீர்கள். வீட்டுக்கு புதிய பொருள் ஒன்று, வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும்.

**சிங்கம்:** அயலாரை அனுசரித்துச் செல்ல வேண்டும். உங்களுக்கு வேண்டாத விடயங்களில் தலையிட வேண்டாம். சிலருடன் பழங்கதைகள் பேசி வீண் பொழுது போக்குவீர்கள். சக ஊழியர்களுடன் வாக்கு வாதங்களைத் தவிர்க்கவும். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். மறைமுக எதிர்ப்புகளைச் சந்திக்க நேரிடலாம்.

**கன்னி:** நினைத்த காரியங்கள் நினைத்த நேரத்தில் முடிவுக்கு வரலாம். தேக பராமரிப்பு விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். கலைத் துறையினர் எதிர்பார்த்த நல்ல வாய்ப்புகளைப் பெற சந்தர்ப்பம் சாதகமாக அமையும். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று கவலைப்படாமல் நினைத்ததைச் செய்வீர்கள்.

### நாளை

மாசி 28 ஞாயிற்றுக்கிழமை 11.03.2012
திதி: திருதியை மு.ப. 09.49 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.ப 03.59 வரை
சுபநேரம்: 09.22- 10.52 வரை,
ராகு காலம்: 4.52 - 06.22 வரை

**துலாம்:** தர்ம, புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். தேக ஆரோக்கியத்திற்காக, சிறிய அளவு பணத்தைச் செலவிடலாம். வெறுத்து ஒதுக்கிய உறவினர் ஒருவர் உங்களிடம் வந்து சேருவார். புதியவர்கள் சிலர் தொழில் ரீதியாக உங்களின் உதவி நாடி வரலாம்.

**விருச்சிகம்:** எதையும் சிறப்பாகச் செய்து முடித்து பாராட்டுப் பெறுவீர்கள். மனைவி, குழந்தைகளுடன் பொழுதுபோக்கு இடங்களுக்குச் செல்லலாம். வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். உதிரி வருமானங்கள் கிடைக்கலாம். பல மணி நேரமாகும் என்று நினைத்த வேலை ஒன்று சுலபமாக முடிந்து விடலாம்.

**தனுசு:** நல்லவர் ஒருவரின் நட்பு கிடைக்கும். எதிர்பார்த்த பணவரவுகள் வந்து சேரலாம். எதையும் ஒன்றுக்கு, இரண்டு முறை யோசித்து திட்டமிட்டு செய்வீர்கள். வெளியூர் பயணங்களுக்காக சில முன்னேற்பாடுகளைச் செய்யலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கடன் மிகுதிகளைச் செலுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** திடீரென நடக்கும் நிகழ்ச்சிகளால் வியப்படையலாம். குடும்பத்துடன் கோயில்களுக்குச் செல்லலாம். கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கலாம். முந்தைய அனுபவம் ஒன்றை, அசை போட்டுப் பார்த்து எதிர்கால விடயங்களில் செயற்பட நினைப்பீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் தொலைபேசியில் பேசலாம்.

**கும்பம்:** திட்டமிட்ட காரியம் ஒன்றில், மாற்றங்களைச் செய்யநேரிடலாம். சிக்கனமாக முடிக்க நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். ஓய்வு எடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு யாராவது வந்து பேசி தொந்தரவு கொடுப்பர். மன தைரியம், தன்னம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும் நாள்.

**மீனம்:** கலகலப்பாகப் பேசி மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். பிரியமான பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். வெளியூர் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். உறவினர்களை உபசரிக்க கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். சிலர் உங்களிடம் யோசனை கேட்டு செயற்படலாம். பழகிய சிலர் மூலம் ஆதாயம் பெறலாம்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 9 | 3 | 1 | | 8 | |
| | | | 5 | | | 3 | | |
| 3 | | | | 7 | 2 | | 5 | 9 |
| 2 | | | | 5 | 4 | | | 6 |
| 4 | | 7 | | | | 5 | | 8 |
| 6 | | | 8 | 2 | | | | 1 |
| 9 | 2 | | 4 | 6 | | | | 7 |
| | | 4 | | | 7 | | | |
| | 1 | | 3 | 8 | 9 | | | 5 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 1 | 9 | 6 | 7 | 4 | 5 | 2 |
| 6 | 2 | 7 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 |
| 5 | 4 | 9 | 2 | 8 | 1 | 7 | 3 | 6 |
| 2 | 6 | 4 | 3 | 7 | 9 | 5 | 8 | 1 |
| 9 | 3 | 8 | 1 | 5 | 6 | 2 | 4 | 7 |
| 1 | 7 | 5 | 8 | 2 | 4 | 6 | 9 | 3 |
| 4 | 5 | 2 | 7 | 3 | 8 | 1 | 6 | 9 |
| 7 | 1 | 3 | 6 | 9 | 5 | 8 | 2 | 4 |
| 8 | 9 | 6 | 4 | 1 | 2 | 3 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 01.12.1938

மறைவு 09.02.2012

### அமரர் ஏகாம்பரம் சின்னத்தம்பி

கடந்த (09.02.2012) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த சண்டில் வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் - தெய்வானை தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் எமது குடும்பத் தலைவருமான

**அமரர் ஏகாம்பரம் சின்னத்தம்பி**

(கரவை நவசக்தி சமூக முன்னாள் தலைவரும், புகழ்பெற்ற நாடகக் கலைஞரும்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.03.2012) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரின் பொலிகண்டி இல்லத்தில் நடைபெற்று தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆற்றில் அஸ்திகரைக்கப்படும். பின்னர் முற்பகல் 11.00 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடி ஒழுங்கை,
புதுவளவு, பொலிகண்டி.
0777046178, 0213737218

சகோதரர்கள்:
ஏ.பொன்னுத்துரை, ஏ.கதிரவேலு,
ஏ.செல்லம்மா (குணவதி)

(12683) (2-7-6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் குருநாதர் விசுவலிங்கம்

(நயினாதீவு - 8)

மண்ணில் 25.08.1927

விண்ணில் 09.02.2012



ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
கிடைக்காத தெய்வமாய் இருந்தீர்கள்
எம்மை ஏங்கவைத்து
திடீரென எமை விட்டுப் பிரிந்த
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே - எம்
மூச்சில் கலந்த உங்களை என்றும் மறவோம்
அன்னை நாகபூசணியின் திருவடியில்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

கடந்த 09.02.2012 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டவுடன் நேரில் வந்து அவரின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி, கடிதம், தந்தி வாயிலாக எமக்கு அனுதாபச் செய்தியினை அனுப்பி துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (10.03.2012) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்குகொள்வதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

8ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

குடும்பத்தினர்.

# கல்வி அதிகாரிகளின் அசமந்தப் போக்கு

## தீவக மாணவர்கள் உளப்பாதிப்பு

**க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான சங்கீத செயன்முறைப் பரீட்சை நடத்தப்பட்ட திகதியில் ஊர்காவற் றுறைக் கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டியும் நடத்தப்பட்டது. இதனால் செயன் முறைப் பரீட் சைக்குத் தோற்றிய மாணவர்களால் கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்ற முடியவில்லை.**

மாணவர்களுக்கான பரீட்சை, போட்டிகள் தொடர்பாக தீவகக் கல்வி வலய அதிகாரிகளின் அச மந்தப் போக்குக் காரணமாக மாண வர்கள் பெரிதும் பாதிப்படைந்துள் ளனர் எனத் தெரிவிக்கப்படுகின் றது. அதாவது மாணவர் விடயங்க ளில் மாணவர்களின் நலன்கருதி யும் அதிபர் ஆசிரியர்களின் ஆலோ சனைகளையும் கல்வி அதிகாரிகள் கவனத்தில் எடுக்காமல், சுயமாக முடிவெடுப்பதால் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர். இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

அண்மையில் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான சங்கீத செயன்முறைப் பரீட்சை நடத்தப்பட்ட திகதியில் ஊர்காவற் றுறைக் கோட்ட மட்ட மெய்வன் மைப் போட்டியும் நடத்தப்பட்டது. இதனால் செயன்முறைப் பரீட் சைக்குத் தோற்றிய மாணவர்களால் கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்ற முடிய வில்லை. இதன் காரணமாக மாண வர்கள் உள ரீதியாகப் பாதிப்படைந் துள்ளனர் எனப் பெற்றோரால் கவலை தெரிவிக்கப்படுகிறது. மேலும் பாடசாலை நாள்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதாலும் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர். அதுமட்டுமின்றி கோட்ட,வலய, மாவட்ட, மாகாண மட்டப் போட்டி களில் பங்குபெறச் செல்லும் மாணவர்களால் சிலநாள்கள் பாட சாலைக்குச் செல்ல முடிவ தில்லை. இதன்காரணமாக இவர்கள் ஆசிரியர்களின் கோபத் துக்கும் ஆளாகின்றனர் . அத்தோடு மாணவர்கள் உளப்பாதிப்புக்க ளுக்கு உள்ளாவதாகக் கூறப்படு கின்றது.

எனவே போட்டிகளுக்குச் செல் லும் மாணவர்களுக்கு ஆசிரியர்க ளால் விசேட வகுப்புக்கள் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்; அல் லது போட்டிகளை சனி, ஞாயிறு விடுமுறை நாள்களில் நடத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண் டும் எனச் சம்பந்தப்பட்ட அதிகாரி களிடம் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

(ந-325)

### பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச் 10

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினரால் யாழ்.பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் இயந் திர வியல் கற்கை நெறிகளைக் கற்கும் மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. இது தொடர் பான விவரத்தை நிலையத்தில் பார்வையிடலாம்.

(ந-14)

### ஆங்கில மீட்டல் பரீட்சை

யாழ்ப்பாணம்,மார்ச் 10

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் ஆங்கில சான்றிதழ் கற்கை நெறியைத் தொடரும் மாணவர்களுக்கான முதலா வது மீட்டல் பரீட்சை இன்று காலை 9 மணிக்கு நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ந-14)

### தவக்காலம் சுய விளம்பரத்தின் காலமா?

தவக்காலம் என்பது சிலருக்கு சுய விளம்பரம் தேடும் காலமாக அமைந்திருக்கின்றது. காரணம் சிலர் தாங்கள் இந்தக் காலத்தில் காலை உணவைத் தவிர்த்து ஒரு நேர உபவாச மிருப்பதாகவும், வேறு சிலர் தாங்கள் இந்தக் காலத்தில் மாமிச உணவைத் தவிர்த்து மரக்கறி உணவை உட்கொள்வதாகவும், இன்னும் சிலர் தாங்கள் இந்தக் காலத்தில் மது, புகைத்தல், வெற்றிலை போன்றவற்றை தவிர்த்து வருவதாகவும் அயல வர்களுக்கு தங்களைப் பற்றி பெருமையாகக் கூறி தாங்கள் தான் உண்மையான சமயப்பற்று உள்ள கிறிஸ்தவ பெருமக்களென்று பறைசாற்றிக் கொள்ளுகின்றார்கள்.




ஆனால் இத்தகையோரது செயற்பாட்டைப்பற்றி திருத்தூதர் யாக்கோபு என்ன கூறுகின்றார் என்றால் ''தாம் சம யப்பற்று டையோர் என எண் ணிக் கொண்டிருப்போர் தம் நாவை அடக்காம லிருப்பாரென்றால் தம்மையே ஏமாற்றிக் கொள்கின்றனர். இத்தகையோரது சமயப் பற்று பயனற்றது'' (யாக் 1 :26) அதாவது நாம் சமயப்பற்று டையவர்களாகவும் அதனைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்றால் நாவை அடக்கி நாம் மேற்கொள் கின்ற உபவாசம் மற்றும் ஒறுத்தல் முயற்சிகளை அடுத்திருப்ப வர்கள் அறியாவண்ணம் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் நாம் மேற்கொள்ளும் உபவாசம், ஒறுத்தல் முயற்சிக ளினால் நிச்சயம் எமக்கு ஒருசிறு பணம் சேமிப்பாகும். இந்தப் பணத்தை நாம் என்ன செய்யப்போகின்றோம்? இதுபற்றி திருத்தூதர் யாக்கோபு தொடர்ந்து கூறுவதாவது ''தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும், மாசற்றதுமான சமயவாழ்வு எது வெனில் துன்புறும் அநாதைகளையும், கைம்பெண்களையும் கவ னித்தல்''. (யாக் 1:27) ஆகவே இன்று எம்மத்தியிலே யுத்தம் பிரசவித்த அநாதைகள், கைம்பெண்கள், அங்கவீனர்கள் பலர் உள்ளனர். இப்படிப்பட்டோருக்கு நாம் மேற்கொள்ளும் உபவா சம் ஒறுத்தல் முயற்சிகளின் மூலம் சேமிப்பாகும் பணத்தை பகிர்ந்தளிக்க வேண்டும்.

நாவை அடக்கி விளம்பரத்தை தவிர்த்து உபவாசம், ஒறுத்தல் முயற்சிகளினால் சேமிப்பாகும் பணத்தை துன்புறுவோருக்கு வழங்கும் போது தான் அது முழுமை நிறைந்த, அர்த்தமுள்ள, தந்தையாம் கடவுளுக்கு ஏற்ற தவக்காலமாக அமையும். அல்லது வெளி விளம்பரக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று ஆண்டவர் எம்மைப் பார்த்துக் கூறுவது நிச்சயம்.

க. அருள்நேசன், குருநகர்


## கண்ணீர் அஞ்சலி



முன்னை நாள் பளைக் கல்விக்கோட்ட அதிபர் நண்பனும், தற்போதைய கிளாலி றோ.க.த.க பாடசாலை அதிபருமான

**சூசைப்பிள்ளை அகஸ்ரின்**

அவர்களின் இறைபத மெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சிக் குள்ளாகி யுள்ளோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்தித்து எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்

தென்மராட்சி யாழ். அதிபர், நண்பர்கள்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் உள்ள இல. 150, (300) கடை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இலக்கம். 0112 344380 விலை பேசித் திர்மானிக்கலாம்.

(C/9654)(6-7-8)

## மரண அறிவித்தல்

**சுப்பையா ஜயாத்துரை**



கே.கே.எஸ் வீதி, இணுவிலைச் சேர்ந்த சுப்பையா ஜயாத்துரை நேற்று (09.03.2012) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

கே.கே.எஸ் வீதி,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(15485(6,7,12)

## வீடு தேவை

இணுவில் தொடக்கம் சுன்னாகம் வரை (K.K.S)வீதியை அண்டிய பகுதியில் குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்கு தேவை. வாடகை முற்பணம் நேரில்.

தொடர்பு:-0770440570, 0778449829

## மரண அறிவித்தல்

**சின்னத்தம்பி வேலுப்பிள்ளை**



(இளைப்பாறிய ஆசிரியர், யா/கைதடி குருசாமி வித்தியாலயம்)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலுப்பிள்ளை வியா ழக்கிழமை (08.03.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரஞ் சோதி அம்மா (முன்னாள், அதிபர் யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மக னும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-அன்ன லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராசையாவின் மைத்துனரும், மல்லிகா, காலஞ்சென்ற சிவரூபன் (திருமணப் பதிவாளர், J.P) ஆகியோரின் பாச மிகு தந்தையும் மனோகரன் (Retd, Regional Airport Service Manager, Sri Lanka Airlines), ராஜசோதி (ஆசிரியை-இந்துக் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனும், ஹம்சாஜினி, தக்சாஜினி, போசினி, பிரதாப் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாளை (11.03.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப 11 மணியளவில் ஊறல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்,

(15486) (6,7,10)

## வாகனம் விற்பனைக்கு குண்டு

நல்ல நிலையிலுள்ள 13 sri MITZUBISI LANCER CAR விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 6162019

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் கைய டக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றுக்கு விற்பனையாளர் /காசாளர் உடன் தேவை. அனுப வம் உள்ளவர்கள் விரும்பத் தக்கது.

(15592(7,9,12)

தொடர்பு:0779955588

## பஸ் விற்பனைக்கு

TATA - DIMO - 61- 9xxx- இரட் டைக் கதவுடைய, 40 ஆசனங்களைக் கொண்ட பஸ் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 6450184

(15448)(6-7-8)

## காணி விற்பனைக்குண்டு

இணுவில்தியேட்டர்லேனில்புகையிரதநிலையச்சந்தியில் 8½ பரப்புக்காணி (மயிலவனை) விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு : க. முருகையா (இணுவில்)

(15478)(6-7-8)

021 3216763

## Toyato Corolla - 141 விற்பனைக்கு

Auto, 2007-2008 Model, Full option (Security + R/S) Low mileage - 9500km வைத்தியரின் சொந்தப் பாவனையிலிருந்த கார் விற்பனைக்கு.

தொடர்பு : 077 3493440

## மரண அறிவித்தல்

**சிவசுப்பிரமணியம் சிவதாசன்**



டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னா கத்தைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி வடக்கு அம்பாள் கோயிலடியில் மணம் புரிந்தவரும், திருகோணமலை வடக்கு -கிழக்கு மாகாண மின் பொறியியலாள ராகப் பணி புரிந்தவருமான சிவசுப்பிர மணிம் சிவதாசன் 08.03.2012 வியாழக் கிழமை அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் (முன்னாள் ஸ்கந் தவரோதயக் கல்லூரி, அதிபர்)-சிரோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், கமலாதேவி (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை)யின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நடேசு-கன கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கஜேந்திரதாஸின் பாச மிகு தந்தையும், வனஜாகவின் அன்பு மாமனும், Dr. வேணந்த ராசா, Dr. சிவபாலன், திருமதி சிவலோஜனாதேவி, காலஞ் சென்றவர்களான திருமதி சிவஞானேஸ்வரி, இராஜசிங்கம், சிவஞானசுந்தரம், சிவரட்ணம், சிவமனோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவராஜா (நில அளவையாளர்), மல்லி காதேவி ஆகியோரின் மைத்துனரும், தனபாலசிங்கத்தின் சகலனும், லோறன்ஸின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அளவெட்டி வடக் கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் அளவெட்டி வடக்கு மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
அம்பாள் கோயிலடி.

தகவல்:
மனைவி, மகன்.

(15481) (6,7,10)

## ஓராண்டு நினைவினிலே...

பிறப்பு: 12 ★ 05 ★ 1952



இறப்பு: 20 ★ 02 ★ 2011

அமரர்

### துரையப்பா நடராசா

விழி மூடி ஓராண்டு விரைந்தோடிச் சென்றதுவோ...
அழுகின்ற விழியோடு அவனியிலே தேடுகின்றோம்.
அறியாது உம் நினைவு ஆண்டு பல சென்றாலும்...
ஒளியேற்றும் தீபமே உமையென்று காண்போம்.

நிரந்தர முகவரி: ஓட்டுவெளி, மிருசுவில்.

தற்காலிக முகவரி: துன்னாலை மேற்கு, கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்

(C/2950) (6-7-12)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம் சின்னையா



தேவாலய வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் பாரதி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம் சின்னையா நேற்று (09.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தர் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும் சீதாலட்சுமி (பாக்கியம்), செல்வராசா (சுவிஸ்), சின்னராசா, குணராசா (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தாயும், மரியராசா, வசந்தா (சுவிஸ்), மேரிமாக்ரட் (ராணி), ரதி ஆகியோரின் அன்பு நிறைந்த மாமியும், தாட்சாயினி (சுவிஸ்), மனோஜ் (சுவிஸ்), யூலின் தக்சன், டெலக்சிகா, டனுசியா ஆகியோரின் பேர்த்தியும் வசந்தமலர், இராசதுரை ஆகியோரின் மூத்த சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி வீதி, சங்கானை.

தகவல்: பிள்ளைகள்.

(15489) (2-6-7)

## உள்ளூராட்சி மன்றங்கள் வருமானத்தின் பத்து வீதத்தை பொதுமக்களுக்கு ஒதுக்க வேண்டும்

### மகளிர் தின நிகழ்வில் மாவை எம்.பி

யாழ்ப்பாணம் , மார்ச் 10

வடபகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தமது வருமானத்தின் பத்து வீதமான பணத்தை பொது மக்களின் வாழ்வாதாரத் தேவைகளுக்கு ஒதுக்க வேண்டும்.

ஏனெனின் பொதுமக்கள் தமது ஒற்றுமையின் பலத்தை நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் மூலம் நிலை நிறுத்தியுள்ளார்கள். இதற்கு கைமாறாக மக்களுக்கு நாம் உதவ முன்வர வேண்டும். யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இவ்வாறு தெரிவித்துள்ளார் .

வலிகாமம் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள மோகன் அரங்க மேடையில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழத்தும்போது அரசு போரால் பாதிப்படைந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு போர்ச் செலவுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடுகளைச் செய்துவருகிறது.

கடந்த 30 ஆண்டுகளில் எமது மக்கள் பட்ட துன்பங்கள் அதிகமாக இருந்தாலும் எமது ஒற்றுமையின் பலத்தை இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் மூலம் நிரூபித்து உள்ளார்கள் .

இதனை உள்ளூராட்சி சபைகள் முன்னிலைப்படுத்தி உள்ளூராட்சிச் சபைக்கு கிடைக்கும் வருமானத்தில் 10 வீதமான நிதி ஒதுக்கீட்டை மக்களின் வாழ்வாதாரச் செலவுக்கு வழங்க முன்வர வேண்டும் - என்றார்.

(ம-14-28)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அரியாலையில் நெற் பரப்பு 20 விற்பனைக்கு உண்டு.

(15487) (7,9,12) தொடர்பு:0779589718

### வாடகைக்கு

வெள்ளவத்தைப் பகுதியில் A/C, Non A/C அறைகள் வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கேற்ற கொட்வோட்டர், வோசிங்மெசின், கிச்சின் T.V வசதி களுடன் வீட்டின் பகுதிகள் நாள்/வார/மாத வாடகைக்குண்டு.

(15509)(6-7-8) தொடர்பு : 072 5002124

### வீடு விற்பனைக்கு

மீசாலை கிழக்கு, அல்லாரை வீதியில் J/318 கிராம சேவகர் அலுவலகத்துக்கு அருகில் 5 பரப்புக் காணியுடன் கூடிய 37 அடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு :0779711972

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சௌபாக்கியத்தை தேடிச் செல்லும்
பயணதின் முன்னோடியாக
இலங்கைப் பெண்களுக்குத் தேசிய
மரியாதை தெரிவிக்கும் விழாவில்
அதி மேன்மை தங்கிய
**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ**
அவர்களினாலும்
இலங்கையின் முதற்பெண்மணி
**கௌரவ திருமதி சிராந்தி ராஜபக்ஷ**
அவர்களினாலும் அலரிமாளிகையில்
சர்வதேச மகளிர் தினத்தன்று
கௌரவிக்கப்பட்ட 08 பெண்களில்
ஒரே ஒரு தமிழ் பெண்ணாக
கௌரவிக்கப்பட்ட
யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்
பெருமதிப்பிற்குரிய
**திருமதி இமெல்டா சுகுமார்**
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் அவர்களின் சேவை
மேன்மேலும் தொடர உளமார
வாழ்த்துகின்றோம்.

**பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்
நலன்புரி சங்கம், பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.**

(15490) (6,7,10)

Study & work in LONDON
With 20 Hrs Work Rights
HAVE YOU COMPLETED YOUR A/L???
LONDON - 100% VISA GUARANTEED
JUNE 2012 Intake
21 & 22 APRIL 2012 @ BIBM Colombo 06
SPOT ADMISSION without IELTS



By GLYNDWR - London University Officials
IELTS அவசியமில்லை
Course fee £4000 per year (3 Year Degree)
UK சென்று உங்கள் உயர்கல்வியை 20Hrs வேலை வாய்ப்பு அனுமதியுடன் தொடர மிகக்குறுகிய காலத்தில் குறைந்த செலவில் ஒழுங்குகள் செய்து தரப்படும்.
Courses without IELTS
» BA (Hons) Business Studies
» BA (Hons) Business Accounting
» BA (Hons) Business Marketing
» BA (Hons) in Health Studies (Top-up)
» MBA
Hotline : 077 1553323
MAKE AN APPOINTMENT AND REGISTER WITH YOUR QUALIFICATION FOR OFFER LETTER
BRITISH INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (PVT) LTD.
(Member of e2P Allied Group - UK, India, Pakistan)
# 81, 1/1, W.A.De Silva Mawatha, Colombo 06.
(Opposite to Royal Hospital, Wellawatta.)
Tel. 011 2586894 / 011 2586895
E-mail : info@bibm.lk
www.bibm.lk

### நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும்,கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 12.03.2012 தொடக்கம் 26.03.2012 பி.ப 4.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி: 27.03.2012 மு.ப 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 27.03.2012 மு.ப 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை தலைவர்/செயலாளர் ,நல்லூர் பிரதேசசபை , கருவப்புலம் வீதி கொக்குவில் என்ற விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை,பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTADதரம் |
|---|---|---|---|---|
| 01 | அரியாலை கிழக்கு இந்து மயான தகனக் கொட்டகை அமைத்தல் | 2950.00 | 500.00 | M10/C10 |
| 02 | கோட்டைக்காடு இந்து மயான தகனக் கொட்டகை அமைத்தல் | 2950.00 | 500.00 | M10/C10 |
| 03 | திருநெல்வேலி இந்து மயான தகனக் கொட்டகை அமைத்தல் | 2950.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

(C/9657)(2-6-7-12)

ப.வசந்தகுமார், தவிசாளர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### (முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்)

★. 3ஆம், 4ஆம் வருடம் வணிகமாணி / தொழில் நிர்வாக மாணி - இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் 2010

★. 1ஆம், 2ஆம் வருடம் வணிகமாணி / தொழில் நிர்வாக மாணி - இரண்டாம் அரையாண்டு மீள் பரீட்சைகள் 2010

★. 1ஆம், 2ஆம், 3ஆம் வருடம் (புதிய கட்டமைப்பு) தொழில் நிர்வாகமாணி - முதலாம் அரையாண்டு பரீட்சைகள் 2011

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் 12.03.2012 ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூபா 50/= பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 19.03.2012 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்
09.03.2012

(C/9656)(6-7-8)

# விடைபெறும் பெருஞ்சுவர்





இந்திய அணியின் சுவர் என்று அழைக்கப்படும் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் ராகுல் ட்ராவிட் சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். பெங்களூரில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தனது ஓய்வை ராகுல் ட்ராவிட் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

கிரிக்கெட் பயணம் மிகச்சிறந்த பயணமாக அமைந்ததாகத் தெரிவித்த ராகுல் ட்ராவிட், தன் மீதான நம்பிக்கைகளை வெளிப்படுத்தியமைக்காக ஏராளமானோருக்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார். தனது பயிற்றுவிப்பாளர்கள், உடற்கூற்று நிபுணர்கள், தேர்வாளர்கள், அணித்தலைவர்கள் ஆகியோருக்கு தனது நன்றிகளைத் தெரிவித்ததோடு ஊடகவியலாளர்களைத் தான் மதிப்பதாகவும், இந்திய அணியின் இடம்பெறும் அந்த மகிழ்ச்சியான உணர்வை தான் இழக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தனது மகன்மாரான சமித், அன்வே ஆகியோருடன் தனது நேரத்தைச் செலவிட எதிர்பார்ப்பதாகவும், அவர்களை பாடசாலைக்கு கூட்டிச் செல்வதை தனது பிரதான கடமையாக எதிர்காலத்தில் கொள்ளப் போவதாகவும் தெரிவித்துள்ளார். அத்தோடு ரசிகர்கள் அனைவருக்கும் தனது நன்றியறிதலைத் தெரிவித்த ராகுல் ட்ராவிட், அவர்களது ஆதரவுக்கு நன்றியையும் தெரிவித்தார்.

தான் கவலைகளோடும் விளையாடியதாகவும், பெருமைகளோடும் விளையாடியதாகவும், எப்போதுமே தன்னால் முடிந்தளவு சிறப்பாக விளையாட முயன்றதாகவும் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஸ்ரீனிவாசன் - ராகுல் ட்ராவிட்டிற்கு தனது நன்றிகளைத் தெரிவிப்பதாகவும், அவர் இந்தியக் கிரிக்கெட்டிற்கு ஆற்றிய சேவைகளுக்கு நன்றிகள் எனவும், கிரிக்கெட்டைத் தாண்டிய அவரது வாழ்க்கைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

கருத்துத் தெரிவித்த இந்திய அணியின் முன்னாள் தலைவர் அனில் கும்ளே, ராகுல் ட்ராவிட்டின் கிரிக்கெட் வாழ்வு அற்புதமானது எனவும், ஏராளமான மறக்கமுடியாத வெற்றிகளை பகிர்ந்து கொண்டதாகவும், அவரோடு பகிர்ந்த கணங்கள் அற்புதமானது எனத் தெரிவித்ததோடு, அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும், அவரோடு இணைந்து போட்டியில் பங்குபற்றியமை பெருமை தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ராகுல் ட்ராவிட் எப்போதும் அற்புதங்களுக்குச் சொந்தக்காரர் எனத் தெரிவித்த அனில் கும்ப்ளே, ராகுல் ட்ராவிட்டின் சாதனைகள், தரவுகள் அவரது வகிபாகத்தின் ஒரு பகுதியையே காட்டி நிற்பதாகவும், அணிக்காக போட்டியில் பங்குபற்றும் மாபெரும் வீரர் எனத் தெரிவித்ததோடு கிரிக்கெட்டின் மிகச்சிறந்த தூதுவர் எனவும் தெரிவித்தார். அத்தோடு கிரிக்கெட் நிர்வாகத்தில் ராகுல் ட்ராவிட்டைக் காண விரும்புவதாகவும் கோரிக்கை விடுத்தார்.

அதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ராகுல் ட்ராவிட், ஓய்வுபெறுவதற்கான சரியான தருணம் இதுவெனத் தான் உணர்வதாகவும், அதன் காரணமாக இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். சர்வதேச விளையாட்டுகளின் போது சிறந்த திறமை வெளிப்பாடுகளும், சில மோசமான திறமை வெளிப்பாடுகளும் சாதாரணம் எனத் தெரிவித்ததோடு, எப்போதும் தன்னால் முடிந்தளவு சிறப்பாக விளையாட முயற்சித்ததை எண்ணி திருப்தியடைவதாகவும், எந்தவிதக் கவலைகளும் தன்னிடம் இல்லை எனவும், மிகுந்த திருப்தியாக உணர்வதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச வீரராக விமர்சனங்களை எதிர்கொள்ள ஒருவர் பழகிக் கொள்ள வேண்டும் எனவும், அதேபோல பாராட்டுக்களும் அவ்வாறே எனவும் தெரிவித்த அவர், எனினும் ஊடகவியலாளர்கள் தன்மீது நட்புடன் செயற்பட்டதாகவும் குறிப்பிட்டார். ஆஸ்ரேலியாவில் இடம்பெற்ற மோசமான தொடரா ஓய்விற்கான காரணம் எனக் கேட்கப்பட்டதற்கு, ஆஸ்ரேலியத் தொடரில் என்ன இடம் பெற்றிருந்தாலும், அந்தத் தொடர் முடிவில் தனது கிரிக்கெட் தொடர்பான முடிவொன்றை ஆராய விருந்ததாகவும், அந்தத் தொடர் சிறப்பாக அமைந்திருந்தாலும் தற்போது எடுத்துள்ள முடிவையே எடுத்திருப்பேன் எனவும் தெரிவித்தார்.

உணர்வுகளை ஒதுக்கிவைத்துவிட்டு இந்த முடிவை எடுக்க விரும்பியதாகவும், சச்சின் உட்பட அனைத்து சக வீரர்களோடும் இதுகுறித்துக் கலந்துரையாடியதாகவும் ராகுல் ட்ராவிட் தெரிவித்தார். தான் மிகச்சிறந்த நட்சத்திரங்களும் போட்டியில் பங்குபற்றியதாகவும், அதுகுறித்து பெருமையடைவதாகவும் குறிப்பிட்ட ட்ராவிட், இந்த முடிவை எடுக்க சிறப்பான காரணங்கள் எதுவுமில்லை எனக் குறிப்பிட்டதோடு, ஓய்வு என்பது அனைவருக்கும் வரக்கூடிய தவிர்க்க முடியாத ஒன்று எனவும் தெரிவித்தார். கிரிக்கெட்டில் வெற்றிபெறுவதற்காக பங்குபற்ற வேண்டும் எனத் தெரிவித்த ராகுல் ட்ராவிட், எப்போதுமே எண்ணிக்கைகளுக்காக போட்டியில் பங்குபற்றக்கூடாது எனத் தெரிவித்தார். (5)

| | |
|---|---|
| பெயர் | : ராகுல் டிராவிட் |
| பிறந்த திகதி | : 11 ஜனவரி 1973<br>வயது 39 |
| துடுப்பாட்ட வகை | : இடது கை |
| முதல் டெஸ்ட் | : 20 ஜூன் 1996<br>எதிர் இங்கிலாந்து |
| கடைசி டெஸ்ட் | : 24 ஜனவரி 2012<br>எதிர் ஆஸ்திரேலியா |
| முதல் ஒருநாள் ஆட்டம் | : 03 ஏப்ரல் 1996<br>எதிர் இலங்கை |
| கடைசி ஒருநாள் ஆட்டம் | : 16 செப்ரெம்பர் 2011<br>எதிர் இங்கிலாந்து |

| | டெஸ்ட் | ஒருநாள் |
|---|---|---|
| ஆட்டம் | 164 | 344 |
| ஓட்டங்கள் | 13,288 | 10,889 |
| துடுப்பாட்ட சராசரி | 52.31 | 36.16 |
| 100 / 50 ஓட்டங்கள் | 36/63 | 12/83 |
| கூடிய ஓட்டங்கள் | 270 | 153 |
| விக்கெட்டுகள் | 1 | 4 |
| சிறந்த பந்துவீச்சு | 1/18 | 2/43 |
| பிடி / ஸ்ட்ம்பிங் | 210/0 | 196/14 |

## பின்தங்கியது இந்தியா

நடந்து முடிந்த முக்கோண ஒருநாள் தொடரில் காட்டிய மோசமான திறமை வெளிப்பாடுகள் காரணமாக இந்திய அணி மூன்றாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இரண்டாவது இடத்தில் இருந்த இந்தியா பின்தள்ளப்பட்டு மூன்றாவது இடத்தில் காணப்படுகிறது.

ஆஸ்திரேலிய அணி 127 தரப்படுத்தல் புள்ளிகளோடு தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகிறது. இரண்டாமிடத்தில் தென்னாபிரிக்க அணி 118 புள்ளிகளோடு காணப்படுகிறது. சீ.பி கிண்ண தொடரில் 8 ஆட்டங்களில் 3 ஆட்டங்களில் மாத்திரமே வெற்றிபெற்றதன் காரணமாக 117 புள்ளிகளோடு இந்தியா பின்தங்கிக் காணப்படுகிறது.

இலங்கை அணி அதே 4 ஆம் இடத்தில் காணப்படுகின்ற போதிலும் தரப்படுத்தலில் 3 புள்ளிகளை அதிகமாகப் பெற்றுள்ளது. இதன்படி 114 தரப்படுத்தல் புள்ளிகளை இலங்கை கொண்டுள்ளது. 5 ஆவது இடத்தில் இங் கிலாந்து 111 புள்ளிகளோடும் 6 ஆவது இடத்தில் பாகிஸ்தானும் 7 ஆவது இடத்தில் நியுஸிலாந்து 8 ஆவது இடத்தில் மேற் கிந்தியத் தீவுகள் 9 ஆவது இடத்தில் பங்களாதேஷ் 10 ஆவது இடத்தில் சிம்பாப்வே 11 ஆவது இடத்தில் அயர்லாந்து 12 ஆவது இடத்தில் நெதர்லாந்து 13ஆவது இடத்தில் கென்யா ஆகிய அணிகள் காணப்படுகின்றன. (5)

## ஆட்டமிழப்பு சரியானதே!



ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கிடையில் கடந்த 26 ஆம் திகதி சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தது விதிகளுக்கு ஒத்திசைவானது என்று கிரிக்கெட் விதிகளைக் கட்டுப்படுத்தும் மெரிலிபோன் கிரிக்கெட் கழகம் அறிவித்துள்ளது.

அந்த ஆட்டத்தில் இந்திய அணியின் கௌதம் கம்பீர் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தபோது பந்தை மெதுவாகத் தட்டிவிட்டு ஓட்டமொன்றைப் பெற சச்சினை அழைத்தார். மறு முனையிலிருந்து துடுப்பெடுத்தாடும் பக்கம் நோக்கி ஓடிய சச்சின் டெண்டுல்கர், பந்தை எடுக்க ஓடிய பிரட் லீ குறுக்கே வந்ததன் காரணமாக வேகமாக ஓடமுடியாது போனது. பந்தை எடுத்த டேவிட் வோணர் பந்தை இலக்கை நோக்கி எறிய சச்சின் டெண்டுல்கர் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சாளர் பிரட் லீ - டெண்டுல்கரை வேண்டுமென்றே தடுக்க முனையவில்லை என்பதோடு, டெண்டுல்கரை முழுமையாக மறித்திருக்கவில்லை என்றபோதிலும் குறித்த ஆட்டமிழப்பு தொடர்பாக விமர்சனங்கள் எழுப்பப்பட்டன. சச்சின் டெண்டுல்கரும் குறித்த ஆட்டமிழப்பு வழங்கப்பட்டதும் தனது விருப்பமின்மையை மைதானத்தில் வெளியிட்டார்.


அந்த ஆட்டமிழப்பு தொடர்பாக எம்.சி.சி. தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

எம்.சி.சி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் 42.5 ஆவது விதிக்குறிப்பின் படி எந்தவொரு களத்தடுப்பாளரும் துடுப்பாட்ட வீரரின் ஓட்டப்பாதையை வேண்டுமென்று தடுக்கக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. இதில் வேண்டுமென்றே என்ற வார்த்தை முக்கியமானது. குறித்த சந்தர்ப்பத்தில் பிரட் லீ வேண்டுமென்றே சச்சினை தடுக்க முயன்றார் என்பதற்கான அறிகுறிகளும் காணப்படவில்லை, எனவே சச்சின் டெண்டுல்கரின் ஆட்டமிழப்பு விதிகளின்படி சரியானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவிர, அந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியின் டேவிட் ஹசி ஓட்டமொன்றைப் பெறும் தன்னை நோக்கி வந்த பந்தை கையால் தட்டிவிட்டார். அது தொடர்பாக நடுவர்கள் கலந்துரையாடி அது ஆட்டமிழப்பு அல்ல என்று தீர்ப்பு வழங்கினர். அந்தத் தீர்ப்பை இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி எதிர்த்து நடுவர்களிடம் கலந்துரையாடியிருந்தார்.

அந்தச் சம்பவம் தொடர்பாக எம்.சி.சி. ஆராய்ந்து வருவதாகவும், குறித்த சம்பவம் விதிகளின் சில பிரிவுகள் மீது கருத்துக்களை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்த எம்.சி.சி, இது குறித்து முழுமையான விவாதங்கள் நடத்தப்பட வேண்டும் என்று எம்.சி.சி. உணர்வதாகவும் தெரிவித்துள்ளது. (5)

## முன்னிலையில் தென்னாபிரிக்கா



நியுஸிலாந்தில் இடம் பெற்றுவரும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆட்டமுடிவில் தென்னாபிரிக்க அணி ஆதிக்கம் செலுத்தியது. நேற்றைய நாள் ஆட்டமுடிவில் தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் தென்னாபிரிக்க அணி 3 இலக்குகளை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன்மூலம் 7 இலக்குகள் கைவசம் உள்ள நிலையில் 233 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

36 ஓட்டங்கள் பின்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அல்விரோ பீற்றர்சன் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்ததாகக் களமிறங்கிய ஹசிம் அம்லா 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, 3 ஆவது இலக்குக்காகத் துடுப்பெடுத்தாடிய ஜக்ஸ் கலிஸ், கிரேம் ஸ்மித் ஜோடி 200 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தது.

தென்னாபிரிக்க அணி 247 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், 115 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிரேம் ஸ்மித் ஆட்டம் இழந்தார். நேற்றைய நாள் ஆட்டமுடிவில் ஜக்ஸ் கலிஸ் 107 ஓட்டங்களுடனும், ஜக்ஸ் ருடோல்ப் 13 ஓட்டங்களுடனும் காணப்பட்டனர். நேற்றைய தினம் ஜக்ஸ் கலிஸ் தனது 42 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் நியுஸிலாந்து அணி சார்பாக வீழ்த்தப்பட்ட இலக்குகள் அனைத்தையும் டக் பிரேஸ்வெல் கைப்பற்றினார். முன்னதாக் தென்னாபிரிக்க அணி தனது முதலாவது இனிங்ஸில் 238 ஓட்டங்களையும்; நியுஸிலாந்து அணி 273 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (5)

# 106 ஆவது வடக்கின் பெரும் போர்

## சென்.ஜோன்ஸ் கல்லூரியை சரிவிலிருந்து காத்தார் சன்சயன்

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன் தினம் வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி சென்ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கு இடையிலான 106ஆவது பெரும் துடுப்பாட்டப் போட்டி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்து ஆடியது. 144 ஓட்டங்களுடன் சகல இலக்குகளையும் அது இழந்தது.

எனினும் தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 2 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. நேற்றுக் காலை 9 மணிக்கு இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமானது. யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களான கோகுலன்,



களத்தடுப்பில் யாழ் மத்திய கல்லூரி அணியினர்.

வதுஷனன், சௌமிதன் ஆகியோரின் பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினுடைய இலக்குகள் சாய்க்கப்பட்டன. 90 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து தத்தளித்த சென்ஜோன்ஸ் கல்லூரியை சன்சயன் - பிருந்தாபன் சோடிகள் நிதானமான ஆட்டத்தின்மூலம்தமதுஅணியை மெல்லத் தூக்கிநிறுத்தினர்.

இருவரும் இணைப்பாட்டமாக 98 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சன்சயன் 68 ஓட்டங்களை எடுத்திருந்தபோது, சௌமிதரனின் பந்து வீச்சில் நிசாந்தரூபனிடம் பிடிகொடுத்த ஆட்டம் இழந்தார். தொடர்ந்து பிருந்தாவன், ஏபிரகாம்அனோஜன் சோடிகள் இணைந்து கொண்டு தமது அணிக்கான ஓட்டங்களைச் சேகரித்த வண்ணம் இருந்தனர். இதன்போது பிருந்தாவன் 31 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ரண்அவுட் மூலம் ஆட்டம் இழந்தார். தொடர்ந்து வந்த சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்து செல்ல சென். ஜோன்ஸ் கல்லூரி 79.1 பந்து பரிமாற்றங்களில் 237 ஓட்டங்களைப் பெற்றது.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. மூன்றாம் நாள் ஆட்டம் இன்று தொடரும்.

(உ-23)



துடுப்பாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள்



கல்லூரி பழைய மாணவர்களின் ஆரவாரம்





சகோதரப் பாடசாலை மாணவிகளின் ஆரவாரம்



வெளியில் இருந்து போட்டியைப் பார்வையிடும் ஆர்வலர்கள்

**சென்.ஜோன்ஸ் எதிர் சென்றல்**

யாழ். மத்திய கல்லூரி மைதானம்

சென்றல் 144 (59.3) சென்.ஜோன்ஸ் 72/2 (32)

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடங்கும்

### சென்றல் கல்லூரி

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கபிலன் | ரன் அவுட் (சஞ்சயன்) | 18 | 55 | 4 | 0 |
| ஸ்ரீவர்ணன் | c சஞ்சயன் b விந்தாகரன் | 14 | 78 | 1 | 0 |
| நிரோஜ் | c சஞ்சயன் b விந்தாகரன் | 4 | 21 | 0 | 0 |
| சௌமிதரன் | ரன் அவுட் (கபிலன்) | 0 | 3 | 0 | 0 |
| யூனிஸ்கனிஸ்ரன் | c ரஜிந்தன் b விந்தாகரன் | 1 | 5 | 0 | 0 |
| வதுசனன் | st கபில்ராஜ் b விந்தாகரன் | 12 | 18 | 2 | 0 |
| கோகுலன் | c எபிரகாம் அனோஜன் b கபாஸ்கர் | 35 | 94 | 3 | 0 |
| டார்வின் | b கபிலன் | 22 | 40 | 4 | 0 |
| நிசாந்தரூபன் | c விந்தாகரன் b அமிர்தயன் | 7 | 32 | 0 | 0 |
| சர்மிகன் | (ஆட்டமிழக்காமல்) | 7 | 4 | 0 | 1 |
| லக்சனன் | ரன் அவுட் (றஜிந்தன்/கபில்ராஜ்) | 1 | 6 | 0 | 0 |
| உதிரிகள் | | 23 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 144 | | | |

இலக்கு இழப்பு: 1-38, 2-45, 3-45, 4-46, 5-59, 6-67, 7-104, 8-136, 9-142, 10-144

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பிருந்தாபன் | 3 | 1 | 16 | 0 |
| சஞ்சயன் | 6 | 1 | 18 | 0 |
| கபிலன் | 10 | 3 | 29 | 1 |
| துவாரகசீலன் | 5 | 4 | 9 | 0 |
| விந்தாகரன் | 17 | 4 | 26 | 4 |
| அமிர்தயன் | 13.3 | 3 | 35 | 1 |
| ரஜிந்தன் | 2 | 0 | 2 | 0 |
| கவாஸ்கர் | 3 | 2 | 1 | 1 |

### சென்.ஜோன்ஸ் கல்லூரி

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கபில்ராஜ் | c யூனிஸ்கலிஸ்ரன் b மதுசனன் | 0 | 2 | 0 | 0 |
| ரஜிந்தன் | c யூனிஸ்கலிஸ்ரன் b மதுசனன் | 27 | 78 | 3 | 0 |
| துவாரகசீலன் | c கோகுலன் b கோகுலன் | 30 | 98 | 3 | 0 |
| விந்தாரகன் | b வதுசனன் | 2 | 24 | 0 | 0 |
| அமிர்தயன் | c சர்மிகன் b வதுசனன் | 8 | 13 | 2 | 0 |
| அற்றியன் | lbw b கோகுலன் | 8 | 12 | 1 | 0 |
| சஞ்சயன் | c நிசர்ந்தரூபன் b சௌமிதரன் | 68 | 76 | 12 | 0 |
| பிருந்தாபன் | ரன் அவுட் | 31 | 81 | 2 | 0 |
| எ.பி.அனோஜன் | c யூனிஸ்கலிஸ்ரன் b சௌமிதரன் | 23 | 50 | 3 | 0 |
| கவாஸ்கர் | c நிசாந்தரூபன் b கோகுலன் | 16 | 36 | 2 | 0 |
| கபிலன் | (ஆட்டமிழக்காமல்) | 0 | 9 | 0 | 0 |
| உதிரிகள் | | 24 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 237 | | | |

இலக்கு இழப்பு: 1-1, 2-59, 3-72, 4-72, 5-86, 6-90, 7-188, 8-208, 9-225, 10-237

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வதுசனன் | 28 | 5 | 63 | 4 |
| ஸ்ரீவர்ணன் | 2 | 0 | 6 | 0 |
| கோகுலன் | 34.1 | 7 | 89 | 3 |
| டார்வின் | 4 | 0 | 18 | 0 |
| லக்சன் | 3 | 0 | 20 | 0 |
| நிஷாந்தரூபன் | 1 | 0 | 8 | 0 |
| சௌமிதரன் | 7 | 1 | 19 | 2 |

### சென்றல் கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸில்

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கபிலன் | b பிருந்தாபன் | 6 | 16 | 1 | 0 |
| ஸ்ரீவர்ணன் | c பிருந்தாபன் b சஞ்சயன் | 12 | 52 | 1 | 0 |
| நிரோஜ் | c விந்தாகரன் b அமர்தயன் | 41 | 109 | 6 | 0 |
| சௌமிதரன் | ஆட்டமிழக்காமல் | 6 | 89 | 0 | 0 |
| டார்வின் | ஆட்டமிழக்காமல் | 0 | 11 | 0 | 0 |
| உதிரிகள் | | 11 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 76 | | | |

இலக்கு இழப்பு: 1-11, 2-30, 3-76

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பிருந்தாபன் | 7 | 1 | 24 | 1 |
| சஞ்சயன் | 8 | 1 | 13 | 1 |
| கபிலன் | 5 | 1 | 5 | 0 |
| விந்தாகரன் | 9 | 3 | 13 | 0 |
| அமிர்தயன் | 8 | 3 | 12 | 1 |
| கவாஸ்கர் | 6 | 2 | 6 | 0 |
| துவாரசீலன் | 1 | 1 | 1 | 0 |
| அற்றியன் | 2 | 0 | 1 | 0 |

# கிரிக்கெட் கழகங்களிடையே பிரிமிய லீக் சுற்றுப் போட்டி



வலி.வடக்கு,மார்ச் 10

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் மல்லாகம் பகுதி கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்கள் நான்குக்கு இடையே மல்லாகம் பிரிமிய லீக் சுற்றுப் போட்டி ஒன்று ஆரம்பமாகியுள்ளது.

12 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய போட்டியாக நடைபெறும் இந்தப் போட்டியில் நான்கு கழகங்கள் பங்குபற்றுகின்றன.

நான்கு கழகங்களிலும் கழக அங்கத்தவர்களும் தெல்லிப்பழை உடுவில் பிரதேச செயலர் பிரிவுக ளுக்கு உட்பட்ட மென்பந்து கிரிக்கெட் முன்னணி வீரர்கள் ஒவ்வொரு அணியிலும் இணைக் கப்பட்டுள்ளார்கள்.

மல்லாகம் பகுதியில் கழகங்களுக்கு இடையே கிரிக்கெட் அபிவிருத்தியை மேற்கொள்ளும் முகமாக இந்த நடவடிக்கை இடம் பெற்றுள்ளது. (ம-86)

# யாழ். பல்கலை நடத்தும் வலைப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 10

யாழ்.பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட அணி யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையுடன் இணைந்து மாவட்ட ரீதியாக வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியை நடத்தவுள் ளது.

இந்தப் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் விண்ணப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பெற்று அத னைப் பூரணப் படுத்தி எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அவித்துள்ளனர். (த-23)

## பல்கலைக்கழகத்தின் தடகளப் போட்டிகள்

யாழ்.பல்கலைக்கழக பீடங்களுக்கு இடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணி முதல் மாலை 5.30 மணி வரை நாளை ஞாயிற்றுக்கிழமை 8.30 மணி முதல் 5.30 மணிவரை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற வுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல் கலைக் கழக வவுனியா வளாக வணிகக் கற்கைகள் பீடாதிபதி கலாநிதி ரி.மங்களேஸ் வரனும் சிறப்பு விருந்தினராக ஒட்டு சுட்டான் மகா வித்தியாலய ஆசிரியர் என்.கருணாகரனும் கலந்துகொள்ள வுள்ளனர். (த-23)

## இன்றைய போட்டி

யாழ் மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரனையுடன் கைதடி தென்கிழக்கு சித்திவிநாயகர் விளையாட்டுக்கழ கம் தென்மராட்சி பிரதேசத் துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடைபெற்று வரும் தாச்சிச் சுற்றுப் போட் டித் தொடரில் இன்று சனிக் கிழமை மாலை 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக்கழகத்தை எதிர் த்து கைதடி மத்தி வளர்மதி அணி மோதும். (த-23)


## தேவை

யாழ் நகரில் பிரபல **Tiles** விற்பனை நிறுவனத்துக்கு **Store keeper, marketing officer** தேவை அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**The metro engineering** (pvt) ltd

NO:212,பலாலி வீதி, யாழ்ப்பாணம்
E-mail:-suren@metrohomes.lk


## மரண அறிவித்தல்

### முருகேசு மயில்வாகனம்



பூநகரியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு மயில்வாகனம் நேற்று (09.03.2012) வெள்ளிக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தகுமார் (லண்டன்), முகுந்தறூபி, தமீரா, வகிர்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகனதாஸின் மாமனும் கிசோன், கிசோனிக்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி சித்துப் பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


54 A, புங்கன்குளம் வீதி,
(கணக்கர் சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

(15500)

தகவல் :
க.மோகனதாஸ்
(மருமகன்)

## கண்ணீர் அஞ்சலி

### சூசைப்பிள்ளை அகஸ்ரீன்



(கிளி / கிளாலி றோ.க.த.க பாடசாலை எழுதுமட்டுவாழ்)

கல்விச் சேவையில் என்னு டன் கைகோர்த்தவர் அன்பால் எமை ஈர்ந்த பெருந்தகை. நெருக் கடிகள் சூழ்ந்த போதும் குலையாத கல்விச் செல்வம் ஈர்ந்தவர். அதிகார அசுரதனங்களுள் நின்று தமிழ்த் தேசியம் மீது ஆறாப்பற்றுடன் பணிசெய்த பற்றாளன் - நண்பன் அமரர் அகஸ்ரீன்.

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தித்து நிற்கின்றோம்.

சிவஞானம் சிறிதரன்
(நாடாளுமன்ற உறுப்பினர்),
அமைப்பாளர்கள், கட்சி நிர்வாகிகள்,
அறிவகம், தமிழ்த்தேசிய
கூட்டமைப்பு, கிளிநொச்சி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

### பட்டச் சான்றிதழ் வழங்கல்

**(கலைமாணி, வணிகமாணி, இசைமாணி மற்றும் நடனமாணி)**

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் சித்தியடைந்த வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ்களை 12.03.2012 திங்கட் கிழமை தொடக்கம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உரியவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பட்டச் சான்றிதழ்களுக்கான கட்டணமாக ரூ. 500.00 இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி, அதற்கான பற்றுச் சீட்டை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து பட்டச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

*பதிவாளர்*
*08.03.2012*

## ஈர விழிகளுடன் முதலாம் ஆண்டில்

அன்னை மடியில் 1941 . 08 . 13



விநாயகர் திருவடியில் 2011 . 02 . 20

*அமரர் கிருஸ்ணராசா கமலாம்பிகை*

*திதி: அபரபக்க திருதியில் (10.03.2012)*

எம்மை யெல்லாம் ஆளாக்கி
நல்வாழ்வு வாழ வழிகாட்டிய தாயே
உங்கள் நினைவில் நாம்
முதலாம் ஆண்டில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

*இல. 61, பிறவுண் வீதி,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வவுனியாவில் முதன்முறையாக கிரிக்கெட் சுற்றுப் போட்டி


வவுனியா, மார்ச் 10

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு கழகங்கள் உள்ள போதும் இது வரை காலமும் பெரும்பாலான அணிகள் கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற வில்லை. மென்பந்துப் போட்டிகளிலேயே பங்கு பற்றி வந்தன. இதனைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இந்தச் சுற்றுப் போட்டியை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கடினபந்து கிரிக்கெட்டை வளர்க்கும் நோக்கு டன் இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.

டயலொக் நிறுவன அனுசரணையுடன் நடைபெறவுள்ள போட்டிகளில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.பத்மநாதன், விபுலானந்தா கல்லூரி அதிபர் வி.நடராஜா, வவுனியா மாவட்ட கடினப் பந்து பயிற்றுவிப்பாளர் வி.கெங் காநாதன் தமிழ் மகா வித்தி எம்.எம். சுபாஸ் ஆகியோர் ஒருங்கமைப்பாளராகச் செயற்பட்டு வருகின்றனர். (ம-400)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பண்புடனே நாம் வாழ
பாரினில் வழி சமைத்தீர்
அன்பாக பேசி அனைவரையும்
மகிழ்விப்பீர்
உம் மக்கள் உயர்வுக்காய்
உபகாரங்கள் பல செய்து வந்தீர்
பாசக் கூட்டினில்
எம்மை பரிதவிக்கவிட்டு
பரமனிடம் விரைந்து
தான் ஏன் சென்றீர்
ஆண்டொன்று
உருண்டோடி போனாலும்
இமைப்பொழுதும்
நீங்காது உங்கள் நினைவு
சொர்க்கத்திலும்
சிறக்கட்டும் உங்கள் வாழ்வு
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரர்

**சிவக்கொழுந்து சின்னத்தம்பி**

**(சின்னண்ணை)**

**பிறப்பு** 24.01.1924

**இறப்பு** 20.02.2011

**திதி**
அபரபக்க திருத்தியை
(10.03.2012)

வழக்கம்பரை,
தொல்புரம், சுழிபுரம்.

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## காபறேற்றர் ஆனந்தனின் அன்பு மனைவியின்
## 4ஆம் ஆண்டு நினைவுகளுடன்

மண்ணில்
09 ★ 08 ★ 1948



விண்ணில்
09 ★ 03 ★ 2008

# பாலசிங்கம் நீலா

ஆண்டுகள் நான்கு சென்றிடினும்
விழுதுகள் நாம் வேரினை மறப்போமோ!
ஞாலம் போற்ற வாழ்ந்து
நற்கதி அடைந்த உத்தமியே
உங்கள் சிந்தனைகளை என்றும்
செயலாக்கி வாழ்ந்து நிற்போம்
உங்கள் ஆத்மா சாந்திபெறுக

என்றும் உங்கள்
நினைவுகளுடன்,
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சி. ஆனந்தன் (காபறேற்றர்)
130, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை.



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சூசைப்பிள்ளை அகஸ்ரீன்
(அதிபர், கிளி/ கிளாலி றோ.க.த.க. பாடசாலை)

கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த கிளி/ கிளாலி றோ.க.த.க. பாடசாலை அதிபராக கடமையாற்றி 08.03.2012 அன்று அமரத்துவமடைந்த அமரர் சூசைப்பிள்ளை அகஸ்ரீன் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அவரது பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி பிள்ளைகளுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித் துக்கொள்கிறோம்.

வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகப் பணியாளர்கள்,
வலயக்கல்வி அலுவலகம் - கிளிநொச்சி.



## மரண அறிவித்தல்

### திருமதி வைத்தியலிங்கம் செல்வமணி (மணி - மண்கும்பான்)

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் செல்வமணி நேற்று (09.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதி குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் மின்கம்பத்துடன் மோதுண்டு தலையில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

அவருடன் பின் இருக்கையில் இருந்து பயணித்தவர் சிறுகாயத்துடன் தப்பிக்கொண்டார்.

இந்த விபத்து யாழ். பலாலி வீதி, கந்தர்மடம் சந்தியில் பி.ப 1.30 மணிக்கு இடம்பெற்றது. சம்பவத்தில் நவக்கிரி மேற்கு, புத்தூரைச் சேர்ந்த கதிரவேலு யுவராஜா (வயது-32) என்பவரே படுகாயமடைந்தார். கொழும்பு, மட்டக்குளியைச் சேர்ந்த பிரபாகரன் சசிகுமார் (வயது-24) என்பவர் சிறுகாயத்துக்குள்ளாகி உள்ளார் சில மீற்றர் தூரத்தில் மற்றொரு பெண் ஒருவரின் மோட்டார் சைக்கிள் குறுக்கிட்ட வேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிள் கடும் சேதத்துக்குள்ளாகியது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-4)

[redacted] வீட்டுடன் பின்வரும் காணிகள் விற்பனைக்குண்டு.

1. கொழும்புத்துறையில் 1½ பரப்பு காணி
2. யாழ். வீதி யாழ்ப்பாணத்தில் 3 பரப்பு காணி
3. ஓட்டுமடத்தில் 2 பரப்பு காணி
4. வளம்புரம் கொழும்புத்துறையில் 1½ பரப்பு காணி

தொடர்பு:- 0779435088

## விற்பனைக்கு

1 வயது நிரம்பிய ஜேமன் செப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும், 8மாதம் பூர்த்தியான ரொட்லிலர் ஆண் நாயும், டாசோன் பெண் நாயும், 8 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண் , பெண் நாயும், 3மாதம் பூர்த்தியான ஜேமன் செப்பேட் அல்சேசன் நாய்க்குட்டியும், JCஇன 1வருட பசுக்கன்றும், மணித்தாரா, வான்கோழி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- வி.மயூரன் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவை பிள்ளையார் கோவில் முன்பாக பூசாரயர் கோவிலடி

## வீடு விற்பனைக்கு

சங்குவேலி தெற்கு மானிப்பாயில் இருக்கும் வீடு விற்பனைக்குள்ளது.7½பரப்பு காணியுடன் சேர்ந்த நான்குசார் வீடும், கிணறும் உள்ளது.5 பலாமரம், 3 மாமரம், 2பனைமரம், 8 தென்னைமரம், 2விளாத்திமரம், தேசிமரம், லாவூல்மரம், நெல்லிமரம், passion fruit மரம், 16 வேப்பமரம், முருங்கைமரம், போன்ற சகல பிரயோசனம் நிறைந்த மரங்களும் உள்ளது. உறுதியும் உள்ளது. தொடர்பு:-
0774-457188, 0773-534449

## வாடகைக்கு

இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக K.K.S வீதியில் நெற்கபே ஒன்று வாடகைக்கு உண்டு. வேறு தொழில் செய்வதற்கேற்ற Three face மின்சார வசதியுடன் கூடிய, குடிநீரும், பின்புறத்தில் இட வசதியும் உள்ளது.

தொடர்பு:- 0776081693

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட தாமோதரம்பிள்ளை வீதிக்கு மிக அண்மையிலுள்ள தென்னை,பனை,பலா மரங்கள் பயிரிடப்பட்ட றோட்டு முகப்புடன் கூடிய 8 3/4 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0726811822 தரகர் தேவையில்லை. (C/9710)(12,14)

## அச்சக வேலையாள்கள் தேவை

டொட்டா பிறின்ற் (Dotta Print) எனும் ஓப்செற் அச்சு இயந்திரத்தை (Offset Printing) இயக்கும் அனுபவம் கொண்ட ஒரு மைண்டர் (Minder) தேவை.பைண்டிங் அனுபவமும் உண்டெனில் அது மேலதிக தகைமையாகக் கருதப்படும். கணினி பக்க வடிவமைப்பாளர் பேஜ் மேக்கர் (Page Maker), போட்டோசொப் (Photo shop) போன் றவற்றில் நன்கு தேர்ச்சியுள்ளவராகவும் ரைப்செற்றிங் துரிதமாகச் செய்யக்கூடியவராகவும் உள்ள ஒருவர் (பெண்) தேவை. வடமராட்சியைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசி நிர்ணயம் செய்யப்படும்.


தொடர்பு: தொலைபேசி இல: 0776688318,021 226 3099.
மதுரன் கிறாபிக்ஸ் அன் ஓவ்செற் பிறின்ரேர்ஸ்,
அல்வாய்.

(15487) (7,8,12)

Mathuran Graphics & Offset Printers, Alvai

மங்களகரமான அழைப்பிதழ்கள் , புத்தகங்கள் , கல்வெட்டுக்கள் , ஆய்வுக்கட்டுரைகள், விளம்பர நோட்டீஸ்கள், போட்டோ காட் அழைப்பிதழ்கள் எதுவாயினும் சிறப்புற வடிவமைத்து உரிய நேரத்திற்கு வழங்கப்படும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அயல்
பாடசாலை அதிபர்

### சூசைப்பிள்ளை அகஸ்ரீன்
(கிளி/கிளாலி றோ.க.த.க பாடசாலை எழுதுமட்டுவாழ்)

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
அன்னாரின்
குடும்பத்திற்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன்அவரது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
கிளி/பளை மத்திய கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் காணிக் கிளையில் கடமையாற்றும் திருமதி நகுலேஸ்வரி பத்மராஜா அவர்களின் அன்புத் தந்தை

### சின்னையா முருகர்

அவர்கள் 08.03.2012 அன்று சிவபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளர்,
ஊழியர்,
ஊழியர் நலன்புரி சங்கம்.

பிரதேச செயலகம்,
பருத்தித்துறை. (C/9663) (6 ,12 ,14)

# மரண அறிவித்தல்



### திருமதி மேரி றெஜினா அமலதாஸ் (சந்திரா)

இல.35/2 பழைய பூங்கா வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி றெஜினா அமலதாஸ் நேற்று (09.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசேஸ் எட்வேட் (அரியகுட்டி) - விக்ரோறியா (பாக்கியம்), தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுவக்கீன் மோசஸ் - மேரி யோசப் தம்பதியரின் அன்பு மருமகளும், மோசஸ் அமலதாஸின் (ஓய்வு பெற்ற வன பரிபாலன உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், நினோன் அனுசியா (ஆசிரியர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செறேனஸ் நிஷாந்தன் (ஆசிரியர் சென். பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜேம்ஸ் செல்வகுமார் (Appolo Tiye House), கிறிஷாந்தி (ஜீன்) (உதயன் பணிமனை), சியான், ஜெகான், டிசான், சகானா, ஆகியோரின் அன்பு மாமியாரும் கமில், ஜோயல், சிமித், செனாரி, ஹரின், எட்றியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், எட்வேட், ஜோர்ஜ், ஆகியோரின் அன்புச்சகோதரியும் சகாஜமலர் (பவா), சிசிலியா, கிறிஸ்ரியன், அலோசியஸ், M.F. யோசப், கிறேஸ்மணி, மொனிக்கா, அகனெஸ், கொன்சி, றெஜினா, லூமினா, ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் (12.03.2012) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.35/2, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
மோ.அமலதாஸ் (கணவர்)

## கோடைகால ஸ்பெஷல் !!!

ஒரு தடவை பணம் கட்டுவதன்மூலம் ஒரு மாதத்திற்கான சரும, கூந்தல், உடல்எடை பராமரிப்பிற்கான விசேட-பொதிகள்(Packege).வழங்கப்படும்!!!

இதன்போது இலவசமாக உடல்-ஆரோக்கிய பரிசோதனைகள் செய்யப்படும்

முற்பதிவு அவசியம் இலவசம் }0777351954 We care Always

சானியா கேயல் கெயர்
இல:262செம்மணி வீதி நாயன்மார்கட்டு யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

Super Market மற்றும் கடைகளுக்கு பாவிக்கக்கூடிய ராக்கை (Rack) விற்பனைக்கு உள்ளது. அதிக எடை தாங்கக் கூடியது. (Heavy Rack) மற்றும் முற்றிலும் மாற்றி அமைக்கக் கூடியது. காட்சிப்படுத்தல் (Show room) மற்றும் களஞ்சியப் படுத்தல் (Store) இற்குப் பாவிக்கக் கூடியது.

தொடர்பு:- 0779114476

## பணிநிலை வெற்றிடங்கள்

### விற்பனையாளர்கள் தேவை

புத்தகம் ஸ்ரேசனரிப் பொருள்கள் விற்பனையில் முன் அனுபவம் உள்ளவர்கள் வேண்டப்படுகின்றனர் (வேலை பழக விரும்புபவர்களும் தேவைப்படுகின்றனர்) ஆண், பெண் இருபாலாரும் விரும்பப்படுகின்றனர்.ஆர்வமுடையோர் நேரில் வரவும்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் (18.03.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். சகல அங்கத்தவர்களும், தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தலைவர்
பழைய மாணவர் சங்கம்,
யாழ் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

10.03.2012

# அளவுக்கு அதிகமான பயணிகளால் பஸ்ஸில் 3 மாணவிகள் மயக்கம்

## எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

அளவுக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றியமையால் அதில் பயணித்த மாணவிகள் மூவர் மயக்கமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து ஆவரங்கால் பகுதியில் பஸ்ஸை நிறுத்தி மாணவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம் பெற்றது.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுக்காலை 6.45 மணிக்குப் புறப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸில் பயணித்த மாணவிகளே இவ்வாறு மயக்கமடைந்தனர்.

பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட 750ஆம் இலக்க பஸ்ஸில் அளவுக்கு அதிகமாக பயணிகள் ஏற்றப்பட்டனர். பஸ்ஸுக்குள்ளே நெரிசல் ஏற்பட்டு பயணிகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. வல்லைப் பகுதியில் பஸ் பயணித்த போது மாணவிகளில் இருவர் தலை சுற்றி அசௌகரியப்பட்டனர். அந்த பஸ்ஸில் உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவ மாணவிகளும் பயணிப்பது வழக்கம்.

பயணிகள் அசௌகரியப்பட்டுக் கொண்டிருக்கத் தொடர்ந்தும் பஸ்ஸில் பயணிகள் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தனர். ஆவரங்கால் சந்தைப் பகுதியில் மேலும் பயணிகளை ஏற்றுவதற்காகப் பஸ் நிறுத்தப்பட்டது. இதன் போது உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவி ஒருவர் மயக்கமுற்ற நிலையில் வீழ்ந்தார். இதனை அடுத்து பஸ்ஸில் பயணித்த சக மாணவர்கள் கொதித்தெழுந்தனர்.

மாணவர்களில் சிலர் பஸ்ஸில் இருந்து இறங்கி பஸ்ஸைத் தொடர்ந்து செல்ல விடாது மறியல் செய்தனர்.

பஸ்ஸின் முன்னே வீதியின் நடுவே மாணவர்கள் சிலர் படுத்திருந்தனர். சுமார் முப்பது நிமிடங்களுக்கு மேலாக பஸ்ஸை நகர விடாது மாணவர்கள் மறியலில் ஈடுபட்டனர்.

அந்தப் பகுதியில் உள்ள இராணுவம் தலையிட்டும் மாணவர்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை. பின்னர் அச்சுவேலிப் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அதிகாரி தியாகராஜா சம்பவ இடத்துக்குச்சென்று மாணவர்களுடன் கதைத்ததைத் தொடர்ந்து பஸ்ஸைத் தொடர்ந்து செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது. உரிய அதிகாரிகளுடன் கதைத்து இனிமேல் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாது பார்த்துக்கொள்வதாக உதவிப் பொறுப்பதிகாரி உறுதிமொழி வழங்கியதைத் தொடர்ந்தே மாணவர்கள் தமது மறியல் போராட்டத்தைக் கைவிட்டனர்.

பஸ்ஸில் மயக்கமுற்ற மாணவி ஒருவர் அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

உயர் தொழில்நுட்பக் கல்லூரி உள்ளிட்ட மாணவர்களின் நன்மை கருதி தனி ஒரு பஸ் சேவையை நடத்துமாறு ஏற்கனவே உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் பல்வேறு தரப்புக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-3-8-11-15)

# கிளிநொச்சி அரச செயலகத்துக்கு புதிய கட்டடத் தொகுதி

## திருநகரில் நாளை அடிக்கல் நடும் நிகழ்வு

அக்கராயன், மார்ச் 10

கிளிநொச்சி அரச செயலகத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு கிளிநொச்சி திருநகரில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பொது நிர்வாக சேவைப் பிரதி அமைச்சர் விஜயதசநாயக்க, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

கிளிநொச்சி அரச செயலகம், நகரின் புதிய திட்டமிடலுக்கு அமைய திருநகர்ப் பகுதியில் அமைக்கப்படவுள்ளது. இதன் தொடக்கப் பணிகள் 200 மில்லியன் ரூபா செலவில் நடைபெறவுள்ளன. கிளிநொச்சி அரச செயலகம் தற்போது இயங்கும் பகுதி வர்த்தக வலயம் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (10-18)

# இளம் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

01↘ சம்பவம் . பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

சுதந்திரபுரம் காளி கோயிலடியில் இந்தக் குடும்பஸ்தர் வசித்து வந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் ஓட்டோ ஒன்றில்வந்தஉயிரிழந்தவரின்மனைவியின் சகோதரரான ஒருவரே இந்தக் குடும்பஸ்தரை வாளால் வெட்டியதாகப் பொலிஸ் வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டது. வாளால் வெட்டியவர் ஒரு பூசாரி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாள் வெட்டில் படுகாயமடைந்த இவர் தர்மபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது இடைவழியில் உயிரிழந்துள்ளதாகக் கூறப்பட்டது. அவரது சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

முல்லைத்தீவுப் பொலிஸாரின் தகவலை அடுத்து கிளிநொச்சி மாவட்டப் பதில் நீதிவான் எஸ்.விஜயராணி சடலத்தைப் பார்வையிட்டார். மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் உயிரிழந்தவரின் மைத்துனரான ஆலயப் பூசகர் ஒருவரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-6)

# உலக்கையால் தாக்கப்பட்டவர் யாழ். ஆஸ்பத்திரியில்

இனந்தெரியாதவர்கள் உலக்கையால் தலையில் தாக்கியதனால் படுகாயமடைந்தவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் சங்கானை பிரான்பற்று ஞான வைரவர் கோயில் முன் வீதியில் நேற்று மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்றது. சம்பத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இராசையா சந்திரன் (வயது-45) என்பவரே படுகாயமடைந்தார்.

சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஒ-4)

# 2017ஆம் ஆண்டு 410 கோடி தேங்காய்கள் உற்பத்தி இலக்கு

## அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார தெரிவிப்பு

**2011 இல் ஒரு ஹெக்டயர் நிலத்தில் 7ஆயிரத்து 112 தேங்காய்கள் உற்பத்திசெய்யப்பட்டுள்ளன.**

இலங்கையில் கடந்த வருடம் 280 கோடி 80 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்றும் 2017 ஆம் ஆண்டு 410 கோடி தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படும் என்றும் தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வாய்மூல நேரத்தின்போது ரவி கருணாநாயக்க எம்.பி. கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச ரீதியில் வருடமொன்றுக்கு 6 ஆயிரத்து 485 கோடி தேங்காய்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன. இதில் 2011 இல் இலங்கையில் மாத்திரம் 280 கோடி 80 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அதன்படி ஒரு ஹெக்டயர் நிலத்தில் 7ஆயிரத்து 112 தேங்காய்கள் உற்பத்திசெய்யப்பட்டுள்ளன.

மலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், இந்தியா, வியட்நாம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் தேங்காய் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

அதேபோல், நாமும் தேங்காய் உற்பத்திக்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றோம். 2017 ஆம் ஆண்டில் 410 கோடி தேங்காய்களை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளோம். அத்தோடு இந்த வருடம் மாத்திரம் 60 லட்சம் தென்னங் கன்றுகளை நட்டு தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம் - என்றார்.

# அமெரிக்க அதிகாரிகள் அவசரமாக டில்லிக்கு

01↘ நடத்தவே உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்றை அமெரிக்கா அனுப்பியுள்ளது. இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் காலை புதுடில்லியைச் சென்றடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.எனினும் அமெரிக்க அதிகாரிகள் புதுடில்லியில் யாருடன் பேச்சு நடத்தினர் என்ற விவரங்கள் ஏதும் வெளியாகவில்லை. (த)

# நுணாவிலில் 3 படையினர் சூடு வாங்கிச் சாவு

01↘ சம்பவ இடத்துக்குச் சென்ற பதில் நீதிவான் சடலங்களைப் பார்வையிட்ட பின்னர் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரிமூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். முருகன் ஆலயத்துக்கு அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த சிப்பாய் ஒருவர் சக படைச் சிப்பாய்கள் இருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார் என இராணுவப் பேச்சாளர் நிஹால் ஹப்பு ஆராய்ச்சி தெரிவித்தார்.

உயிரிழந்த படையினர் ஒருவரின் சடலத்துக்கு மரண விசாரணை, உடற்கூற்றுப் பரிசோதனை என்பன நேற்று இடம்பெற்றன. ஏனைய இரு சடலங்களினதும் மரண விசாரணை, உடற்கூற்றுப் பரிசோதனை என்பன இன்று இடம்பெறும் எனக் கூறப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவென அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தினர் இன்று யாழ்ப்பாணம் வருவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மூவரின் சடலங்களும் இன்று உறவினர்களிடம் கையளிக்கப்படும். (த-04-05-09)

# 98 வீதமானோர் மீள்குடியமர்வு ஐ.நா.வில் கூறியது இலங்கை

01↘ நேர்ந்த நிலையில், இவர்களுக்கான வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுத்ததாகத் தெரிவித்த இலங்கைப் பிரதிநிதி, இடம்பெயர்ந்த மக்களை உடனடியானதும், நீண்டகால நோக்கத்திலுமான திட்டங்கள் ஊடாகச் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்ந்தும் திட்டம் அரசுக்கு நிறைவைத் தந்துள்ளதாகத் தெரிவித்த இலங்கைப் பிரதிநிதி, கடந்த ஆண்டு இறுதிப் புள்ளி விவரத்தின்படி 6647 பேர் மட்டுமே மீள்குடியமர்த்தப்பட வேண்டிய நிலையில் இருந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

316 மில்லியன் டொலர்கள் மீள்குடியேற்ற திட்டங்களுக்குச் செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த இலங்கை, கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர் மிகுதி உள்ளவர்களும் மீள் குடியமர்த்தப்படுவார்கள் எனவும் கூறியுள்ளது. (த)

# மேற்குலகம் முழு ஆதரவு

01↘ பீரிஸ் கலந்து கொண்டார்.

இதன் போது சபையில் சமர்பிக்கப்பட்ட பிரேரணை குறித்த கருத்துக்களை அமெரிக்கா கேட்டறிந்து கொண்டது. அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்த உப மாநாட்டில் பங்கெடுத்திருந்த நாடுகளில் நோர்வே, சுவிஸ், பிரான்ஸ், டென்மார்க், ஹங்கேரி, போலந்து, சுவீடன், ஆஸ்திரேலியா, பிரிட்டன், ஒஸ்ரியா, கனடா, போர்த்துக்கல் மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் தங்களின் ஆதரவைத் தெரிவித்திருந்தன.

பாகிஸ்தான், ரஸ்யா, கியூபா, சீனா, எகிப்து, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், அல்ஜீரியா, இந்தோனிசியா, சிம்பாவே ஆகிய நாடுகள் தமது எதிர்பை வெளியிட்டன. மேற்குறிப்பிட்ட நாடுகளில் கனடா மற்றும் சிம்பாவே போன்றன ஐ.நா, மனித உரிமைச் சபையில் அங்கத்துவம் இல்லாத நாடுகளாக உள்ளன. குறிப்பாக அணிசேரா நாடுகளே அமெரிக்காவின் குறித்த பிரேரணைக்கு எதிர்ப்பினைக் காட்டி வருகின்றன.

இந்தியா எந்தவித கருத்தையும் தெரிவிக்காமல் மௌனத்தைக் கடைப்பிடித்தது. மேலும் குறிப்பிட்ட சில நாடுகள், இந்த விவகாரத்தை இலங்கையே பார்த்துக் கொள்ளும் எனக் கூறியிருந்தன. அமெரிக்காவின் பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்த நாடுகள், இந்தப் பிரேரணையை கொண்டு வருவதற்குப் பொருத்தமான தருணம் இதுவல்லவென தெரிவித்துள்ளன. (த)

# ஜெனிவா பிரேரணைக்கு ஆதரவாக களத்தில் ஜிம்மி கார்ட்டர்

01↘ இராஜதந்திர செயற்பாடுகளில் இது பெரும் ஊக்கத்தையும் தந்துள்ளது'' - என்று பெயர் குறிப்பிட விரும்பாத உயர் மட்ட அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் நேற்று மாலை 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் சமூக சேவைகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவராவார். உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளுக்கு அவர் பெரிதும் உதவிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக தென்னாபிரிக்காவின் விடுதலைப் போராளி என்று வர்ணிக்கப்படும் நெல்சன் மண்டேலாவை தலைமையாகக் கொண்ட 'த எல்டர்ஸ்' அமைப்பு ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகள் ஆதரிக்க வேண்டுமென கடிதம் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பில் ஜிம்மி கார்ட்டரும் ஒரு முக்கியமான உறுப்பினர் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஒ-சி)

## Home Delivery

வீட்டில் இருந்தபடியே உங்களுக்குத் தேவையான
பொருள்களைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
**கிருத்திகா சுப்பர் மார்க்கெட்**
118/1, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(மருத்துவ பீடத்துக்கு அருகில்) தொ.பே.: 0773304033
எமது நிறுவனத்தில் இருந்து 7 கி.மீ தூரத்திலுள்ள
இடங்களுக்கே விநியோகம் செய்யப்படும்.

எந்த நாடுகளுக்கான, எந்த வகை விசா ஆலோசனை என்றாலும்
அது **திசைகாட்டியிடம்** மட்டும்தான்

தற்போது இலங்கை முழுவதும் வலைப் பின்னலில்
**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டட்**

தலைமைக் காரியாலயம்
37,சிவகுருநாதர்ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016

மெல்போர்ன்,
ஆஸ்திரேலியா.
லான்ட் லைன்:
0061390437100

கிளைகள்:
115 A, இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.
0212285544

23, 1/3, மகேஸ்வரி வீதி,
கொழும்பு - 06.
0112366925,
0773454304.

## கைப்பணிப் பயிற்சி

பனை அபிவிருத்திச் சபை மகளிர் தினத்தை முன்னிட்டு சுன்னாகம் கலைவாணி சனசமுக நிலையத்தில் பனை ஓலைக் கைப்பணிப் பயிற்சி வகுப்பொன்றை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்படி கைப்பணிப் பயிற்சியை ஆரம்பித்து வைத்தார்.

அவர் கூறுகையில் பனை சார் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் இந்தக் கைப்பணிப் பயிற்சியை மேலும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார்.

## கணினி மலிவு விற்பனை

**Dual CORE IBM FULL SET - 31,750/=**
**FREE- WEBCAM / 4GB PENDRIVE / HEAD PHONE**
ஒருவருட உத்தரவாதம்
**LAPTOP, DIGITAL CAMERA, PHONE**
அனைத்துவகையான பொருள்களும் எம்மால்
திருத்திக்கொடுக்கப்படும்.
**ST. ANTONY'S.COM**
187, KKS ROAD, JAFFNA.
(மின்சார நிலையவீதி எதிர்)
021-222-4865, 0750698608

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 11-03-2012 | Batch II: 15.03.2012 | Batch III :20.03.2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

**BI Exam - Student Visa** முறை UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
2 Months

**IELTS** (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
(International English Language Testing System)
We guarantee minimum band 5.0 Upwards
2½ Months

**A1 Exam - Sponsor /Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.

2 Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5267

Hot Lines: 0777585913 / 0777 222 422 / 071 4299935 / 0777730074

## கணினி ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்குமான
ஓர் அரிய சந்தர்ப்பம் **Diploma in Computer Courses**

2012ம் ஆண்டு மாபெரும் கட்டணக்கழிவு

Duration
3months,4months
BatchI 10-03-2012
BatchII 11-03-2012
BatchIII 14-03-2012
BatchIV 16-03-2012
(Time:-9am or 3pm)

Ms Office 2007, DTP, Hardware, Graphic Designing, Wep page Designing, Multi Media, Computer Science, Video Editing, Computerized Accounting, AutoCAD, Net Working, Inter Net & e - mail.

புதன், வெள்ளி மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்.

அனைத்து பாடநெறிக்குமான கட்டணம் 1000/= மட்டுமே

**Computer Express**
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444

Diploma in Accounting Package
Acc Pac,Quick Book,MYOB,Tally
(Sat+Sun 11.00am)
Lecturer:Ashok

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணம் கிருஷ்ணபிள்ளை



(07.03.2012) புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல-23, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்
வி.சரோஜினிதேவி
(மகள்).

நாடக அரங்கக் கல்லூரி
வழங்கும்

## கண்டனன் சீதையை

இசை நாடகம்
அருணாசலக் கவிராயரின்
இராம நாடகத்திலிருந்து
தொகுக்கப்பட்டது.

காலம்:
11.03.2012,
பி.ப. 3.00 மணி

இடம்:
கைலாசபதி கலையரங்கு,
யாழ். பல்கலைக்கழகம்

நெறியாள்கை :
குழந்தை ம. சண்முகலிங்கம்

எழுத்துருவாக்கம்:
யே.ம.யோசப் மேரி,
குழந்தை ம. சண்முகலிங்கம்

இசையமைப்பு,
இசைப் பயிற்சி,
இசை நெறியாள்கை:
தவநாதன் றொபேட்



நுழைவுச் சீட்டுகளை
மண்டப வாயிலில்
பெற்றுக் கொள்ளலாம்

தங்கள் வரவு எங்களை மகிழ்விக்கும்

ஊடக அனுசரணை: உதயன்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சௌபாக்கியத்தை தேடிச்
செல்லும் பயணத்தின்
முன்னோடியாக
இலங்கைப் பெண்களுக்குத்
தேசிய மரியாதை
தெரிவிக்கும் விழாவில்
அதி மேன்மை தங்கிய
ஜனாதிபதி
மஹிந்த ராஜபக்ஷ
அவர்களினாலும்
இலங்கையின் முதற்பெண்மணி
கௌரவ திருமதி
சிராந்தி ராஜபக்ஷ
அவர்களினாலும்
அலரிமாளிகையில்
சர்வதேச மகளிர் தினத்தன்று
கௌரவிக்கப்பட்ட
08 பெண்களில் ஒரே ஒரு
தமிழ் பெண்ணாக கௌரவிக்கப்பட்ட
யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்
பெருமதிப்பிற்குரிய
**திருமதி இமெல்டா சுகுமார்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன்
அவர்களின் சேவை மேன்மேலும் தொடர
உளமார வாழ்த்துகின்றோம்.

**தவிசாளர், உறுப்பினர்கள், ஊழியர்கள்**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

யாருடைய
நம்பிக்கையையும்
குலைக்க முயலாதே,
இயலுமானால்
அவனுக்கு அதைவிட
மேலான ஒன்றைக்
கொடு.
-விவேகானந்தர்

வார வசந்தம் 01

உதயன் 10 மார்ச் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு



# தமிழரின் எதிர்காலம்...?

துன்னாலைச்செல்வம்

"செய் அல்லது செத்து மடி" என்று விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது படையணிகளுக்கு அடிக்கடி சொல்லும் வார்த்தை. அந்தளவுக்கு சிங்களப் படைகளுக்கு எதிராகப் போராடுவதையே முழுமூச்சாகக் கொண்டிருந்தார். இதற்கு அப்பால் அவர் எதையும் சிந்திக்கவில்லை. அரசியலில் வழி வந்த தமிழ்த் தலைவர்கள் எல்லோராலும் முடியாமல் போக, பிரபாகரன் காலம் சிங்கள அரசுக்கு ஒரு படிப் பினையைக் கொடுத்தது. அதாவது தமிழர்கள் இனிமேல் சிங்களவர்களுக்கு அடிமைகள் இல்லை என்ற படிப்பினையைக் கொடுத்தது. அந்தப் படிப்பினைதான் இன்று ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வர உந்துசக்தியாக அமைந்தது.

ஆனாலும் இந்தத் தீர்மானம் சக்தி இல்லாமல் ஊசலாடும் நிலைக்கு வந்து விட்டது என்று பலராலும் விமர்சனம் செய்யப்படுகிறது.

இந்தியா உட்பட இலங்கையின் நேசநாடுகள் வழங்கிய கடும் இராஜதந்திர அழுத்தத்தை அடுத்து இலங்கைக்கு எதிராக ஜெனிவா மாநாட்டில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையில் முக்கியமான பல திருத்தங்களை அமெரிக்கா செய்திருக்கிறது.

இதன்படி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக கொழும்புக்குத் தெரிவிப்பதற்கு முன்பு, உத்தேசிக்கப்பட்டிருந்த கால எல்லையை நீடிப்பதற்கும், மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான இலங்கை அரசின் பொறுப்புக்கூறும் கடப் பாட்டை உறுதி செய்வதற்குமான பொறிமுறையில் மென்போக்கைக் கடைப்பிடிப்பதற்கும் அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

தமிழர்கள் சிங்கள அரசால் அடிமைப்படுத்தப்பட்டபோது, தமிழர்கள் விடுதலைக்காகப் போராடினார்கள். இந்தப் போராட்டத்தில் லட்சக் கணக்கில் தமிழ் மக்கள் செத்து மடிந்திருக்கிறார்கள். 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடி மடிந்திருக்கிறார்கள். இவர்கள் ஏன் போராடினார்கள்? இவ்வளவு மக்கள் ஏன் செத்தார்கள் என்பதற்குக் காரணம் இருக்கிறது. அந்தக் காரணத்தை எவராலும் மறைத்து விடவோ புதைகுழியில் புதைத்து விடவோ முடியாது. அது ஒவ்வொரு தமிழனின் ஆழ் மனதில் வேர் விட்டு கிளைபரப்பி விருட்சமாக நிற்கிறது.

மூன்று தசாப்த காலப் போராட்ட பதிவு தான் தமிழ் மக்களின் விடுதலையின் தேடலாக அமையப் போகின்றது. புலம் பெயர் தமிழர்கள் ஒன்று கூடி நிற்கிறார்கள். ஈழத் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு வேண்டியும், ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்தும் ஜெனிவா நகரில் புலம் பெயர் தமிழர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

பிரான்ஸ், டென்மார்க், பிரிட்டன், நோர்வே, ஜேர்மனி, இத்தாலி, சுவிஸ் போன்ற நாடுகளில் இருந்து வருகை தந்த 5 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இந்தப் பேரணியில் இணைந்து கொண்டனர். பேரணியில் கலந்து கொண்டவர்கள் "உலகமே தமிழர்களின் நியாயமான உரிமையை அங்கீகரி", "போர்க்குற்ற விசாரணையை நடத்து", "எமக்கு வேண்டும் எமது நாடு", "எமக்குத் தா எமது தேசத்தை" போன்ற கோஷங்களை இதன் போது எழுப்பினார்கள்.

இதேபோல் ஈழத் தமிழர்களுக்கு நீதி கோரி, அமெரிக்கா வாழ் ஈழத் தமிழர்களும், தமிழகத் தமிழர்களும் ஒன்றுபட்டு தொடர் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

இது தொடர்பாக போராட்ட ஏற்பாட்டாளர்கள். வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "வொஷிங்டன் தூதரகத்துக்கு முன்பாக தமிழ் அமைப்புக்களின் ஆர்ப்பாட்டம் வெற்றியுடன் முடிவுறுகிறது. சிங்கள இன வாதப் போரின்போது 2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் கொன்றொழிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள், பொதுமக்களுக்கு நீதி கோரும் முகமாக கடந்த மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் கடந்த 2 ஆம் திகதி வரையில் அமைதி வழிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் ஈழத் தமிழர், தமிழ்நாட்டுத் தமிழர் அனைவரையும் உள்ளடக்கிய அமெரிக்கத் தமிழ் அமைப்புகள் வொஷிங்டன் நகரில் தூதரகத்துக்கு முன்பாக பதாகைகளைத் தாங்கியவாறு தினமும் திரண்டு நின்று அமெரிக்க அரசின் கவனத்தைக் கோரி வந்துள்ளனர். தினமும் ஒவ்வொரு மாநிலத்தைச் சேர்ந்த தமிழர்களும் ஏற்பாடுகளுக்கான பொறுப்புகளை ஏற்று பனி,மழை, குளிர் எதையும் பொருட்படுத்தாது தமது நாளாந்தக் கடமைகளைத் துறந்து, தமிழினத்துக்கான தமது கடமைகளைச் சரிவரச் செய்ய முயன்றுள்ளனர். அவர்கள் எதிர்பார்த்தவாறே அமெரிக்கத் தூதரகமும் ஆர்ப்பாட்டத்தை உற்றுக் கவனித்து வந்தது.

முதல் நாளன்றே திணைக்கள அலுவலர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் அனுதாபத்துடன் அணுகி நின்று அவர்களின் வாய் மொழிச் செய்திகளையும், பதாகைச் செய்திகளையும் பதிந்து கொண்டு சென்றுள்ளனர்.

இறுதி நாளாகிய கடந்த 2 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வர இருப்பதைத் தெரிந்து கொண்ட தெற்காசியப் பிராந்தியத்துக்கான உதவிச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக் ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டோருடன் அளவளாவி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் அமெரிக்கா மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் பற்றி அவர்களுக்கு விளக்குமாறு தனது உதவியாளர் ஒருவரை அனுப்பி வைத்தார். உதவியாளரிடமிருந்து பிளேக்கின் செய்தியையும் தூதரகச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் அம்மையாருக்கெனத் தயாரித்து வைக்கப்பட்டிருந்த கோரிக்கை மனுவையும் பெற்றுக் கொண்டதுடன் தமிழ் மக்கள் விடயத்தில் அமெரிக்கா உறுதியுடன் செயற்படும் என்றும் தெளிவுபடுத்தியுள்ளனர்" என்றுள்ளது. ஈழத் தமிழர்கள் தமக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரை எங்கோ ஒரு மூலையில் இருந்தாவது போராடிக் கொண்டே இருப்பார்கள்.

இத்தனைக்குப் பிறகும் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் நழுவல்போக்கு ஏற்பட்டு விட்டது.

போர் முடிவடைந்தும் துன்பங்களை அனுபவித்து வரும் தமிழ் மக்களுக்கு இலங்கைக்கு எதிரான ஜெனிவா தீர்மானம் ஒரு நம்பிக்கையைக் கொடுத்திருந்தது. இப்போது பெரிதாக எதுவும் நடக்காது என்று மக்கள் நினைக்கிறார்கள்.

" உள்நாட்டில் அமெரிக்காவுக் கும் மேற்கு நாடுகளுக்கும் எதிரான சிங்களத் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பி நாடு முழுவதும் முற்றுகைக்குள்ளான ஒரு சூழ்நிலையை உருவாக்கி ஜெனிவா பிரச்சினையை இலங்கை அரசு எதிர்கொண்டது. இது நிச்சயமாக ஓர் ஆக்க பூர்வமான பதிலளிப்புச் செயற்பாடாக இருக்க முடியாது. அரசு உச்சத்திலிருந்து மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையானது எதனை யும் கொண்டு வருவதாக இருந்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள இனரீதியான வேறுபாடுகளை மேலும் கூர்மையடை யச் செய்வதாகவே இருக்கும்" என தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் இந்துப் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அதேபோல் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை விவகாரத்தில் அமெரிக்காவும் வேண்டும்.

அண்டை நாடான இலங்கையில் சீனா நெருங்கிவிடவும் கூடாது என்றால் இந்தியா இப்பிரேரணையைப் புறக்கணிப்பதையே விரும்பும் என்று கருதப்படுகிறது.

அமெரிக்காவுக்கு நம் மீது இருக்கும்அக்கறை நமது தொப்புள் கொடி உறவு நாடான இந்தியாவுக்கு இல்லையே என்று இலங்கைத் தமிழர் கள் நம்மை சபிக்காமல் இருக்க வேண்டுமானால் இந்திய அரசு இந்தப் பிரேரணையை ஆதரிக்க வேண்டும்.

இவ்வாறு தமிழக நாளேடான 'தினமணி' தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.இவ்வாறு ஊடகங்கள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்தாலும் ஜெனிவா தீர்மானம் சறுக்குமானால் ஈழத்தில் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ✱

"உள்நாட்டில் அமெரிக்காவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் எதிரான சிங்களத் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பி நாடு முழுவதும் முற்றுகைக் குள்ளான ஒரு சூழ்நிலையை உருவாக்கி ஜெனிவா பிரச்சினையை இலங்கை அரசு எதிர்கொண்டது. இது நிச்சயமாக ஓர் ஆக்கபூர்வமான பதிலளிப்புச் செயற்பாடாக இருக்க முடியாது. அரசு உச்சத்திலிருந்து மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையானது எதனையும் கொண்டு வருவதாக இருந்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள இனரீதியான வேறுபாடுகளை மேலும் கூர்மையடையச் செய்வதாகவே இருக்கும்"

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (34)

எண் (8) சனி ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விபரங்கள் இவ்வாரமும் தொடர்கின்றன

பிறப்பு எண் 8 விதி எண் 9

சனி செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் நாடாளும் சக்தி படைத்தவர்கள். பேச்சில் காந்த வசிய சக்தி கொண்டவர்கள். ஒரு காரியத்தில் இறங்கினால் முடிக்காமல் ஒய மாட்டார்கள். உடல் பலமும், மனபலமும் மிக்கவர்கள். தன்னுடன் நட்புக் கொண்டவரையும், பகைமை கொண்டவரையும் வாழ்நாள் முழுவதும் மறக்கவே மாட்டார்கள். எதிலும் முன்னேச்சரிக்கை உடையவர்கள். காதல் விசயத்தில் கவனம் தேவை. பெண்களால் ஏமாற்றப்படுவார்கள். காந்த சக்தியுடையவர்கள். அதிக தெய்வ நம்பிக்கையும், தன்னப்பிக்கையும் உடையவர்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதி

6,15,24,5,14,23,9,18,27

அதிர்ஷ்ட நிறங்கள்

மஞ்சள், வெளிர்நீலம், பொன்னிறம்

அதிர்ஷ்ட ரத்தினங்கள்

நீலக்கல், நீல அக்கோமரின், பிளட்ஸ்டோன், கார்னட்.

அதிர்ஷ்டப் பெயர் மாற்றம்

சனி ஆதிக்கத்தினர் தங்கள் பெயரை அதிர்ஷ்டகரமானதாக்க சனி ஆதிக்க எழுத்துக்களையும், விதி எண் சார்ந்த எழுத்துக்களையும் சரியான முறையில் முரண்பாடு இன்றிச் சேர்த்துப் பெயரமைக்க வேண்டும். கீழ்க் கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அதிர்ஷ்டப் பெயரை அமைத்துக் கொண்டு வளமான வசிய மான வாழ்க்கையைப் பெறலாம். 1ஆம் எண் பெயர்கள் மிகுந்த அதிர்ஷ்டத்தை நல்கும். 10,19,37,46,55,82, 73,5,14,23,41,59 போன்ற எண்களின் வரிசையில் பெயரமைக்கவும். நல்ல விரைவான அதிர்ஷ்டம் கிடைக்கும். விதி எண் வலுவாக இருந்தால் விதிஎண் சார்ந்த அதிர்ஷ்ட எண்ணுடைய பெயரை அமைக்கலாம். பெயரமைக்கும் போது மாத, வருட எண்களையும் கவனத்தில் கொண்டு பெயரமைக்கவும். அவரவருடைய பெயரானது அதிர்ஷ்டகரமாக இருந்தால் அதிர்ஷ்டமான அதிர்வுகளுடன் இயக்கங்கள் நடைபெற்று அனைத்தும் சுபமாக இருக்கும். வாழ்க்கை வெற்றிகரமாக அமைந்துவிடும்.

| பிறப்பு எண் | கூட்டுஎண் | அதிர்ஷ்டப் பெயர் எண் |
|---|---|---|
| 8 | 1 | 1,5,6 |
| 8 | 2 | 1,6,5 |
| 8 | 3 | 5,1,9 |
| 8 | 4 | 1,5,6 |
| 8 | 5 | 1,5,6,9 |
| 8 | 6 | 1,6,5,9 |
| 8 | 7 | 1,5,6 |
| 8 | 8 | 1,5,6,9 |
| 8 | 9 | 5,6,9 |



## எண் 9 (செவ்வாய்) (வெற்றி வீரர்கள்)

9ஆம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் 9, 18, 27 திகதிகளில் பிறந்தவர்களாவர். எந்தவொரு மாதமாக இருந்தாலும் மேற்கண்ட திகதிகளில் பிறந்தவர்கள் 9 என்னும் செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். சாகஸம், தந்திரம், சூழ்ச்சி, மனதில் உள்ளது மற்றவர்களுக்குத் தெரியாத அளவுக்குத் திறமை வாய்ந்தவர்கள். சாந்தி, அமைதி, சமாதானத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள். இவர்கள் போராடவே பிறந்த நபர்கள். வாழ்க்கை முழுவதும் போராட்டமாகவே இருக்கும். இவர்களில் அறிவில் சிறந்தவர்களும் மனப்போராட்டத்துடனேயே வாழ்வார்கள். நுண்ணிய அறிவில்லாத செவ்வாய் ஆதிக்க நபர்கள் வாய்ச் சண்டையிலும், வீண் பேச்சிலும் காலத்தைக் கழிப்பார்கள். இன்னொரு பிரிவினர் முழுநேரமும் சண்டையிடுவதிலேயே குறிக்கோளாக இருப்பார்கள். அதை வைத்துத் தொழில் செய்து பிழைப்பார்கள். இராஜதந்திரம் அறிந்தவர்கள். பதுங்கிப் பாயும் குணமுடையவர்கள். கோபம் அதிகமுள்ளவர்கள். இவர்களுக்கு தன் இஷ்டப்படியே காரியம் ஆற்ற வேண்டுமென்ற ஆர்வமிருக்கும். சிறிய அற்ப விசயத்திற்கும் உயிரைப் பணயம் வைத்துப் போராடுவார்கள். எவ்வளவு கேட்டாலும் மனதில் உள்ளதை வெளிக் காட்டிக் கொள்ளவே மாட்டார்கள். செவ்வாய் ஆதிக்கம் சரியாக அமையாதவர்கள் கோபத்தை வெளிக்காட்டி அபிப்பிராயத்தை வெளிப்படையாகப் பேசி விடுவார்கள். அநேக நபர்களுக்கு ஆரம்ப வாழ்க்கை கடினமானதாகவே இருக்கும். தோல்வியைக் கண்டு கலங்க மாட்டார்கள். எல்லாக் கஷ்டத்தையும் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் இருக்கும். செவ்வாய் ஆதிக்கம் குறைந்தவர்கள் பலமில்லாதவராகவும், பிறருக்குக் கட்டுப்பட்டு நடப்பவராகவும் இருப்பார்கள். ஆதிக்கம் மிகுந்தவர்கள் உற்சாகமாகவே காட்சியளிக்கின்றனர். நல்லவர்களிடம் மரியாதையாக நடந்து அவர்களின் நன்மதிப்புக்கு ஆளாவார்கள்.

### செவ்வாய் ஆதிக்கத்தினரின் உடல், உணவு நோய் மற்றும் மருத்துவ முறைகள்

பெரும்பாலும் நடுத்தர உயரத்துடனேயே காணப்படுகின்றனர். நல்ல மனோசக்திகள் வாய்ந்த நபர்கள் மட்டுமே உயரமாகக் காணப்படுவார்கள். திடமான சரீரம் உடையவர்கள். உடல் உழைப்பு மீது ஆர்வம் இருக்கும். தலை நிமிர்ந்த கம்பீரமான நடையுள்ளவர்கள். இவர்களின் முகம் பார்க்க அமைதியாகவும் எதிர்பார்ப்புடனும் இருக்கும். பல இரகசியங்களை உள்ளடக்கியது. நல்ல உடற்பலமுடையவர்கள்.

### செவ்வாய் ஆதிக்கத்தினரின் தொழில்கள்

கலை சார்ந்த தொழில்கள், இயந்திரக் கருவிகள், கவிதை, ஓவியம், பொறியியல், அரசியல், சட்டம், கட்டுமானம், வியாபாரம், பூமி சம்பந்தப்பட்ட தொழில்கள் போன்ற தொழில்களிலும் சிறப்படைவார்கள்.

### செவ்வாய் ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நாள்கள்

6,15,24,9,18,27,3,12,21,30 ஆகிய திகதிகள் அதிர்ஷ்ட நாள்களாகும். திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டிவரும் கூட்டு எண் 9 வரும் நாள்களும் அதிர்ஷ்ட தினங்கள் ஆகும். மேற்கண்ட நாள்களில் ஈடுபடும் காரியங்கள் முழு வெற்றியைத் தரும். நீடித்து நிலைக்கக் கூடிய காரியங்களைக் கூட்டு எண் 9 வரும் நாட்களில் செய்து வர வேண்டும் அதே நேரத்தில் திகதி எண்ணும் சாதகமாக அமைய வேண்டும். பெயர் எண் குறிக்கும் நாள்களே முழு அதிர்ஷ்டமானதாக அமையும்.

(தொடரும்)

# தோல்விகளைக் கண்டு துவண்டு விடாதீர்கள்

■ ம.கிங்ஸ்ரன் சுமண்றாஜ்
ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி

சாதிக்க நினைப்பவர்களை அடிக்கடி வந்து சந்திப்பது தோல்விகள்தான். நம் திறமைகளை வெளிக் கொணரக் கடினமாகப் போராடும்போது தோல்விகளும் அவ்வப்போது நேரிடத்தான் செய்யும். ஆனால் நாம் தோல்விகளைக் கண்டு மனம் உடைந்து விடக்கூடாது. சாண் ஏற முழம் சறுக்கும் என்பார்கள். திறமையுள்ள பல இளைஞர்கள் சில தோல்விகள் எதிர்ப்பட்டதுமே துவண்டுபோய் விடுகிறார்கள். தங்கள் வெற்றிப் பாதையில் நிலை தடுமாறுகிறார்கள். இதுவரை சாதித்தவர்கள் அனைவருமே தோல்விகளைச் சந்தித்தே வெற்றியின் சிகரத்தைத் தொட்டவர்கள். தோல்விகளைக்கண்டு துவண்டிருந்தால் வெற்றி என்பதை எண்ணிப் பார்க்க முடிந்திருக்குமா? தோல்வி என்பது ஒன்று இருப்பதால்தான் வெற்றி என்பதற்கு அர்த்தம் கிடைக்கிறது.'சாதாரண மனிதர்களுக்குத் தோல்வி என்பது தடைக்கல், சாதனையாளர்களுக்குத் தோல்வி என்பது படிக்கல்' என்கிறார் ஓர் அறிஞர். தோல்வி நேரிடும் போது''கப்பல் கவிழ்ந்தாற் போன்று' கன்னத்தில் கை வைத்துவிடக் கூடாது. அடுத்து இந்தத் தோல்வி வராமல் இருக்க நாம் எப்படிச் செயலாற்ற வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். ஒரு தோல்வியால் நம் திறமைகள் அவ்வளவுதான் என்று எண்ணி முடங்கி விடக்கூடாது. அந்தத் தோல்வியின் அடுத்த கட்டம் வெற்றியாகக் கூட இருக்கலாம்.

சிலர் மிகக் கடினமாக உழைத்திருப்பார்கள். வெற்றியடைந்து விடலாம் என்று மிகவும் நம்பியிருப்பார்கள். ஆனால், தோல்வி வந்ததுமே பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். மனமுடைந்து போய் திறமைகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டுச் சாதாரண மனிதர்களைப் போல் இருந்துவிடுவார்கள்.

தோல்வி என்பது இயல்பானது. இன்றும் சொல்லப் போனால் வெற்றியைவிடத் தோல்விதான் நம்மை எழுச்சியடையச் செய்து விடுகிறது. நாம் தோல்வியை அடித்து விரட்டத்தான் எண்ண வேண்டுமே தவிர அதைக் கண்டு கலங்கிவிடக் கூடாது.

மெழுகு வர்த்தியானால் ஒளி கொடுக்கத் தன்னை உருக்க வேண்டும். ஊர்ந்து செல்லும் புழுக்கள் பறப்பதற்கு இறக்கையைச் சுமக்கச் சம்மதிக்க வேண்டும். நீ முன்னேறும் போது சில தியாகங்களைச் செய்துதான் தீர வேண்டும். 'நிமிர்ந்தவன் வளைந்தாலே அவனுக்கு வாசல் வழிவிடுகிறது' என்கிறார் சீனக் கவிஞர். உலகச் சரித்திரத்தில் பல மன்னர்களின் வெற்றியைப் பற்றித்தான் நாம் படிக்கிறோம். ஆனால் அந்த வெற்றிக்கு முன்னால் அவர்களும் சிறு சிறு தோல்விகளைச் சந்தித்துத்தான் இருப்பார்கள்.

தோமஸ் அல்வா எடிசன் கண்டுபிடித்த மின் விளக்கு (மின்குமிழ்) இன்று உலகத்துக்கே வெளிச்சம் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. அந்த மின்விளக்கைக் கண்டுபிடிக்க அவர்பட்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. பல முறைகள் தோல்வியைச் சந்தித்தபின் தான் அவரால் மின்விளக்கைக் கண்டுபிடிக்க முடிந்தது. அன்று எடிசன் மனம் ஒடிந்து போயிருந்தால் தோல்வியைக் கண்டு துவண்டு போயிருந்தால் இன்று உலகமே இருளில் மூழ்கித்தான் போயிருக்கும்.

''தோல்வி என்பது வெற்றியின் முதற்படி'' என்ற கருத்து நம் அனைவருக்கும் தெரியும். தோல்வியை உள்வாங்கிக் கொண்டு அதை வெற்றியாக மாற்றக் கூடிய மனோபாவம் இளைஞர்களிடம் இருக்க வேண்டும். மனதில் உறுதி உள்ள இளைஞர்களால் மட்டுமே இதை நிறைவேற்றிக் காட்ட முடியும். எண்ணற்ற திறமைகள் எத்தனையோ பேரிடம் இருந்தாலும் அவர்களின் கடின முயற்சிக்குப் பின்னரே அவை வெளிப்படுகின்றன. எனவே வெற்றியின் வாயிலில் நீங்கள் நுழைவதற்குக் கடினமாக முயற்சி செய்வது அவசியமாகும். முயற்சி செய்வதற்கு முன்னால் உங்கள் திறமையைப் பற்றிய தெளிவும், தன்னம்பிக்கையும் உங்களிடம் இருக்க வேண்டும்.

''முயற்சி திருவினையாக்கும்'' 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' உங்கள் முயற்சிகளுக்குக் காலம் ஒருநாள் பதில் சொல்லும். முயற்சிகள் என்றைக்குமே வீண் போனதில்லை. இன்று உங்கள் முயற்சி தோல்வியுற்றால் உங்களுக்குத் திறமையில்லை என்று அர்த்தமில்லை. உங்கள் முயற்சியில் ஏதோ குறையுள்ளது என்று அர்த்தம். நல்ல நேரத்தை நீங்கள் தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதற்காக நீங்கள் கடினமான முயற்சிகளைக் கூடச் செய்ய வேண்டியிருக்கும். ஒருவனது வெற்றியை அவனது திறமையோ, தன்னம்பிக்கையோ மட்டும் தீர்மானிப்பதில்லை. அவன் மேற்கொள்ளும் முயற்சிகளும் முக்கியம். இளைஞர்களே உங்கள் திறமைக்குச் சவால் விடும் போட்டிகளில் அடிக்கடி கலந்துகொள்ளுங்கள்.

தோல்வியுற்றாலும் பரவாயில்லை. போட்டிகளில் கலந்துகொண்டால்தான் வெற்றிபெறும் வழிவகைகள் உங்களுக்குக் கிடைக்கும். ✱

# வாசிப்பை நேசிப்போம்



பாடசாலை விழுதுகள் நாம்
பள்ளி நூலகம் தனை - மிகப்
பயன்படுத்தியே எந்நாளும்
மிளிர்ந்திடுவோம் பாரினிலே

பாசி மூடிய பவளம் போல்
பயனற்றிருக்காது கதை
கவிதை கட்டுரையென
களிப்புடனே பலவற்றையும்
பாடசாலை நூலகந் தனில்
படித்திடுவோம் பரிவுடனே
மாரித் தவளையின் இயல்பில்

மாணவர்கள் நாம் வகுப்பினிலே
பொன்னான நேரந்தனில் - வீணே
பகிடி வதைகள் செய்திடாது
ஆயிரம் ஆயிரம் புத்தகம் புரட்டி
மாறிடுவோம் பூரண மனிதர்களாய்

வி. கார்த்திகா

## இலங்கை தொடர்பான தகவல்கள்

* சுதந்திரம் அடைந்த ஆண்டு -1948 பெப்வரி மாதம் 4 ஆம் திகதி
* புனித வெள்ளரசு மரம் நடப்பட்டுள்ள இடம்- மிகிந்தலை
* வெள்ளரசுக் கிளையைக் கொண்டு வந்தவர்- சங்கமித்தை
* கலாசார முக்கோணப்பிரதேசம்- அநுராதபுரம், பொலநறுவை, கண்டி
* கைப்பணிப் பொருள்கள் தயாரிக்கும் இடம்-லக்சல நிறுவனம்
* தேசிய விளையாட்டு- கரப்பந்தாட்டம்
* முதல் பிரதமர் - டி.எஸ்.சேனாநாயக்கா

சி.நிறோஜன்
யா / கனிஷ்ட வித்தியாலயம்

## கிளி

* கிளி ஒரு அழகான பறவை.
* இது பச்சை நிறமுடையது.
* இது பழங்களை விரும்பி உண்ணும்.
* சிறுவர்கள் கிளியை செல்லப் பிராணியாக வீட்டில் வளப்பார்.
* மாலை நேரத்தில் எனது தோட்டத்தில் கிளி பறந்து வரும்.
* இவற்றின் அழகை நான் பார்த்து இரசிப்பேன்.
* கிளிகளைப் பிடித்து கூண்டில் அடைக்கக் கூடாது.

செ.ரிஷிதரன்
மத்திய கல்லூரி

## பொது அறிவு

1. அலுமினியத்தை கண்டுபிடித்தவர் யார்? எப்.ஹோலர் 1827
2. கல்சியத்தைக் கண்டுபிடித்தவர் யார்? எச்.டேவி 1808
3. ஹைட்ரஜனை கண்டுபிடித்தவர் யார்? எச்.கே.வண்டிஸ் 1766
4. பாஸ்பரஸை கண்டுபிடித்தவர் யார்? எச்.பிராண்ட் 1669
5. பொட்டாசியத்தை கண்டுபிடித்தவர் யார்? டேவி 1669
6. ரேடியத்தை கண்டு பிடித்தவர்ய யார்? எச்.கியூரி 1807
7. நைட்ரஜனை கண்டு பிடித்தவர் யார்? டி.ரூதர் போர்டு 1772
8. யுரேனியத்தை கண்டுபிடித்தவர் யார்? ஈ.எம்.பெலிகாட் 1841
9. அயோடினை கண்டுபிடித்தவர் யார்? வி.கோர்ட் பாய்ஸ் 1812
10. நிக்கலை கண்டுபிடித்தவர் யார்? எ.க்ரான்ஸ் டெட் 1751

இ. புஷ்பராஜ்
யாழ். மத்திய கல்லூரி.

## காகம்



காகம் பொதுவாக கரியநிறம் கொண்ட பறவை ஆகும். இது பறவைகளில் கூடுதல் அறிவுத் திறன் பெற்றதாகக் கருதப்படுகிறது. இது மக்கள் வாழும் இடங்களில் அதிகமாக இருந்து கொண்டு அவர்கள் வெளியிடும் குப்பைகளையும், மற்றைய வீண்பொருள்களையும் உண்டு வாழ்கிறது. இதன் காரணமாக சுற்றுப் புறச்சூழல் பாதுகாப் பில் ஒரு பங்கு வகிக்கிறது.

இவற்றை மிக இலகுவாகப் பயிற்றுவிக்க முடியும். காகங்களைப் பழக்கி இலகுவாகச் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுத்த முடியும் என்பதால் இவற்றைச் செல்லப் பறவைகளாக வளர்ப்பது சில நாடுகளில் சட்டவிரோதமானதாகும்.

காகங்களில் ஆஸ்திரேலிய, வட அமெரிக்க, ஆபிரிக்க, ஐரோப்பிய, ஆசிய இனங்கள் பல உள்ளன. கரியன் காகம், வீட்டுக் காகம் ஆகியன ஆசியக் காக இனங்களாகும்

ப.விதுசன்

# கைமேல் பலன் கிடைத்தது



அரசன் ஒருவன் சகுனங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன். அரண்மனை சோதிடர் இந்த நம்பிக்கை மேல் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் அரசே, அதிகாலை எழுந்தவுடன் இரண்டு காக்கைகளை ஒன்றாகப் பார்த்தால் நாள் சிறக்கும் என்று நம்பிக்கை ஊட்டினார்.

மன்னன் சேவகனை அழைத்தான். காலையில் எங்காவது இரண்டு காக்கைகள் தென்பட்டால் உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான்.

அதன் பின் தினமும் பொழுது விடியும் முன்பே சேவகன் தெருவில் அலையத் தொடங்கி விடுவான்.

ஒரு நாள் அரண்மனைக்குப் பக்கத்துத் தெருவில் இரண்டு காக்கைகள் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டான். அடடா! நல்ல சகுனம், இன்று மன்னர் நமக்கு நிச்சயம் பதவி உயர்வு கொடுப்பார் என்று மகிழ்ச்சி மிகுதியுடன் மூச்சிரைக்க ஓடி வந்து மன்னரிடம் விபரம் சொன்னான்.

இதைக் கேட்டு துள்ளி எழுந்த மன்னன் சேவகனுடன் அந்த இடத்திற்கு ஓடினான். அதற்குள் ஒரு காகம் பறந்து போய் விட்டது.

மன்னனுக்கு மூக்கின் மேல் கோபம் வந்து விட்டது. தளபதியை அழைத்து இந்தப் பொறுப்பற்ற சேவகனுக்குப் பத்து கசையடி கொடு என்று உத்தரவிட்டான்.

சேவகன் சிரிக்க ஆரம்பித்து விட்டான். இடுக்கண் வருங்கால் நகுக என்று படித்துப் புரிந்து வைத்திருந்தவன் போலும். மன்னனுக்கு ஆத்திரம் இன்னமும் அதிக்மானது. நீ சிரித்ததற்கு சரியான காரணம் சொல்லாவிட்டால் இன்னமும் பத்து கசையடி என்று உறுமினான்.

சேவன் சொன்னான். மகா மன்னரே. இன்று நான் மட்டும்தான் அதிகாலையில் இரட்டைக் காக்கைகளைப் பார்த்தேன். கை மேல் பலன் கிடைத்து விட்டது அல்லவா? என்றான்.

மன்னருக்கு சுருக்கென்று ஏதோ உறைத்தது.

க.கபிலன்

## ஐ.நா.விவரங்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் - கொபி அனான்
ஐ.நாவின் தற்போதைய பொதுச் செயலாளர் - பான் கீ மூன்
UNSC என்பதன் விரிவான விளக்கம் - United Nations Security Council
UNSC யில் 5 நாடுகள் நிரந்தர உறுப்புரிமை பெற்றுள்ள நாடுகள் - சீனா, பிரான்ஸ், ரஷ்யா
ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தரமற்ற உறுப்புரிமையை (வாக்களிப்பதன் மூலம்) பெற்ற ஒரே நாடு - வியட்நாம்

வி. கார்த்திகா
ஸ்ரீ சோமஸ்கந்த
கல்லூரி.

## பழமொழி

1. அற அறிவு அல்லற் கிடம்
2. அறச் செட்டு முழு நட்டம்
3. அற முறுக்கிணற்று அற்றுப்போகும்
4. அப்பன் அருமை மாண்டால் தெரியும்
5. அணில் கொப்பிலும் ஆமை கிணற்றிலும்
6. அந்தி மழை அழுதலும் விடாது.
7. அகல் வட்டம் பகல் மழை
8. அகல உழுகிறதை விட அழ உழு
9. அடக்கமே பெண்ணுக்கு அழகு
10. அகல இருந்தால் நிகழ உறவு

சா. பபிதா
கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி

## விடுகதைகள்

1. தலையில் தட்டினால் வாய் விட்டு அழுவான் அவன் யார்?
2. வாழிடத்தை தன்னோடு அழைத்துக் கொண்டு செல்லும் பிராணி எது?
3. ஒரு நிமிடத்துக்கு 72 தடவைகள் துடிப்பது எது?
4. வெள்ளை வீதியில் கறுப்புக்கார் அது என்ன?
5. நாங்கள் நடந்து செல்லும்போது எங்கள் பின்னாலே தொடர்ந்து வருவது எது?

விடைகள்
01. நீர்ப்பம்பி
02. நத்தை
03. இதயம்
04. கண்
05. நிழல்

நா.தனுசிகா
செட்டித்தெரு
மெ.மி.த.க.பாடசாலை.



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் இசைவும் அசைவும் நிகழ்வில் மாணவிகள்.

(100)

# மனிதனுக்கும் கால்நடைகளுக்கும் ஆபத்தை விளைவிக்கும் நச்சுத் தாவரங்கள்

■ அருணா




*(சென்றவாரத் தொடர்ச்சி)*

மனிதனின் உடலுக்குள் சென்றதும் உடல் உறுப்புகளின் கோளாறு உண்டாகுகின்றது. இவை மிகவும் அபாயகரமானவை. இவற்றுள் சில அதிகம் நஞ்சுடையவை . இத் தாவரங்களின் வேரையோ, இலையையோ சிறிதளவு உட்கொண்டாலும் மரணம் ஏற்படுவதுமுண்டு. இந்தச் செடிகளில் மனிதனுக்கோ, கால்நடைகளுக்கோ தீமையை உண்டாக்கவல்ல சில நச்சுப்பொருள்கள் உள்ளன. இவ் வஸ்துக்களில் சில ஆல்கலைடுகள் குளுக்கோசைடுகள் ,நெசினோயிடுக்கள் (Resinoids) கரிம அமிலங்கள் என்னும் இரசாயனப் பொருள்களான லில்லியேசிமி , அமரிசிலிட், ரானன்குலேசீயீ ( Ranun culaceae) முதலிய தாவரக் குடும்பங்களைச் சேர்ந்த செடிகள் நச்சுத்தன்மைக்கு காரணமாக உள்ளன. மார்க்கேசியீ என்ற தாவரக் குடும்ப செடிகளிலும் சிட்குட்டா மாக்குலேட்டா (Cicutamaculata) முதலியவற்றிலும் நஞ்சான ரெசினொயிடுகளும் காணப்படுகின்றன . ஒவ்வொரு வகைச் செடியிலும் தனித்தனி நஞ்சுப் பொருள்கள் இருப்பதனால் அச்செடிகளின் நச்சுத்தன்மையும் மாறுபடுகின்றது. வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த செடிகள் ஒரே வகை நஞ்சு இருந்தால் செடிகளின் நச்சுத்தன்மையும் ஒன்று போலவே இருக்கும் . ஒரு செடியின் இலையோ, தண்டோ நச்சுத்தன்மையாக இருந்தால் அதன் வேரும் அப்படியிருக்கும் என்றில்லை. ஒரு பாகத்தில் மிகுதியாகவும் மற்றப் பாகங்களில் குறைவாகவும் இருக்கலாம். அல்லது இல்லாமலே தென்படலாம் .

இலங்கையில் பல்வேறு இடங்களில் வளருகின்ற அலரி மரத்தின் காய்களின் தென்படுகின்ற அலரி விதையை இரண்டாகப் பிரித்து அதற்குள் இருக்கும் வித்தை உட்கொண்டாலும் உயிருக்கு ஆபத்து நேரிடலாம். லிக்னிஸ் கித்தாகோ என்ற செடியிலுள்ள விதையில் தான் நச்சு மிகுந்து காணப்படுகின்றது . சிக்குட்டா ( Cicuta) செடியின் வேரில் தான் நச்சுப் பொருள்கள் அதிகமாக உள்ளன . சில செடிகள் தம் வளர்ச்சிக்கேற்ப நச்சுத்தன்மையில் மாறுபடுகின்றன. உதாரணமாக சாத்தியம் என்ற சிறு செடி சிறிதாக வளர்ந்திருக்கும் போது தான் கொடிய நஞ்சுள்ளதாக இருக்கிறது. பெரிய செடியான பின்பு நச்சுத்தன்மை இருப்பதில்லை .

சில செடிகளைப் பச்சையாக உட்கொண்டால் கேடுவிளைவிக்கும் .

ஆனால் அவற்றைக் காயவைத்தோ அல்லது நன்றாக வேக வைத்தோ உண்பதால் தீமை ஏற்படுவதிலை . ஆஸ்கடமாலஸ் போன்ற செடிகள் அவை வளரும் மண்ணிற்கேற்ப நச்சுத்தன்மையடைகின்றன. ஆகவே மனிதர்களின் இன் உயிரை காவுகொள்கின்ற இத்தகைய நச்சுத் தாவரங்களின் தாற்பரியங்களை நன்கு அறிந்ததும் அவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளாமல் விடுவதே நன்மை பயக்கும் உதாரணமாக நச்சுப் பூண்டுகளால் மனிதனை விட கால் நடைகளே அபாயத்தில் மாட்டிக் கொள்கின்றன. ஏனெனில் அவை புல் மேயும் வேளையில் அவற்று டன் சேர்ந்து அந்த நிலத்தில் வளரும் நச்சு மூலிகைகளையும் உட்கொண்டு வருகின் றன என்பதால் இக் கெடுதி ஏற்படுகின்றது. உதாரணத்திற்கு ஆட்டாவஸ் கோணியம், மாக்கு வேட்டம், சிக்குட்டா மாக்கு வேட்டா முதலியவற்றைக் குறிப்பிடலாம்.



இத்தகைய நச்சுப் பூண்டுகளைத் தினமும் மேயும் போது கால்நடைகளுக்கு பல வகை நோய்கள் உண்டாகி சிகிச்சை பயனின்றி சில மரணிக்கின்றன. புற்களுக்கு மத்தியில் நச்சுப் பூண்டுகள் அதிகம் வளர்ந்திருந்தால் கால்நடைகளே அவற்றை இனங்கண்டு மேயாமல் விட்டுவிடுகின்றன. புரஸ்ஸிக் அமிலம் என்ற ஒரு வகை வஸ்து அவற்றில் இருப்பதால் ப்ரூனஸ்(Prunus) சோளம் டிரைக் குளாத்தின் போன்றவை ஒரே வகையான நோயை உண்டாக்குகின்றன. ஆடு, மாடுகளுக்கு நடுக்கம் என்ற ஒரு வகை நோய் பலவகைப்பட்ட நஞ்சுப்பூண்டுகளை உண்பதால் ஏற்படுகின்றது. சில வகை நச்சுச் செடிகளை கால்நடைகள் தவறுதலாக உண்ணும் பட்சத்தில் அவற்றுக்கு ட்ரேமிட்டால் என்னும் நஞ்சுநோய் உண்டாகின்றது. ஆகவே பசுவுக்கோ , ஆட்டுக்கோ நடுக்கம் உண்டாகின்றது. நோயுள்ள பசுவில் கறந்த பாலை அருந்துபவர்களுக்கு பால் நோய் ஏற்படுகிறது. இத்தகைய செடிகளிற் சில கால்நடைகள் மேயும் அளவிற்கேற்ப வேறுபட்ட நோய்களை உண்டாக்கும். இவற்றை ஒரே சமயத்தில் அதிகமாக உட்கொண்டால் கால்நடைகள் இறக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். காட்டுச் செடிகளைத் தவிர நம் ஊரில் உள்ள நச்சுத் தாவரங்களினால் ஏற்படுகின்ற இரண்டு வகைப் பிணிகளைப் பார்ப்போம். முன்னர் கூறியது போல் முதலாவது தொட்டால் ஒட்டி வகை, இரண்டாவது உட்கொண்டால் தீமை பயப்பவை. சில செடிகள் நம் உடம்பில் பட்டால் அவை பட்ட இடத்தில் தோல் (Skin) தடித்த அரிப்பெடுக்கும். அவ்விடங்களில் வீக்கம் கண்டு பல நாள்களுக்கோ வாரங்களுக்கோ இந்த உபாதை நீடித்து மிகுந்த வேதனையை அளிக்கின்றது. இத்தகைய நோயை உண்டாக்க நஞ்சுப்பொருள்கள் இச்செடிகளின் ரெஸின் அல்லது பாலில் கலந்திருக்கும். முந்திரி மரத்தில் இத்தகைய பால் இருக்கிறது இதன் பால் மெல்லிய தோலில் பட்டால் அங்கு தீயினால் சுட்டாற் போன்று கொப்பளங்கள் உண்டாகின்றன.

அமெரிக்காவில் காணப்படும் நச்சு ஐவி இவ்வகையைச் சேர்ந்தது. இச் செடிகளின் இலை, பூ, பழம், பட்டை, தண்டு எல்லாவற்றிலுமுள்ள பாலில் நச்சுப்பொருள் கலந்திருக்கிறது. இந்த நஞ்சுக்கு ஆவியாக மாறக்கூடிய தன்மையில்லை ஆகையால் இப் பால் பட்ட இடத்தில் நச்சுப் பொருள் தாக்கி விடுகிறது. இச்செடியிலுள்ள நஞ்சுப் பொருள் ரூஷியால் எனப்படும். இதன் பால் பட்ட இடத்தை உடனே சோப்பால் நன்றாக சுத்தம் செய்ய வேண்டும். நான்கு மணித்தியாலங்களுக்கு ஒரு முறை இதனை மேற்கொண்டால் அரிப்பு நீங்கி தோலுக்கும் கெடுதி ஏற்படாது. கள்ளி (இயூபோர்பியா) குடும்பத்தைச் சேர்ந்த பல இனச்செடிகளும் அவற்றைத் தொட்டால் கேடுவிளைவிக்கும் நச்சு வாய்ந்தவை.

உதாரணமாக ஹிப்போ மேனில் உள்ள பாலில் நஞ்சுத் தன்மை இருக்கிறது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் உள்ள சாதாரண காஞ்சோன்றி போன்ற செடிகள் உண்டு. இவற்றின் குணம் தெரிந்தவர்கள் அதனைத் தொடவே மாட்டார்கள். ஏனெனில் இவை பட்ட இடமெல்லாம் தாங்கமுடியாத அரிப்பு உண்டாகும் இந்தச் செடிகளின் மேற்பக்கத்தில் ஒருவகை ரோமங்கள் நிறைந்திருக்கும். ★

---

**“ இயற்பகையார் ‘‘இல்லை என்று கேட்டார்க்கெல்லாம் இல்லை என்னாது’’ நல்கும் வீரத்திற் சிறந்**
**விளங்கினார். தம்முடைய மனைவியைத் தூர்த்த வேடத்தில்**
**சிவனடியார்க்கு அளித்தார். அதனை எதிர்த்துப் போரிட வந்த சுற்றத்தார்களோடெல்லாம் வென்ற பொருதிறல்வீரர் என்று சேக்கிழார புகழப் பெற்றார்.**

# பெரியபுராணத்

■ ஸ்ரீவிஜயகாந் பத்

தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமாள் இய
பெரியபுராணம், பலராலும் ஒரு பக்திக் காவியம் என்
எண்ணப்படுகின்றது. அஃது ஒரு மிகப்பெரிய வீரகாவி
சேக்கிழார் பெருமாள் தமது பெரியபுராணத்தில் திருக்
இன்னதென்று விளக்க முற்படுகின்றார்.

*‘‘ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே*
*பிரம ஈசன் பணி அலது ஒன்றிலா;*
*ஈர அன்பினர்; யாதும் குறைவிலார்;*
*வீரம் என்னல் விளம்பும் தகையதோ?’’*

என்று நாயன்மார்களின் வீரச்சிறப்பை வி
ஓதுகின்றார்.

இது மட்டுமா? நம்பியாரூரர் திருத்தொண்டர் தொகை
அருளிச் செய்த நிகழ்ச்சியை ‘‘தூரத்தே திருக்கூட்டம்
தொழுது அன்பு சேரத் தாழ்ந்து எழுந்தருகு சென் றெய்
வீரத்தார் எல்லோருக்கும் தனித்தனி வேறு அடி
ஆர்வத்தால் திருத் தொண்டர்த் தொகைப் பதிகம் அ
என்று பாடி அருளுகின்றார். இதன் கண் நாயன்மார்
வீரத்தார் என்று குறிப்பிடப்பட்டிருத்தலைக் காணலாம்.

வீரம் என்பது வெறும் உடல் வன்மையும் போர்க
பகைவர்களைக் கொன்று வெல்லும் போர் வன்மையும்
புலன்களை வெல்லும் வீரமும், அருளியல் ஆன்மிக வீ
மேலான சிறந்த பெரு வீரமாகும். திருநீலகண்டர் எவ
முடியாத காமத்தை வென்று இளமை பெற்றார்.

இயற்பகையார் ‘‘இல்லை என்று கேட்டார்க்கெல்
என்னாது’’ நல்கும் வீரத்திற் சிறந்து விளங்கினார்
மனைவியைத் தூர்த்த வேடத்தில் வந்த சிவனடியார்க்
அதனை எதிர்த்துப் போரிட வந்த சுற்றத்தார்களோடெல்
பொருதிறல்வீரர் என்று சேக்கிழாரால் புகழப் பெற்றார்.

மெய்ப்பொருள் நாயனார் தம்மை வஞ்சகத்தாற்
மூத்தநாதனையும் ‘‘மெய்த்தவ வேடமே மெய்பொருள்’’
வென்றார்.இது வெற்றிகளிலெல்லாம் மேலான வெ
இதனை ‘அரச வகை’ என்றுப் போற்றிப் புகழ்வர். தமிழ்
விறன்மிண்டர் என்றொருவர். இவருடைய பெய
வீரச்சிறப்பை உணர்த்துகின்றது. எறிபத்தர், சிவகாமி
பூக்குடலைச் சிதறிய மத யானையை அதன் தடக்கை

---

# அறிவு என்பது அ... உண்டு!

*மனம்*

ஆழ் மனம்,அதற்கும்
இன்னும் ஆழமாய் - உள்ளம்
அறியாமலே உள்ளுறுப்பின்
இயக்கம், உயிரங்கிகளின்
உணர்தல் தொடக்கம்
‘‘ நான்’’ என்று தன்னை
உணர்தல் வரை!



*சித்...*

நினைப்...
நடப்பது...
எல்லாம்...
நடக்க...
நடப்பது...
ஒன்றாக...
அவை...

*வாக...*

ஐந்து கா...
ஐந்து அ...
வாக்கு (...
பல் பரி...
வேறு ஊ...
அறிவின்...
பலரின்...

ன்று

பிறந்து

தில் வந்த
தனை

வன்றார்.
ழொரால்




# த்தின் வீரம்

ந் பத்மஸ்ரோஜினி

இயற்றி அருளிய
என்றே பொதுவாக
ரகாவியமும் ஆகும்.
திருக்கூட்டச் சிறப்பு

விதைந்து எடுத்து

தாகைத் திருப்பதிகம்
ட்டம் பலமுறையில்
றெய்தி நின்றடியார்.
அடியேன் என்று
ம் அருள் செய்தார்''
ார் அனைவரையும்
லாம்.
பார்களுக்குச் சென்று
யும் மட்டுமே அல்ல.
மிக வீரமும்தான் மிக
எவராலும் வெல்ல

கெல்லாம் இல்லை
னார். தம்முடைய
யார்க்கு அளித்தார்.
டெல்லாம் வென்றார்.
ற்றார்.
தாற் கொல்ல வந்த
ருள்'' எனத் தொழுது
வெற்றி ஆதலின்
தமிழிலக்கண நூலார்
பெயரே இவர் தம்
பகாமி ஆண்டாரின்
கை வீழத் தைந்து

பாய்ந்து மழுவினால் துணிந்தார்.

ஏனாதி நாதர் வாட்பட்டை பயிற்றும் வீரத்தொழிலே புரிந்து வந்தார் என்பது வரலாறும். கண்ணப்ப நாயனாரால் ''வெஞ்சிலைக்கை வீரனார்'' என்று கண் துயிலாத வீரர் என்றும் பிறவாறும் சேக்கிழார் பெருமானால் புகழப்படுகின்றார்.

திருநாவுக்கரசர் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்றும் அஞ்சுவது யாதென்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை என்றும் பிறவாறும் வீரமுழக்கம் செய்தார். தமிழகத்தின் மாபெரும் புரட்சி வீரர்களுள் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தலை சிறந்தவர்கள் ஆவார்கள்.

மன்னன் நீறு அணிந்தான் என்று மற்றும் அவன் மதுரை வாழ்வார் துன்னி நின்றார்களெல்லாம் துய்ய நீறு அணிந்து கொண்டார் என்னும்படி திருஞானசம்பந்தர் நிகழ்த்தியருளிய வீரப்புரட்சி. தமிழக வரலாற்றிலேயே அழியாச் சிறப்பு மிக்கதொன்றாகும்.

ஏயர்கோள் கலிக்காமர், இறைவனைப் பரவையார் பால் தூது அனுப்பினார் என்று சுந்தரைக் காணவிரும்பாமல் தன் உயிரையே மாய்த்துக் கொண்ட வீரப்பெருமகனார் சிறுதொண்டர்

''மன்னவர்களுக்குத் தண்டு போய்வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துசளாகத் துறை நெடுங்கை
வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும்
பரிதொகையும்
இன்னன எண்ணில் கவர்ந்தே இகலரசன்

மன் கொணர்ந்த மிகப் பெரிய போர் வீரரும், ஆன்மிக வீரரும் ஆவார். கலிப்பகையார், முனையடுவார் கூற்றுவர், கோட்புரியார் முதலியவர்கள் போர் வீரர்கள் ஆகத் திகழ்ந்தவர்கள்.

நாயன்மார்கள் அனைவரும் எத்தகைய கொள்கை வீரமும், தொண்டின் குறிக்கோள் வீரமும் அருளியல் ஆன்மிக வீரமுங் கொண்டு வாழ்ந்திருந்தார்கள் என்பதைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட விளக்குவதே பெரிய புராணம் ஆதலால் அதனை ஒரு பெரிய வீரகாவியம் என்று கூறுதல் மிக மிகப் பொருந்தும். இதனைவிட மேலும் ஆராய்ந்து பார்த்தால் பல சிறப்புக்கள் பொதிந்து காணப்படும். ✸

# ஒழுக்கநெறி நிற்போர்

தணிகாசலம் நாவலர் ஸ்ரீவித்யா மஹா கணபதியின் பக்தன் மஹா கணபதியின் மீது நம்பிக்கை வைத்துள்ளவர். அவர் எந்தக் காரியத்தை ஆரம்பிக்கும் போதும் மஹாகணபதி ஆலயத்திற்கு வந்து கற்பூரம் கொளுத்தி தேங்காய் உடைத்து வணங்கி விட்டுத்தான் வேலையை ஆரம்பிப்பார். வேலையை ஆரம்பிக்கும் போது மஹாகணபதிக்கு நேர்த்தியும் வைப்பார். அவர் மிகவும் வறியவர். நில புலன்கள் பெரிதாக இல்லாதவர் வறுமையாக வாழ்ந்த போதும் ஊர் மக்களால் பெரிதும் மதிக்கப்படுபவர். அதே போல் ஸ்ரீனிவாசனையும் அவர் மதிப்பார் . ஸ்ரீனிவாசனும் அவர் மீது அளவில்லா அன்பும் நம்பிக்கையும் வைத்திருந்தார்.

ஸ்ரீனிவாசன் கோயில் பகல்பூசை ம்முடிந்தவுடன் சில நேரங்களில் அவ்வூரில் வாழும் மக்களது வீடுகளுக்குச் செல்வார் . ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் வாழும் அக்கிராமத்தில் யாராவது ஒருவரது வீட்டுக்கு எப்போதாவது இருந்து விட்டு ஸ்ரீனிவாசன் செல்வார். அவரைக்கண்டதும் வீட்டுக்காரர் கடவுளை நேரில் கண்டது போல் நடப்பார். அவர் செல்லும் வீடுகளைக் கண்ட கிராமத்தவர்கள் பொறாமை கொள்வார்கள். அவர் பெரும் பெரும் பணக்காரர்களும், பெரும் உத்தியோகத்தர்களும், நிலச்சுவாந்தர்களும் வாழும் அக்கிராமத்தில் ஒவ்வொருவரும் ஸ்ரீனிவாசனது வரவை தினமும் எதிர்பார்த்திருப்பர். அவர் தமது வீட்டுக்கு வந்தால் பெரும் அதிஷ்டம் வருமென்று ஒவ்வொருவரும் நம்பினர்.

இரண்டு வருடங்களுக்கு முன் நடனபாதம் என்ற ஒரு கூலிக்காரனது வீட்டுக்குச் சென்றார் ஸ்ரீனிவாசன். நடன பாதம் அவ்வூரில் கூலி வேலை செய்பவன். அவனுக்கு பத்து பிள்ளைகள். மிகவும் நல்லவன் களவு வஞ்சகம் , சூது அறியாதவன். ஒப்படைக்கப்பட்ட வேலையை நேர்த்தியாகச் செய்வான். பத்து பிள்ளைகளும் பாடசாலை செல்வதால் அவனது மனைவியும் கூலித்தொழில் செய்து வந்தாள். அவர்களது வீடு மாட்டுத்தொழுவத்தைப் போன்றது.

அன்று மாலை ஆறு மணியளவில் திடீரென்று ஸ்ரீனிவா சன் நடனபாதத்தின் வீட்டுக்குச் சென்றார் அவரைக் கண்ட நடன பாதம் திகைத்துத் திகிலடைந்து போனான். அவனின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. ''சுவாமியாரோ ஏன் இன்று எமது வீட்டுக்கு வந்தீர்கள். உங்களை அமர்த்தக் கூட ஆசனம் எதுவுமில்லை. உங்களுக்கு குடிப்பதற்குத் தர ஒரு சிரட்டை கஞ்சி கூட இல்லை'' என்று அழுதான் நடனபாதம்.

ஸ்ரீனிவாசன் சிரித்துக் கொண்டே பணம், பொருள், ஆடம்பரம், வசதிகள் யாவும் எல்லோரிடத்திலும்.வரும் போகும். ஆனால் நிறைந்த அன்பு கொண்ட வஞ்சகமில்லாத உள்ளம் எல்லோரிடமும் இல்லை. அன்புடன் தண்ணீர் தா அது எனக்கு அமிர்தமாக இருக்கும் என்றார் ஸ்ரீனிவாசன் .

மறுவாரம் அதிஷ்ட லாபச்சீட்டு நடனபாதத்திற்குக் கிடைத்தது.

இன்னுமொருமுறை சுந்தரலிங்கத்தின் வீட்டுக்குச் சென்றார் ஸ்ரீனிவாசன் சுந்தர லிங்கம் நல்ல வசதியானவன் நாவலர் ஸ்ரீ வித்தியாமஹா கணபதி ஆலயத்திற்கு பல புனருத்தாரண வேலைகள் செய்பவன். கஷ்டப்பட்டு உழைப்பவன். உழைப்பின் பெரும் பகுதியை ஆலய நிர்மாண வேலைகளுக்கும், ஏழைகளுக்கும் செலவு செய்வான், அவன் ஸ்ரீனிவாசனைக் கண்டதும் ஓடோடி வந்து ''சுவாமி யாரிடமாவது சொல்லி அனுப்பியிருந்தால் வந்திருப்பேன் தாங்கள் வேகா வெயிலில் நடந்து வந்திருக்கிறீர்கள் என்றவாறு அவரது கால்களைக் குளிர்ந்த நீரால் கழுவினான். பின், அவற்றைத் துடைத்து விட்டு ஆசனத்தில் அவரை அமரச் செய்து அவரது கால்களை வருடினான். அவனது மனைவி வெள்ளித் தட்டில் பால் கொண்டு வந்தாள்.

பாலைக் குடித்த ஸ்ரீனிவாசன் மிகவும் சுவையாக உள்ளது. காலையும் மாலையும் கணபதிக்குப் பாலைக் கொடு. மஹாகணபதியின் தெற்கு வாசற்பகுதியைத் திருத்தம் செய் உனது பிள்ளைகள் இருவரும் போற்றப்படுவார்கள்'' என்று கூறி விட்டுச் சென்றார்.

சுந்தரலிங்கம் திகைத்துப் போனார். மஹாகணபதிக்கு பால் அனுப்புவதை இட்டு மகிழ்ச்சியடைந்தார். மஹாகணபதி தான் தன்னில் விருப்பம் கொண்டு ஸ்ரீனிவாசசுவாமிகளை அனுப்பியிருக்கிறார் என நினைத்தான்.

ஆறு மாதம் கழிந்தது சுந்தரலிங்கத்தின் இரட்டைப் பிள்ளைகளான வசந்தனும் சயந்தனும் மருத்துவக் கல்லூரியில் அனுமதி பெற்றனர்.

அதனால் அவ்வூர் மக்கள் ஸ்ரீனிவாசனைத் தெய்வமாக மதித்தனர். அவர் தமது வீட்டுக்கு வருவாரா என நினைத்து ஏங்கினர். பலர் அல்லும் பகலும் அவருடன் இருந்தனர். சிலர் அவருக்கு அறு சுவை உணவு வகைகளைச் சமைத்து கோயிலுக்குச் கொண்டு சென்று கொடுத்தனர். ஆனால் அவற்றை வாங்கி அவர் உண்ணமாட்டார். தற்செயலாக யாராவது ஒருவனிடம் வாங்கி உண்பார் இது இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடக்கும் .

அன்று பகல் தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்றார் ஸ்ரீனிவாசர் . அவர் கோயில் எல்லையைத் தாண்டி நடக்கத் தொடங்கினால் அந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவிவிடும். ஒவ்வொருவரும் அவரை வரவேற்கத் தயாராகி விடுவார்கள் . தணிகாசலத்தின் வீடு ஊர்க்கோடியில் இருந்தது. அதனால் சுமார் இரண்டு மைல் துாரம் நடந்து சென்றார். நூற்றுக்கணக்கான மக்களுடன் ஊர்வலமாக வந்த ஸ்ரீனிவாசனை வரவேற்க முடியாது நின்றான் தணிகாசலம்.

பற்றுக்கள் ஏதுமின்றி இறைவனைத் தொழுகின்றவர்களும் இறைவனோடு சேர்ந்தவர்களே ... நீ என்னுடைய அன்புக்கு உட்பட்டவன். என் மீதும் மஹாகணபதி மீதும் அளவில்லாத அன்பைச் சொரிபவன். அப்படியான நீ தினமும் இருமுறை என்னைச் சந்தித்துக் கதைக்க வருகிறாய். நான் ஒருமுறை உன்னைச் சந்திக்க வீடு தேடி வந்துள்ளேன் என்றார்.

''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக நெறி நின்றார் நீடு வாழ்வார்''

ஐம்பொறிகளால் உண்டாகும் ஆசைத்தீயை அனுபவித்த இறைவனின் பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றோர் என்றும் இன்பமாக வாழ்வாராக.

**க.கலையரசி, துர்க்காபுரம்,**
**தெல்லிப்பழை.**

# அனைத்திலும்

## ஊகித்தல்

தெரிந்த சிலவற்றைக் கொண்டு
தெரியாத வற்றைத் தெரிந்து
கொள்ள முயற்சித்தல் தேவைப்
படும்போது ஆதாரத்துடன் கூட

## சித்தம்

னைப்பதெல்லாம்
ப்பதுமில்லை - நடந்தவை
லாம் நினைத்தவையுமல்ல
க்க இருப்பவை கூட
ப்பதும் நினைப்பதும்
றாக நடந்தால்
வை இறை சித்தமே!



## ரக்கு

காயமும் (புலன்கள்)
அறிவு ஆறாவது
கு (ஊடகம்) வளர்ந்து
பரிணாமத்துடன் பல்
ஊடகங்கள்
வின் பரவலாக்கமும்
ன் புரிதல்களும்

## புத்தி


தனக்குத்தானே கூடச்
சொல்லிக் கொள்வது
தன்னைச் சார்ந்தவர்க்கு
தன்னிலை மறந்து கோபத்தில்
கூட பிறருக்கு - இந்த
உலகிற்கு, ஊடகங்கள்
வாயிலாக அறிவியலாகவும்

இ.ஜெயபாலன்,
தொட்டிலடி.






## நூல்: பூத்திடும் பனந்தோப்பு





இன்றைய செய்தி நாளைய வரலாறாகிறது. அதே போல் இன்றைய இலக்கியங்களும் சமகால நிகழ்வுகளின் பதிவுகளாகி கால விரைவினால் வரலாறாகி விடுகின்றன. யாழ்ப்பாண மண்ணில், - சமூகத்தில் காலங்கள் எழுதிய கோலங்களைக் கற்பனைச் சித்திரங்களாக எழுத இயலாது என்பதையும், அவை உண்மைகளே என்பதையும் பூத்திடும் ''பனந்தோப்பு'' என்னும் நூலாக; நாளிதழ் ஆக்கங்களின் தொகுப்பாகத் தந்துள்ளார். ஊடகவியலாளரும் சமூக சேவைகள் திணைக்களத்தில் உத்தியோகத்தராகப் பணியாற்றுபவருமான வேதநாயகம் தபேந்திரனின் எழுத்தாக்கச் சிறப்புக்கு இந்தநூல் ஆதாரமாகிறது. உதயன் பத்திரிகை மூலம் எழுத்துத் துறையில் ஈடுபட்ட நூலாசிரியர், பின்னர் வீரகேசரி பத்திரிகையிலும் தனது ஆக்கங்களை வெளியிட்டு வந்துள்ளார். பல் வேறு நிகழ்வுகளையும் காலம் துரத்திச் செல்லும் காட்சிகளையும் வெவ்வேறு தலைப்புக்களில் வேறு வேறு காலங்களில் எழுதி வெளியிட்டி ருந்தாலும் அவற்றின் தொகுப்பு ஒரு கதம்பமாக இலக்கியத் தன்மை பெற்று மிளிர்வதை நூலை வாசிக்கும் போது காணமுடிகின்றது. நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள 29 தலைப்புக்களுக்குள் நிறைவாகியுள்ள ஆக்கங்கள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் எனப் பல வடிவுகளைப் பெற்றிருப் பினும் வாசிக்கத் தூண்டும் மொழிநடை நூலின் உள்ளடக்கங்களை உயர்த்திக் காட்டுகின்றது.

'பூத்திடும் பனந்தோப்பு' எனப் பெயரிட்டு அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருந்த பனங்காட்டைப் புதியன பூக்கவைத்துத் தோப்பாக்கி வண்ணமிட்டுள்ளார். பதிவு களின் தொகுப்புக் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்ற வகையாலும் ஆக்க இலக்கிய வளர்ச்சிக்குப் பொருத்தமான எழுத்து வடிவிலும் புதியன பூக்கச் செய்துள்ள தபேந்திரனின் பணிவரவேற்கத்தக்கதாகும். நூல் யாழ்ப்பாணப் பதிவாகப் பாதுகாக்கப்பட வேண்டிய தொன்றாகும். எனினும் யாவரும் படித்து இரசிக்கத்தக்க படைப்பாக வெளிவந்திப்பது பாராட்டுக்குரியதாகும்.

- மகேஷ்

## நூல்: ஒரு நாடகாசிரியரின் கதை





அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையால் எழுதப்பட்ட ''ஒரு நாடகாசிரியரின் கதை'' என்னும் சுயசரிதை தலைப்பிடப்பட்ட நூல் வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் நாட்றிந்த சிறந்த எழுத்தாளர். கலாபூஷணம் விருது பெற்ற தன்னம்பிக்கையும், துணிவும் மிக்கவர். தன் வரலாறு எனச் சொல்லிக் கொண்டு வாசகர் முன் தனது 27 ஆவது நூலாகத் தந்திருக்கின்ற இந்த நூலின் உள்ளடக்கம் நாடகங்கள், கட்டுரைகள், சிறுகதை எனப் பல பக்கங்களைக் கொண்டுள்ளன.

தன் வரலாற்றைத் தருகின்ற தமிழில் அவரது வாழ்வின் வலிமை தெரிகின்றது. நாடகத்தின் மீது கொண்ட விருப்பும் ஆற்றலும் மேலானதாக இருக்க, கவிதை, கட்டுரை, சிறுகதைகள் என்பவற்றை எழுதுவதன் ஊடாக இலக்கியப் பரப்பில் அவர் செய்தவைகள் பற்றி, எதிர்கால இலக்கிய ஆர்வலர்களுக்குப் பயன்தரும் வகையில், குறிப்புகளைத் தந்துள்ளார். அத்துடன் சிறுகதை எனக் கூறிக்கொண்டு ஒரு நாடகாசிரியரின் கதையைத் தந்துள்ள நூலாசிரியர் சமகாலத்தில் போர் ஓய்ந்து அமைதி நிலவும் வேளையில் தனது பல்கலைக் கழக சக மாணவியான சறோஜாவைப் பழுத்த பழமாகச் சந்திப்பதனூடே கதையைப் புனைந்து செல்கிறார். இளமைக் கனவுகள் - காட்சிகள் கதைக்குப் பொருள் சேர்க்கின்றன. - நாடகம் அவரது உயிர் மூச்சாகிறது.

இந்த நிலையில் நாடகம் பற்றிய விளக்கங்களும் விவரங்களும் அடங்கிய கட்டுரைகள் நாடக விருப்புடையோருக்கு விருந்தாகவுள்ளன. அனுபவமும் வாழ்க்கையும் இலக்கியப் படைப்புக்களுக்கு உயிரூட்டுவன என்ற வகையில் கலாபூஷணம் சுந்தரம்பிள்ளை அவர்களின் ஆக்கங்கள் சமகால, வாழ்க்கைக் காட்சிகளாகச் சித்திரங்களாக அழியா நிலை பெறுகின்றன.

உண்மைகள் பலருக்கும் கசப்பானவை என்பதாகப் பேசப்படினும் உண்மைகளைச் சொல்லத் தயங்காத நூலாசிரியரின் எழுத்துக்கள் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை அவர்களை நாடக உலகம் முதன்மைப்படுத்திப் பேசச் செய்யும் நூலாகவே இந்த நூல் வெளி வந்துள்ளது எனலாம்.

- வேதாரண்யன்






கிளிநொச்சி திரு நகரைப் வசிப்பிடமாகவும் காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி சோமசேகரம் கடந்த 2011 ஆம் ஆண்டுக் கான கலாபூஷணம் விருதைப் பெற்றுள்ளார்.

இசைத்துறையில் அர்ப்பணிப்புடன் பங்காற்றியமைக்காகவே இந்த விருது வழங்கப்பட்டது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் 20 வருடங்கள் ஆசிரியராகவும், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் 10 வருட காலம் ஆசிரிய ஆலோசகராகவும் கடமை புரிந்தார்.

கிளிநொச்சி மாவட்ட இந்து ஆலயங்களில் இசையுடன் கூடிய சிறந்த இறை பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(எ-121)

## சமயக் கருத்துக்கள் மாணவர்கள் தீயவழியில் செல்வதைத் தடுக்கும்

சர்வதேச இந்து மத குருமார்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் வட்டு. இந்துக் கல்லூரியில் நல்வாழ்வுக்கு சில வழிகள் என்னும் தலைப்பில் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சு.பா.வாசுதேவக் குருக்கள் வழங்கிய கருத்துரையின் சுருக்கம்.

யாழ்ப்பாணத்து மாணவரது சூழல் மாற்றத்துக்குக் குருமார்களதும் ஆசிரியர்களதும் பெற்றோர்களதும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் அரவணைப்பும் அதேசமயம் கண்டிப்பும் அவசியம் தேவைப்படுகின்றது. கல்விமான்களும் சமயப் பெரியார்களும் சமயக் கல்வியை வாழ்வுக்கு உதவும் வகையில் சீர் அமைத்துக் கொள்ளல் வேண்டும். சமயக் கல்வியானது தனித்துப் பரீட்சைக்குத் தயாராக்கப்படுகின்றதே தவிர அவை மாணவர்களின் நல்வாழ்வுக்குப் புகட்டப்படுவதில்லை. தேவாரங்கள் வரிப்பிழையில்லாமல் எழுதுவதற்கு மாத்திரம் கற்பிக்கப்படுகின்றது. உணர்வு பூர்வமாகத் தேவாரங்கள் இறை நம்பிக்கையூட்டும் வகையில் படிப்பிக்கப்படுவதில்லை. தேவாரங்களில் இருக்கின்ற மகிமை உணரப்படாததால் அவை மாணவர்களுக்கு அவசியமற்றதாகத் திகழ்கின்றது. புராணக் கதைகளும் இதிகாசக்கதைகளும் சுவாரசியமாகப் பொழுதைக்களிப் பதற்காகக் கற்கின்றார்கள். அதில் புதைந்துள்ள உயர் தத்துவங்களையும் அவை போதிக்கும் உண்மைகளும் இன்று பொருத்தப்பாடற்றதாக மாணவர்கள் சிந்திக்கின்றார்கள். வாழ்க்கைத் தத்துவங்களாக வாழ்ந்த புராண இதிகாச நாயகர்களது வரலாறு எமது மாணவர்களுக்குச் சரிவரப் புரிய வில்லை எனலாம். ஆசிரிய மாணவ உறவு நிலை இன்றைய உலகில் மிக முக்கியமான தாகும். மாணவப் பருவத்தில் அனைத்து உடலில் ஏற்படும் மாற்றங்கள் அவனது உள்ளத்திலும் பல மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. மாணவன் தனது உடல், உள மாற்றம் என்ற இடைத்தாக்க நிலையில் இருப்பவன். இந்த நிலை எப்பொழுதும் அவனைச் சமமற்ற நிலையிலேயே வைத்திருக்கும். எனவே இந்தப் பருவத்தில் மாணவன் பல்வேறு விதமான நடத்தைக் கோலங்களுக்குள்ளாக்கப்படுகின்றான். குறிப்பாக அடங்காத்தன்மை, மற்றவர்கள் தன்னை மதிக்க வேண்டும் என்னும் மனோநிலை, தலைமைத்துவத் தன்மை, பாலியல் உந்தல்களுக்குட்படும் நிலை போன்ற மாற்றங்களைக் காணலாம். இது மாணவிகளுக்கும் பொருந்தும். எனவே இந்த மாற்றத்துக்குரிய பருவத்தில் மாணவர்களுக்குச் சமயக் கருத்ததுக்களை ஆழமாகப் புகட்டுவதன் மூலம் அவர்களை தீய வழியில் ஈடுபட விடாமல் தடுக்கலாம்.



மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் நாம் முதலில் சமயவாழ்வை வாழ்ந்துகாட்ட வேண்டும். சிவ சின்னங்களை நாம் அணிவதில் விருப்புடையவர்களாக இருத்தல் வேண்டும். மாறிவரும் யாழ்ப்பாணத்தில் பெரும் சவாலாக அமைந்திருப்பது ஒழுக்க நெறியாகும். இதற்குப்பல காரணங் கள் அமைந்துள்ளன. பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வந்த பழக்க வழக் கங்கள் மாற்றம் அடைந்து வருவதனால்தான் இது நிகழ்கின்றது என்பது ஒரு காரணமாகும். சமவயதற்ற விதத்திலும் கல்விக்குப் பொருத்தப்பாடற்ற நண்பர்களது கூட்டும் மாணவர்கள் வாழ்வைச் சீருலைக்கின்றது. பொது நிகழ்வுகளின்போது பொது இடங்களில் இரவில் தங்குவது அவர்கள் கலந்துரையாடலிலும் அவர்களது தகாத பழக்க வழக்கங்களுக்கு ஆட்படுவதும் குறிப்பாக மது, புகைத்தல் முதலியவைகளில் ஈடுபடுவதும் வருந்தத்தக்கதாக அமைகின்றது. இதனைப் பெற்றோருக்கு உரிய முறையில் புரியவைத்தல் வேண்டும். இதற்கு ஆசிரியப் பெருமக்கள் முயற்சி செய்தல் வேண்டும். மாணவிகள் அறிமுக மில்லாதவர்களுடன் தொடர்புகளைப் பேணுதல். மாணவிகளுக்கு வேண்டாத நட்பால் ஏற்படக்கூடிய உடல், உள பாதிப்புக்களை ஆசிரியைகள் சகஜ மாக விளங்கப்படுத்தல் வேண்டும். இதனால் சமூகத்தில் ஏற்படக் கூடிய தலைக்குனிவை விளங்கப்படுத்தல் வேண்டும். மாணவச் செல்வங்கள் வழிதவறாது இருக்கும் வகையில் உதவுவது சமயம் என்பதைப் புரிய வைத்தல் வேண்டும். அத்துடன் ஒருசில பாடசாலைகளில் சமய சின்னங்கள் அணிந்து வருவதைத் தடுக்கின்ற செய்திகளைக் கேட்டு நாம் மிகக் கவலை அடைகின்றோம். உலகில் எத்தனையோ மதங்கள், இனங்கள் காணப்படுகின்றன. அவர்கள் ஒரு போதும் தமது சமயம், கலை, கலாசாரத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் விலகி நின்று ஒழுகுவதைக் காண முடியாது. சீக்கிய இனத்தவர் உலகில் எந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தாலும் சீக்கியனாகவே வாழ்கின்றான். அதேபோன்று முஸ்லிம் இனத்தவரும் வாழ்கின்றார்கள். எமது இனத்தவர் மாத்திரம் சார்ந்த வண்ணம் வாழத் துடிக்கின்றார்கள். எனவே கல்விச் சான்றோர் பெருமக்களே எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது சமய கலாசாரத்தைப் பின்பற்றத் தடுக்காதீர்கள். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பள்ளியில் இன்றும் காணக்கூடிய மகிழ்வு தரக்கூடியதான நிகழ்வு நடைபெற்ற வண்ணம் இருக்கின்றது. அதனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக அமையும் எனலாம். தினம் தோறும் மாண வர்கள் திருநீறு அணிந்து வருவதை ஆசிரியர்கள் அவதானிக்கிறார்கள். அவ் வாறு இல்லா விடில் மாணவன் அவர்களது ஆலயத்துக்கு அழைத்துச் சென்று திருநீறு அணிவிக்கப்படுகின்றான். அவற்றில் கூடத் தவறு நிகழுமாயின் வகுப்பாசிரியரிடம் அதிபர் இவ்விடயமாகக் கவன ஈர்ப்பு செய்கின்றனர். அத்துடன் அதிபர் வகுப்பாசிரியரை வணங்கிச் செல்லும் மரபு பேணப்பட்டு வருகின்றது. இத்தகைய ஆசிரிய மாணவ பாரம்பரியம் பேணப்படுவதால்தான் பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்று சாதனை படைக்கின்றார்கள். மாதம் ஒருமுறையாவது முதியோர் இல்லம், மருத்துவமனை, அனாதைகள் இல்லம், சிறுவர் இல்லம், வலுவிழந்தோர் இல்லம், முதலியவற்றுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லுதல் வேண்டும். இதன் மூலமாவது இறைவன் இருக்கின்றான் என்ற உணர்வைப் புகட்ட வாய்ப்பு ஏற்படுகின்றது. எந்தச் சந்தர்ப்பத்திலும் நீங்கள் ஆசிரியர் என்ற உயர் நிலையை விட்டு இறங்க முற்படாதீர்கள். மாணவனுக்கும் ஆசிரியருக்கும் ஆசிரிய மாணவ உறவு நிலை நன்கு பேணப்பட வேண்டும்.

ஆசிரியப் பெருமக்களே நீங்கள் அழுக்கற்ற மன முள்ளவர்களாகவும் வேற்றுமையற்றவர்களாகவும் மனதையும் பொறிகளையும் அடக்கி ஆளும் குண முள்ளவர்களாகவும் உலகத்தை வாழ்விக்க விருப்பமுள்ளவர்களாகவும் தெய்வீக பேரின்பத்தைத் தரவல்லவர்களாகவும் திகழ வேண்டும். *

# சொல்லத்தான் நினைக்கிறேன்

சொல்லவந்ததைச் சரியாகச் சொல்லுபவர்கள் எத்தனை பேர்? நூற்றுக்குப் பத்துப் பேருக்கு இந்தத் திறமை இருந்தால் ஆச்சரியம். உலகத்தில் ஜெயித்தவர்கள் பத்துப்பேர். தோற்றவர்கள் தொண் ணூறு பேர் என்பதற்கான காரணம் இப்போது புரிகிறதா?

பேசும்போதும் எழுதும்போதும் உரையாடும்போதும் பளிச்சென்று சொல்ல வந்த விடயத்தைப் பிறர் புரிந்துகொள்ளும்படி சொல்லுவது உன்னதமான கலை. உச்சரிப்புப் பிழை; வார்த்தைகள் தேர்வில் பயிற்சியின்மை; சொல்லவந்த விடயத்தில் தெளிவும் தீர்க்கமும் இல்லாமை; பதற்றம்; பரபரப்பு; கேட்டுக் கொண்டிருப்பவர் மீது நம்பிக்கை இன்மை; கேட்பவர்களைக் குறைத்து மதிப்பிடுதல் இவையெல்லாம் தான் தோல்விக்கான காரணங்கள்.

பாடசாலைக்கால அனுபவம் ஆறாம் வகுப்பில் சேர்ந்த புதிது. கையில் தடியுடன் வெள்ளை ஆடையுடன் கால்மறைத்த பூதமாய் தலைமை ஆசிரியர் .புதிதாய் சேர்ந்த மாணவர்கள் ஒவ்வொருவரையும் மதிய உணவு வேளையில் நிறுத்திப் பெயர் என்ன? என்பார். இது வெறும் சம்பிரதாயமான கேள்வியன்று. பள்ளிக்கூடத்தில் படிக்கும் அத்தனை மாணவர்கள் தொடர்பாகவும் அவருக்கு தெரியும். கிராமப்புறத்திலிருந்து வந்திருந்த ஒரு மாணவனைப் பார்த்து ''உன் பெயர் என்ன?'' என்றார் ''சொல்ல மாட்டேன்'' என்று பதில் வந்தது. தலைமையாசிரியரின் தங்கக் கிரீடம் தரையில் உருண்ட அதிர்ச்சியில் ''என்ன சொன்னே?'' என்று உறுமினார்.

''சொல்லமாட்டேன்'' அழுத்தம் திருத்தமாக கையைக் கட்டிக்கொண்டு சத்தமாகச் சொன்னான் அந்த மாணவன். அடுத்த விநாடி தலைமையாசிரியர் ஆடைக்குள் குடியிருந்த பிரம்பு அவன் முதுகில் தாண்டவமாடியது .மாணவன் கதறிவிட்டான்.மீண்டும் அதேகேள்வி; அதேபதில். தலைமையாசிரியர் சுதாகரித்துக் கொண்டார். வகுப்பா சிரியரை வர வழைத்து விசாரித்த பின்னர் தலைமையாசிரியர் ஆடிப்போய் விட்டார்.

மாணவன் பெயர் சுடலைமாடன். அதைத்தான் அவன் அட்சரசுத்தமாய் 'சொல்லமாட்டேன்' என்று ஒலிவர உச்சரித்திருக்கிறான். சுடலைமாடன் என்பதைச் சொல்ல மாட்டேன் என்று உச்சரித்தால் பிறருக்கு எப்படிப் புரியும்? உச்சரிப்பு மிக முக்கியம். இன்றைக்குப் பல தமிழ் ஆசிரியர்களே ழ,ல,ள போன்றவற்றை தவறுதலாக உச்சரிக்கிறார்கள். அவர்களை எந்தக் குச்சியால் அடிப்பது?

உச்சரிப்பை அடுத்து வார்த்தை தெரிய முக்கிய விடயம். ஒரு திருமண நிகழ்வுக்குப் போக வேண்டும் என்றால் இதைப் போடலாமா? அதைப் போடலாமா? என்று துணியை எடுத்து எடுத்து இறுதியாக ஒன்றைத் தெரிவு செய்கிறோம் அல்லவா?. அப்படி யாருடனாவது பேசும்போது இந்த வார்த்தை சரியா? அந்த வார்த்தை சரியா? என்று மாறி மாறி மனதுக்குள் பேசிப் பார்த்தது உண்டா? மிகச் சிறந்த வார்த்தையைத் தேடித் தேடிக் கண்டதுண்டா? உண்டு என்றால் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.

சிலர் பேச நினைப்பது வேறு. பேசி முடிப்பது வேறு. ஏன் இந்தக் கோளாறு? இதை எப்படித் தவிர்ப்பது? அனுமன் கூட அசோகவனத்தில் சீதையிடம் பேசும் போது யோசித்து யோசித்து மனசுக்குள் ஒத்திகை பார்த்தான் என்று வால்மீகி இராமாயணம் சொல்கிறது, போதுமா?

அமைதியான ஒருவரை ''பசுமாதிரி சாது'' என்றால் சந்தோஷப்படுவார். அதற்குப் பதிலாக ''மாடு போன்று'' என்று சொல்லிப் பாருங்கள்.

அடுத்து, தெளிவாகச் சொல்லுதல். ''ஏழு மணிக்கு உங்களைச் சந்திக்கிறேன்'' என்பதைவிட ''காலை ஏழு மணிக்கு'' என்று தெளிவுடன் சொல்லுவது அவசியம். அதற்காக ''ஆறு மணிக்கு அப்புறம் வருகிற ஏழு... எட்டு மணிக்கு முன்னால் வருகிற ஏழு...'' என்று திரிவுபடுத்தக்கூடாது. கூடுமானவரை குழப்பம் வராதபடி சொல்லுவது நல்லது.

''சாம்பார் வை... ரசம் வைக்காதே... நீலக்கலர் சட்டையைப் பெட்டியில் வை... சிவப்புச் சட்டையை வைக்காதே... தேநீர் போடு... பால் தேநீர் போடாதே'' என்று உடன்பாட்டையும் எதிர்மறையையும் மாறிமாறி சொன்னால் எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதில் குழப்பம் வரும். ''சாம்பார் வை'' என்று மட்டும் சொல்லுங்கள். ''நீலக்கலர் சட்டை கொண்டுபோக வேண்டும்... காபி குடிக்கிறேன்'' என்று உடன்பாடான விஷயங்களை மட்டும் சொல்லுங்கள். கேட்பவர்கள் மனதில் சரியாகப் பதியும். குழம்ப மாட்டார்கள், தெளிவான பேச்சு உள்ளவர்கள் வெற்றி பெறுவது நிச்சயம்.



சுகி.சிவம்

# வாசகர் திருமுகம்

## கேபிள் தொலைபேசி இணைப்பு கிடைக்குமா?

கைதடிக்கு ரெலிக்கொம் இணைப்புக்கள் வழங்கப் படுவது குறித்து அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலவுகிறது.

இப்சான் எனும் பரிவர்த்தனை இயந்திரத்தின் மூலமாக 200 இணைப்புக்கள் கைதடிப் பிரதேசத்துக்கு வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகின. தற்போது கிடைக்கப்பெறும் தகவல்களின்படி கைதடிச் சந்தியை அண்மித்துள்ள அரச, தனியார் நிறுவனங்களுக்கு இவை வழங்கப்பட்டு மிகுதி இணைப்புக்கள் கைதடி தென்கிழக்கு, கிழக்கிலுள்ள குறிப்பிட்ட ஒரு பிரதேச பொதுமக்களுக்கு மட்டுமே வழங்கப்படவுள்ளதாக அறியப்படுகின்றது. ஆறு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக் கிய கைதடிப் பிரதேசம் முழுவதற்குமே ரெலிக்கொம் இணைப்புக்கள் வழங்கப்படுமென முன்னர் கூறப்பட்டது. தற்போதைய நிலவரப்படி கைதடியைச் சேர்ந்த ஒரு பிரமுகரின் உறவினர்கள் செறிந்து வாழும் பகுதிக்கு மட்டுமே இணைப்புக்கள் வழங்கப்பட்டு முடிக்கப்படவுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கடந்த 2003 ஆம் ஆண்டில் மின்சாரப் புனரமைப்பு பணிகள் நடைபெற்ற போதும் குறிப்பிட்ட சில பகுதிகள் மட்டுமே முதலில் மின் இணைப்பைப் பெற்றன. பின்னர் ஏனைய பிரதேச மக்களின் தொடர் கோரிக்கைகளின் விளைவாகவே 2005 ஆம் ஆண்டு ஏனைய இடங்கள் மின் இணைப்பைப்பெற்றன.

ரெலிக்கொம் கைதடியின் சகல பிரதேசங்களுக்கும் தொலைபேசித் தூண்களை நட ஆரம்பித்தது. தற்போது ஒரு பிர தேசத்தில் மட்டும் சகல பணிகளும் நிறைவு செய்யும் கட்டத்திற்கு வந்துள்ளன. தொலைபேசி இணைப்பு வழங்கும் பணிகள் நிறைவு பெற்ற பின்னர் கேட்டால் இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி முடிந்து விட்டது என் பதில்தான் வருமோ என்னவோ.....?

**கைதை ஊரவன்**

## ஏமாற்றாதீர்! ஏமாறாதீர்!

அண்மையில் தெற்கிலிருந்து இங்கு வந்த வர்கள் தமிழில் ஒரு துண்டுப் பிரசுரத்தை ஒவ் வொரு வீடாக விநியோகித்தனர். அதில் இப்படி எழுதப்பட்டிருந்தது,

''அதிசிறந்த வைத்தியர்கள் மூலம் உங்கள் கண்களைப் பரிசோதனை செய்து கோல்ட் பிரேம் அமைப்பில் தூரப் பார்வை, கிட்டப் பார்வை கண்ணாடியை 650 ரூபாவுக்கு உடனே பெற்றுக்கொள்ளமுடியும். இது உங்களை போலியான பரிசோதனையாளர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதுடன் விசுவாசமான முறையில் ஒரு மூக்குக் கண்ணாடியை உங்களுக்குப் பெற்றுத் தருவதாகும்'' கம்பஹா விலாசம் கொடுக்கப் பட்டிருந்தது. சோதனைகள் இடம்பெறும் இடம் சுன்னாகம் சிவன் கோயில் கல்யாண மண்டபத்தின் பெயரும் போடப்பட்டிருந்தது.

இவற்றை நம்பி அங்கு 650 ரூபாவை வாங்கிக்கொண்டு, பற்றுச் சீட்டும் கொடுக்க வில்லை, கண்பரிசோதனை என்று ஏதோ செய்துவிட்டு ''எல்லாமாக ரூபா 2 ஆயிரத்து 150 வரும். மிகுதியை ஒரு மாதத்துக்கு பின் வந்து செலுத்தி கண்ணாடியை பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி அனுப்பி விட்டார்கள்.

யாழ். குடா வாசிகளே! அவதானமாக இருங் கள். இப்படிப்பட்ட ஏமாற்றுக்காரர்கள் படையெடுப்பார்கள். ஏமாறாதீர்கள்!

**பரமன்-சுன்னாகம்.**

## ஏன் இதற்கு தயங்குகின்றனர்?

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய நாட்டிலுள்ள எல்லாக் கல்வி வலயங்களிலும் ஆசிரிய இடமாற்றங்கள் ஓரளவு நடை பெற்றுள்ளன. அந்த வகையில் வன்னி, வடமராட்சி கிழக்கு இடமாற்றத்தை வரிந்து கட்டிக் கொண்டு செய்தவர்களுக்கு வடமராட்சி கல்வி வலயத்திலும் ஒரே பாடசாலையில் 7 வருடங்கள் கடைமையாற்றுவோரின் இடமாற்றம் கண்ணுக்கு தெரியவில்லையா? இதை நடைமுறைப் படுத்துவதால் அவர்களுக்கு தேவையானவர்கள் பாதிக்கப்படுவார்களா? உரியவர் கள் பதில் தரட்டும்.

**த. மகேந்திரராசா, பருத்தித்துறை**

## சேவை சீராகுமா?

மன்னார்- தலைமன்னார் மாலை 6.30 மணிச் சேவைக்கான பேருந்து சீராக்கப்பட்ட மைக்கு மன்னார் மாவட்ட பிராந்திய முகாமையாளர் ஜனாப் அஸ்கருக்கும் நேரக் காப்பாளர்களுக்கும் மக்கள் நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

மேலும் சில குறைபாடுகள் இருப்பதாக மக்கள் கருதுகின்றனர். அதாவது மாலை 6.30 மணிக்கு புறப்படும் பேருந்து சேவையானது 6.45 மணிக்கும் 7மணிக்கும் இடைப்பட்ட நேரங்களில் தினமும் புறப்படுகிறது. இச்சேவை சீராக்கப் படுமாயின் சராசரி 60-70 வயதுக்கு இடைப்பட்ட ப்பயணிகள் பயணம் செய்யும் வாய்ப்பு அதிகரிக்கும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மற்றும் 7.30 மணி பேருந்து சேவையை நம்பியே தூர இடத்திலிருந்து பயணிகள் வருகின்றனர். இதனால் 30 கிலோமீற்றர் தொலைவுக்குட்பட்ட கிராம வாசிகளும் பயனடைவர்.

6 மணிக்குப் புறப்படும் தனியார் பேருந்துச் சேவை காலந்தாழ்த்திச் செல்வதே இப்பேருந்துச் சேவைக்கு காரணமாக இருப்பதாக அறியக்கூடியதாக உள்ளது. எனவே 6 மணிச்சேவையும் சீரான முறையில் நடைபெறுமாயின் போக்குவரத்தில் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை கருத்தில் கொள்வார்களா?

**விடத்தலூர் தொ.கிறிஸ்ரி**

## ஏன் இந்த முடிவு?

யாழ்ப்பாணம் கொட்டடிச் சந்தியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இயங்கிவந்த ஆயுள்வேத ஆதார வைத்தியசாலை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அந்த இடத்திலிருந்து வேறு ஒரு பிரதேசத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மக்கள் இந்த வைத்தியசாலை மூலம் நிறைந்த பயனைப் பெற்று வந்துள்ளனர். ஒரு வைத்திய பொறுப்பதிகாரி உட்பட நான்கு ஆயுள் வேத வைத்தியர்களையும் கொண்டு இயங்கிய இந்த வைத்தியசாலையை இடம்மாற்றியமை வேதனைக்குரிய ஒன்றாகும்.

குறிப்பாக இந்த வைத்தியசாலையில் இயங்கி வந்த முறிவு நெரிவு வைத்தியப் பிரிவு மிகவும் சிறந்தொரு சேவையை வழங்கிவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. தொலைதூரத்திலிருந்துகூட இச் சிகிச்சைப் பிரிவுக்கு நிறைய நோயாளர்கள் வருவதும் யாவரும் அறிந்ததே.

சுதேச மருத்துவத்துறையை ஊக்குவிக்கும் முயற்சியில் அரசும் துறைசார் அமைச்சும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படும் இக்காலப் பகுதியில், சித்த ஆயுள்வேத மருத்துவத் துறையில் நாட்டங்கொண்ட மக்கள் நிறைந்துள்ள இந்தப் பிரதேசத்திலிருந்து இந்த வைத்தியசாலையை வேறு இடத்துக்கு இடம்மாற்றியது இந்தப் பகுதிக்கு மட்டுமல்ல இதனைச் சூழவுள்ள பகுதி மக்களுக்கும் பேரிழப்பாகும்.

வாடகைக்கு கட்டடத்தை தந்தவர் எழுப்பச் சொல்கிறார் என்றொரு காரணத்தைக் காட்டி நோயாளர்களை இப்படி ''அம்போ'' என்ற நிலைக்கு தள்ளிவிட்டு, வைத்தியசாலையை திடீர் என்று தூர இடத்துக்கு இடம்மாற்றிவிட்டு நோயாளரை அங்கு வா என்றால் இலவச மருத்துவ சேவைக்கென்று வந்தவர்கள் வாகன வசதிக்கு எங்கே போவார்கள்? சம்பந்தப் பட்டவர்கள் இந்தப் பிரதேசத்திலுள்ள சமூக நிறுவனங்கள், அமைப்புகள் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கலாம்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் பொருத்தமான நடவடிக்கை மூலம் இந்தப் பிரதேசத்தில் ஓர் ஆயுள்வேத இலவச வைத்தியசாலையை அமைக்க ஆவன செய்யவேண்டும் என தயவாக வேண்டுகிறேன்.

**-கிருஷ்ணா**

# இளமைத் தோற்றதைத் தரும் கொலாஜின் பேஷியல்



நீங்கள் வயதான தோற்றத்தை அடையாமல் என்றும் இளமையுடன் இருக்க, கொலாஜின் ஃபேஷியல் பயனுள்ளதாக இருக்கும்.

**கொலாஜின் ஃபேஷியல்**

நமது சருமம் கொலாஜின் (Collagen) என்ற புரோட்டின் ஃபைபர்ஸ்-ஆல் ஆனது. வயதாகும் பொழுது நீர், கொழுப்புச்சத்து உடலில் இல்லாததால் இந்த கொலாஜின் சுருங்கும். வயது முதிரும் போது இந்தச் சுருக்கம் அதிகரிக்கும். இந்தச் சமயத்தில் உள்ளே சாப்பிடுவதற்கும் நல்ல சத்துணவு வேண்டும். அத்துடன் முகத்தில் பூசுவதற்குக்கூட கொலாஜின் தேவை யாக இருக்கிறது. இது கடைகளில் கொலாஜின் என்றே கிடைக்கிறது. ஜெல் வடிவில் கிடைக்கும் கொலாஜினை முப்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் உபயோகிக்கலாம். வயதானவர்கள் அனைவருமே கொலாஜினை வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை தடவி சிறிது நேரம் கழித்து முகம் கழுவினால் முகச் சுருக்கம் போய் இளமை திரும்புவது நிச்சயம்.

கொலாஜின் மாஸ்க் என்று கூடக் கடைகளில் கிடைக்கிறது. அதை அப்படியே முகத்தில் போட்டு அரைமணி நேரம் ஊறவைத்துக் கழுவினால் முகம் பளிச்சென்று இருக்கும்.

தோடம்பழத்தை வட்ட வடிவமாக வெட்டிய தோற்றத்துடன், ஒரேஞ் ப்ளே வருடன் கூடிய கொலாஜின் மாஸ்க்கும் வந்திருக் கிறது. இதை முகத்தில் போடும்பொழுது 'ப்ரெஷ் ஷான லுக்' கிடைக்கும். இதை ஒரு பக்கெட் வாங்கி குளிர்சாதனப்பெட்டியில் வைத்துக் கொண்டால், தேவைப் படும்போது உபயோகிக்கலாம்.

தற்பொழுது heat mask உம் புதிதாக வந்திருக் கிறது. இது வயதானவர்களுக்கு மிகவும் உகந்தது. கொலாஜின் ஃபேஷியலுக்கு முன் இந்த ஹீட் மாஸ்க் கைப் போடலாம். இது சின்ன சின்ன ரியூப் வடி வத்தில் பக்கெட்டுகளில் கிடைக்கிறது. இதை ஒரு நிமிடம் மசாஜ் செய்தாற்போல் தடவி ஒரு நிமி டம் விட்டுவிட வேண்டும். இது லேசான சூடாக இருக்கும். ஆனால் உடனடி மாற்றம் கிடைக்கும். இது துவாரங் களின் உள்ளே போய் அழுக்கு வெளியே வந்துவிடும். தோல் நல்ல பளிச்சென்று இருப்பதை நீங்களே கண் கூடாக பார்ப்பீர்கள். சில நிமிடங் களிலேயே ஃபேஷியல் செய்த பலன் கிடைத்து விடும்.

கொலாஜின் ஃபேஷியல் தசையை இறுகச் செய்து தோலுக்கு ஊட்டச்சத்தைக் கொடுக்கக் கூடியது. முக்கியமாக குறிப்பிட வேண்டுமென்றால் இந்த முறையைக் கடைப்பிடித்தால் சீக்கிரமே வயதான தோற் றத்தை அடையாமல் தடுக்கப்படுவீர்கள். அப்புறம் உங்களைப் பார்த்து மற்றவர்கள் பொறமைப்படுவார்கள்

**மூலிகை பேஷியல்**

ஒரு சிலருக்குத் தாங்கள் கறுப்பாக இருக்கிறோம் என்ற தாழ்வு மனப்பான்மை எப்போதும் உண்டு. இந்தத் தாழ்வு மனப்பான்மையினாலேயே வேறு எதிலும் முழுக்கவனம் செலுத்தி வெற்றிபெற முடியாமலும் போகிறார்கள். இறைவன் படைப்பில் அனைவருமே அழகுதான். ஒவ்வொருவரிடமும் அழகு ஒளிந்து கொண்டிருக்கிறது. அதை வெளியே கொணர்வதில் தான் உங்கள் கைவண்ணம் இருக்கிறது. பொதுவாகவே நிறம் அதிகமாக வேண்டும் என்று நினைப்பவர்கள் முதலில் இரசாயனம் கலந்த சோப், கிறீம்களை விட்டுவிட வேண்டும். சாதாரணமாக நிறத்தை மேம் படுத்த நீங்கள் உபயோகிக்கும் ஃபேர்னஸ் கிறீமில் கூட இரசாயனம் உண்டு.

இதை அடிக்கடி உபயோகிக் கும்பொழுது தோல் வறண்டு, உலர்ந்துவிடும். இதைத் தவிர்க்க ஊட்டச்சத்துகள் அடங்கிய கிறீம் உபயோகிக் கலாம். முத்திலிருந்து எடுக்கப்பட்ட கிறீம் அல்லது விற்றமின் 'ஈ' கலந்த கிறீம் உபயோகிக்கலாம்.

இதைத் தவிர, அழகு நிலையங்களில் மூலிகைகளைக் கொண்டு நிறத்தை அதிகரிக்கச் செய்வதற்காக மூலிகை ஃபேஷியல் செய்யப்படுகிறது. பழச்சாறு... உலர் பழங்கள், அல்ஃபா ஹைட்ரொக்ஸி அசிட் இந்த மூன்றும் சேர்ந்தது தான் இந்த பேஷியல். இதைச் செய்யும்போது இரட்டிப்புப் பலன் கிடைக்கும். மேல்தோலை நீங்கி புதிதான தோல் உருவாகும். இது தோலுக்கு அதிக ஊட்டச்சத்து கொடுக்கக்கூடியது.

# கருமையான நீண்ட கூந்தலுக்கு

கரு நீள கூந்தலை விரும்பாத பெண்ணும், வழுக்கைத் தலையை விரும்பும் ஆணும் இந்த உலகத்தில் இருப்பது சாத்தியமா? கூந்தல் நீளமாக - அடர்த்தியாக - கருமையாக வளர விரும்பும் பெண்களுக்காக இந்தக் குறிப்புகள்



* விற்றமின் 'பி' கொம்ப்ளெக்ஸ் குறைபாட்டினால் விரைவில் தலைமுடி நரைக்க ஆரம்பிக்கும். ஊட்டமிக்க உணவு இந்த குறைபாட்டை நீக்கும்.
* நெல்லிக் காயையும், ஊற வைத்த வெந்தயத்தையும் நன்றாக அரைத்து அந்த விழுதைத் தலையில் தடவி ஊற வைப்பது குளிர்ச்சியைத் தரும். கண் எரிச்சலைப் போக்கும்.
* முடி எல்லோருக்கும் அடர்த்தியாக வளரும் என்று சொல்லமுடியாது. இது பரம்பரையாக வருகின்ற சொத்து என்பதுதான் உண்மை. அதேபோல் தான் வழுக்கை விழுவதும், அதைப் புரிந்து கொண்டால் கவலைப்படுவதனால் முடி கொட்டுவதை தவிர்க்கலாம்.
* அழுகிய தேங்காயைத் தூக்கி எறியாமல் சிறிது சுடு நீருடன் அரைத்துத் தலையில் தடவி ஊறவைக்கவும். பிறகு நன்றாக 'மசாஜ்' செய்யவும். மயிர்க்கால்கள் வலுப்பெற சரியான வழி இது.
* இரண்டு கரண்டி வினாகிரியுடன் கடலைமாவைக் குழைத்துக் கால்மணி நேரம் ஊறவைக்கவும். இதை நன்றாக மயிர் கால்களில் படும்படித் தடவி அரைமணி நேரம் ஊறிய பிறகு அலசி விடவும். பொடுகுத் தொல்லை நீங்கிவிடும்.
* நீங்கள் உபயோகிக்கும் ஷம்பூவுடன் சில துளிகள் கிளிசரின் சேர்த்துக் கொண்டால் முடி அறுந்து போகாது.
* சீப்பு உங்களுக்கென்று தனியாக வைத்துக் கொள்ளவும். வாரத்தில் மூன்று தடவை அதைக் கழுவ வேண்டும். உலோகத்தால் ஆன சீப்புகளைத் தவிர்க்கவும்.
* தேங்காயைத் தண்ணீர் சேர்க்காமல் அரைத்துப் பால் பிழியவும். இதை இரும்புச் சட்டியில் காய்ச்சினால் எண்ணெய் தனியாக வரும். அந்த எண்ணெயைத் தலையில் தடவி ஊறிய பின் சீயாக்காய் அல்லது கடலை மாவு தேய்த்து அலசவும்.
* நல்ல மரச் சீப்பினால் அழுந்த வாரினால் மயிர்க்கால்களில் ரத்த ஓட்டம் அதிகமா வதோடு முடி வளர்வதும் தூண்டப் படுகிறது.
* நல்லெண்ணெய் போல் குளிர்ச்சி தருவது வேறு எதுவுமே இல்லை. நல்லெண்ணெய் இரண்டு மேசைக்கரண்டி. தேங்காய் எண்ணெய் ஒரு மேசைக் கரண்டி எடுத்து இலேசாகச் சுடவைத்து மயிர்க்கால்களில் நன்றாகப் படும்படி தடவி விடவும். ஒரு பழைய துணியை வெந்நீரில் நனைத்து பிழிந்து, தலையின் மீது சுற்றவும். அந்தச் சூடு உள்ளே இறங்கும். சற்று ஆறியதும் மீண்டும் அவ்வாறு செய்யவும். பிறகு தலையை ஷம்பூ போட்டு அலசி விடவும். முடி உதிராமல் இருக்க முத்தான வழி இது.
* கூந்தல் வரண்டு இருந்தால் ஒரு கிண்ணத்தில் மருதாணிப் பொடி, தேங்காய்ப்பால், தேங்காய் எண்ணெயும் சேர்த்துக் குழைத்துத் தலையில் மசாஜ் செய்யவும். அரை மணி நேரம் கழித்துத் தலையில் குளிக்கலாம்.
* அங்கங்கே தலையில் சிறு இடைவெளி இருந்தால் சிறிய வெங்காயமும், மிளகுப் பொடியும் சேர்த்துத் தடவி ஊற வைத்தால் மீண்டும் முடி வளரும்.
* தலை முடிக்குப் போஷாக்குத் தரும் ஷம்பு பவுடரை வீட்டிலேயே தயாரிக்கலாம். ஒரு பங்கு சீயாக்காய், வெந்தயம் கால் பங்கு, பச்சைப்பயறு அரைப் பங்கு, புங்கங்காய் கைப் பிடி எடுத்து மிக்ஸியில் அரைத்து வைத்துக்கொள்ளவும். ரசாயனப் பொருள்கள் இல்லாத பொடி, எந்தவிதத் தீங்கும் ஏற்படுத்தாது. முடியும் வளரும்.
* நேரமில்லை என்பவர்கள் சாதம் வடித்த கஞ்சியில் வெந்தயப் பொடி, பயத்தம் மா கலந்து ஊற வைத்து தேய்த்துக்கொள்ளலாம்.
* பித்தம் உடலில் அதிகமானாலும் நரை ஏற்படும். கசகசாவும், அதிமதுரமும் சம அளவு எடுத்துப் பொடி செய்து பசும் பாலில் குழைத்துத் தலையில் தடவி ஊறிய பின் குளித்தால் விரைவில் மாற்றம் தெரியும்.
* தேங்காய் எண்ணெய் தடவிக்கொள்ளும் வழக்கம் இருப்பவர்கள், அந்தத் தேங்காய் எண்ணெயில் காய வைத்த செம்பருத்திப் பூ மற்றும் ஆலமரத்தின் இளம் வேர்களையும் பொடி செய்து கலந்து வைத்துக் கொண்டு பயன்படுத்தினால் முடி கறுப்பாக வளரும்.
* ஓடி ஆடி வெயிலில் அலைந்து திரிந்து வாழ்க்கையை நடத்தும் காலத்தில் நாம் இருக்கிறோம். தினமும் உச்சந்தலையில் ஒரு விரல் சுத்தமான விளக்கெண்ணெயைத் தடவி வந்தால் கண்ணுக்குக் குளிர்ச்சி, முடியும் உதிராது.
* தலைக்குச் சீயாக்காய்த்தூள் தேய்த்துக்கொள்ளும் போது, சீயாக்காய்த் தூளுடன் தண்ணீருக்குப் பதில் மோர் விட்டுக் கரைத்து தேய்த்துக் குளித்தால், தலை முடியில் உள்ள அழுக்கு சுத்தமாக நீங்கி விடும். சீயாக்காயும் குறைந்த அளவே போதும்.

# கச்சிதமாக ஆடை அணிவதே அழகு



நல்ல உணவு, அமைதியான மனம், மலர்ந்த முகம் இந்த மூன்றுமே உலகின் தலைசிறந்த வைத்தியர்கள். மூன்றும் நன்றாக இருந்தால் தோற்றத்தில் அழகு துள்ளும். இயற்கையாகவே பெண்கள் அழகுதான். அழகுக்கு மேலும் அழகு சேர்க்க சில டிப்ஸ்:

* பசுமையான மரம் செடி கொடிகளை அடிக்கடி பார்ப்பது, கண்ணுக்கு குளிர்ச்சி தரும் மனதுக்கும் மகிழ்ச்சி தரும்.
* கன்னம் ஒட்டிப் போய் இருக்கிறதா? தினமும் வாயில் தண்ணீர் ஊற்றி கன்னத்தின் உட்பகுதி விரியு மளவுக்கு நன்றாக கொப்பளியுங்கள்.
* ஆடை அணிவது முதலில் வசதிக்காக என்பது நினைவிருக்கட்டும். உடை உடலை கவ்விப் பிடிக்கும் அளவுக்கு இறுக்கமாக இருக்கவேண்டாம். ரிலாக்ஸாக இருக்கிறது என்று ஓவராக தொளதொளவும் வேண்டாம். கச்சிதமாக இருப்பதே அழகு.
* வேலைக்கு போகும் பெண்களுக்கு புடைவை கம்பீரமாக இருந்தாலும், இன்றைய சூழலில் அதை எப்போதுமே கட்ட முடிவதில்லை. சுடிதார், சல்வார் கமீஸ் சௌகரியமாக இருக்கிறது. புடைவை கட்ட முடியவில்லையே என்ற ஏக்கமின்றி அணியுங்கள்.
* வெளியூர் அல்லது உல்லாசப் பயணத்துக்கு ஜீன்ஸ் எப்போதும் வசதிதான். உடல் உழைப்பு அதிகம் தேவைப்படுகிற வேலை என்றாலும் ஜீன்ஸ் சௌகரியம், பணியிடத்தில் இடுப்பு அல்லது பின்புறம் முழுமையாக தெரியும் வகையிலான குட்டை ரொப்ஸை தவிர்ப்பது நல்லது.
* என்னதான் பொறுமையாக நடந்து கொண்டாலும் அதை மீறி ஆத்திரம் உண்டாக்கும் வகையில் யாராவது ஏதாவது பேசுவார்கள், செய்வார்கள். இது வீட்டுக்கும் அலுவலகத்துக்கும் பொதுவானது. ஆனால் நம்மால் கோபத்தை வெளிப்படுத்த முடியாத நிலை இருக்கும். இதனால் உணர்ச்சிகள் உள்ளேயே அடக்கப்பட்டு டென்ஷன் நிறைந்திருக்கும். இது மிகவும் ஆபத்தானது. இத்தகைய சந்தர்ப்பத்தில் என்னதான் முயன்றாலும் நம்மால் அழகாக காட்சியளிக்க முடியாது. தியானம், யோகாசனம், இசை கேட்பது, பாடுவது, நடனமாடுவது போன்ற ஏதாவது ஒரு பொழுது போக்கில் ஈடுபட்டு மன அழுத்தத்தை குறைக்க வேண்டும்.